
கல்கி

KALKI 26-10-75 75 காசு



ஆடி மறையும் சுடரையும்
அணையாச் சுடராக நீடூழி
வாழ்விக்கும் நேர்த்திமிக்க காமெரா.



ஆக்பா ஐஸோலி-II, நீங்கள் காத்திருந்து கையடையும் காமெரா. வெளிச்சமே இல்லையோ என்று நினைக்கத்தக்க இடத்திலும் படமெடுக்கக் கூடிய அளவுக்கு நுண்ணுணர்வு உள்ளது. 120 சைஸ் சுருள் பிலிமிலே பளிச்சென்ற 16 படங்களை எடுத்திட இதிலுள்ள நுட்ப நவீனச் சிறப்புக்கள் பலப்பல. பாருங்கள் இதோ அச் சிறப்புக்களில் சில:

- அழகிய வடிவம்.
- சக்தி மிகுந்த ஆக்பா கலர்—ஆக்னர் f 5.6 லென்ஸ்.
- மூன்று ஷட்டர் வேக கதிகள்: B, 1/30 & 1/100.
- 5 அபெர்ச்சர் துளையமைப்புகள்: 5.6, 8, 11, 16 மற்றும் 22.
- யூனிவர்ஸல் ஃப்ளாஷ் காண்டேக்ட் பின்.

ஆக்பா ஐஸோலி-II பற்றி மேலும் விவரமறிய, அருகிலுள்ள ஆக்பா-கேவார்ட் விற்பனை-யாளரிடம் விசாரிக்கவும். மகிழ்ச்சியோடு அவர் இலவசமாக இயக்கிக் காட்டுவார்.

Agfa ஆக்பா ஐஸோலி-II

ஆக்பா-படமெடுப்பீர் ஆசைதீர!

AGI ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்

SIMOES/AG/16C/75 TM



ராதா சில்க் எம்போரியம் மயிலாப்பூர், சென்னை-600 004
ராதா சில்க எம்போரியம் 29, கோவிந்த் மஹல்,
86-B, மரைன் டிரைவ பம்பாய்-400 002
சார்பு நிறுவனம்: ராதாசில்க்ஸ் தன் பில்டிங்ஸ் மவுண்ட் ரோடு, சென்னை-600002

EP-RASI-105


தீபாவளி வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு

ரிப்பேருக்காக அதிக செலவு செய்யாதீர்கள்

தவறாமல் உபயோகியுங்கள், முச்செயல் புரியும்

3 IN 1

த்ரீ-இன்-ஒன் ஆயில்



தையல் மெஷின், சைக்கிள், மின்விசிறி, பூட்டு, கீல் மற்றும் பல்வேறு வீட்டுப் பொருட்களைத் தவறாமல் மசகிட்டு பராமரிக்க வேண்டும். இல்லையேல், அவை துருப்பிடித்து பாழாகிவிடும்; தூசி அடைத்துக்கொள்வதால், தடங்கலின்றி அவை இயங்குவது பாதிக்கப்படும்.

எல்லா எண்ணைகளுமே ஒரே சீராகப் பலன் தருவதில்லை. த்ரீ-இன்-ஒன் ஆயில் தரமுயர்ந்த எண்ணை. அது 3 வழிகளில் செயலாற்றுகிறது.

✓ **மசகிடுகிறது**

—உங்கள் இயந்திரம் தடங்கலின்றி இயங்க உதவுகிறது.

✓ **சுத்தம் செய்கிறது**

—இது பிசுக்கை அகற்ற பிரத்தியேகத் திண்மையுடன் தயாரிக்கப்பட்டிருப்பதால், சீராகப் பரவி, தூசி அடைத்துக் கொள்ளாமல் தடுக்கிறது.

✓ **துருப்பிடிப்பதைத் தடுக்கிறது**

—இந்த எண்ணையில் மட்டுமே அலாதியான, துருவை எதிர்க்கும் பொருள் கலந்துள்ளது.

உங்கள் வீட்டிலுள்ள விலையுயர்ந்த பொருள்களைத் தவறாமல் சரியான மசகெண்ணை இட்டுப் பாதுகாத்திடுங்கள். த்ரீ-இன்-ஒன் ஆயில் உபயோகியுங்கள்.

த்ரீ-இன்-ஒன் ஆயில்

பாதுகாப்புக்கு—ஓர் இணையற்ற எண்ணை.

.® Licensed user of T. M.: Geoffrey Manners & Co. Ltd.

GM : T/1/75 A

எண்ணற்ற டிசைன்

எண்ணிய வண்ணம்



கறுமை...கறுமையிலும்
கறுமை...கறுமையோ கறுமை...
கறுமையில் கருத்தைக் கவரும்
பல சாயல்கள். உள்ளங்கவரும்
260 வகை வண்ணங்களின்,
டிசைன்களின் பேரணியிலே இது சிறு அணி.
இதுவரை இதைப் போன்ற வண்ண
வேலையின் கொஞ்சும்
எழிலில் எந்த
ஆலையும்
மிஞ்சியதில்லை.

மதுரை துணிகள்

மதுரை கோட்ஸ் தயாரிப்பு

122-TAM

IT'S HERE!

A Fabulous Festival Season PACKAGE DEAL! from HMV



Tel : 255081

HMV


Twin

RECORDS DEPOT

Kermani Bldg., Sir P. M. Road, Fort, Bombay-400 001

COUPON HOLDER IS ENTITLED TO AN EXTRA FREE L. P. ON A PURCHASE OF AN H. M. V. STEREO 666, OR STEREO 1212. THIS OFFER IS APART FROM THE FESTIVE PACHAGE DEAL.

கார் ஓட்டுவது சங்கடமாயுள்ளதா?
ஃபயர்ஸ்டோன் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறது.



ஸ்டீரிங்கைப் பிடித்ததும், வீதியில் நடப்போரின் மனநிலை, போக்குவரத்துச் சட்டங்கள், இரவில் காரோட்டுவது, இன்னும் பல விஷயங்களைக் கற்றறிந்திருக்க விரும்புகிறீர்கள். அதோடு கார் நீங்கள் சொல்லுகிறபடி கேட்க, நல்ல டயர்களும் வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்- ஃபயர்ஸ்டோன டயர்களைப் பொருத்தி, தைரியமாய்ச் செல்லுங்கள். ஃபயர்ஸ்டோன் டயர்களுக்குள்ள மூன்று சிறந்த தன்மைகளை அறிந்து பாராட்டுவீர்கள்.

- சாலையை அணைத்துச் செல்லும் தன்மை—வேகத்திலும், திருப்பத்திலும், நிறுத்துவதிலும் ஆபத்தில்லாதது.
- உறுதியான ஸ்பிரிங் தன்மை—கரடுமுரடான பாதைகளில் சமாளிக்கக் கூடியது.
- தனிப்பட்ட ட்ரிப்பிள்-ஸ்ட்ரெச்சுடன் அமைத்திருப்பதால் ஃபயர்ஸ்டோன் டயர்கள் வலுவாய் இருக்கின்றன; இதனால் நீடித்த உழைப்பு.

"புது ட்ரைவர்கள் கவனிக்க, ஃபயர்ஸ்டோன் தரும் குறிப்புகள்", நீங்கள் கேட்டு எழுதினால், விளக்கப் படங்களுடன் கூடிய சிறு புத்தகத்தை இலவசமாய் அனுப்புகிறோம். முகவரி. ஃபயர்ஸ்டோன் டயர் & ரப்பர் கம்பெனி ஆப் இந்தியா ப்ரைவேட் லிமிடெட், உட்ஸ் ரோட், மதராஸ் 600 002. இப் பத்திரிகையின் பெயரையும் குறிப்பிட்டு எழுதவும்.



ஃபயர்ஸ்டோன் டயர்கள்

இந்திய சாலைகள், மற்றும் போக்குவரத்து நிலைகளுக்கேற்ப இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன.

RADEUS FS-II



இளமை எழிலிற்கும்

இனிய தீபாவளி நினைவிற்கும்

லக்ஷ்மணஸா
பட்டுப் புடவைகள்

அபூர்வ ராகம்
அதிசய ராகம்
ஆனந்த ராகம்
கலர்கள்

நவரத்ஞ
டிசைன்

லக்ஷ்மணஸா
பட்டுப் புடவைகள்

RAE/911



P.B. லக்ஷ்மணஸா
& பிரதர்ஸ்
(ஏர்கண்டிஷண்ட்)
பனகல் பார்க், தி.நகர்,
சென்னை-17.
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.
தயாரிப்பு நிலையம்:
15, மேட்டுத் தெரு, காஞ்சிபுரம்.



துணிகளின்
முன்னிலாது
பாணிகளில்
மின்னுகிறது பின்னி
பின்னிக்கு
மாறுங்கள்
பாலியெஸ்டர்
இழை கலந்தவை
நாகரீகம், அத்துடன் நீடித்தும் உழைப்பவை-பின்னி மட்டுமே நமமுடன் இணைத்துத்தர முடியும்!
Interpub/BB/66/Tam



க்ளாக்ஸோ
ஸன்ஷைன்
குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு
சுபோத் — உடலிலே சுத்தமான சிவப்பு இரத்தம்.
சேம்-மற்றவர்களைவிட நல்ல வளர்ச்சி
விவேக் — பாலருந்தும் வேளையை ஆவலுடன் நோக்கு கிறான்.
சாலினி-வலுவுள்ள உறுதியான எலும்புகள்.
SUNSHINE
Glaxo
BUILDS BONNIE BABIES
STANDARDISED MILK FOOD, ESPECIALLY DESIGNED FOR INFANT FEEDING
ROLLER-DRIED
ENRICHED WITH VITAMINS
Interpub/GL/2/75/Tam
க்ளாக்ஸோ குழந்தை. கொழுகொழுவென்ற குழந்தை



கல்கி

ராக்ஷஸ
ஐப்பசி 9


அக்டோபர் 26
1975

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


அருகில் உள்ள இந்தக் கோலத்தில் வட்டங்களும், சதுரங்களும், முக்கோணங்களும் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அதில் உள்ள முக்கோணங்கள், சதுரங்கள், வட்டங்கள் எவ்வளவு என்று படத்தைப் பார்த்துச் சட்டென்று கூறமுடியுமா?

விடை:

மூன்று முக்கோணங்கள், நான்கு வட்டங்கள், மூன்று சதுரங்கள்.



✲




வீட்டு வாசலில் கோலம் போட்டது போலிருக்கிறதல்லவா? இதில் மொத்தம் எத்தனை முக்கோணங்கள் உள்ளன என்று கண்டு பிடிக்க முயன்று பாருங்கள், விடையைப் பார்க்காமல்!

விடை:

(நாற்பத்தாறு முக்கோணங்கள்)

பிரச்னைகள் தீர

ஸ்டேன்ஸ் டயர்



ஸ்டேன்ஸ் டயர்
ரீட்ரெடுகள் மிகவும்
நம்பகமானவை.

ஸ்டேன்ஸ் டயர், புகழ்
வாய்ந்த டயர்ஸோல்ஸ்
பிரத்தியேக அம்சங்களை
வழங்குகிறது —
தன்னிகரற்ற நீண்ட
உழைப்பு.

ஸ்டேன்ஸ் டயர் சிக்கன
மானதும் கூட — ஒரு
டயரை பலமுறை
ரீடிரெட் செய்ய, கூடுதல்
வாய்ப்பு — மிகக்

குறைவான செலவில்
பல்லாயிரம் மைல்கள்.

தாமதமின்றி, சேவை
பெற உடனே
அணுகவும்.

STANESTYRE

ஸ்டேன்ஸ்டயர்

அண்டு ரப்பர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

தொழிற்சாலைகள் :—

சென்னை, வேலூர்,
திருச்சி, சேலம், மதுரை,
தூத்துக்குடி, பெங்களூர்,
மங்களூர், விஜயவாடா,
செகந்திராபாத், எர்ணா
குளம், கோட்டயம்,
கன்னிக்கோட்டை,
திருச்சூர்.

MAC (B) ST-1/75

கல்கி

மலர் 35

இதழ் 13

ஆளுநர் கூறியதும் கூறாமல் விட்டதும்!

தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா தேசத்தில் உற்பத்தி அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து தொழிலதிபர்களுக்கு மிக அருமையான யோசனை கூறியிருக்கிறார் :

''வர்த்தகர்களுடன் இணைந்து செயலாற்றுங்கள். நாட்டிலே வியாபார வாய்ப்புக்கள் நிறைய இருப்பதை வர்த்தகர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். பண்டங்கள் வாங்குவோர் எண்ணிக்கையும் விற்பனையாகும் பொருள்களின் எண்ணிக்கையும் பெருகட்டும். அப்போது அதற்கேற்ப உற்பத்தியையும் நீங்கள் அதிகரிக்கலாம்.''

இவ்விதம் உற்பத்தி அதிகரிக்கும்போது பண்டங்களின் விலை குறையவும் வேண்டும் என்று திரு ஷா வலியுறுத்திக் கூறுகிறார். எப்படி குறையும் என்றாலோ, ''லாபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்'' என்கிறார்.

''குறைந்த விலையில் விற்பனையாகும்போது அதிகமான எண்ணிக்கையில் பண்டங்கள் விலை போகும். அதுவே லாபத்தைக் குறைத்துக் கொண்டதால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்டி விடும்!''

மிக நல்ல யோசனைதான். சந்தேகமேயில்லை. சுதந்திரப் பொருளாதாரம் நிலவும் மேல்நாடுகளில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு மாபெரும் வெற்றி கண்ட பொருளாதாரத் தத்துவம்தான். இந்த அடிப்படையில்தான் அத்தேசங்களில் திரும்பிய பக்கமெல்லாம், 'டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்' தோன்றின. 'குறைந்த லாபத்துக்கு அதிக விற்பனை, அதிக விற்பனைக்கு ஏற்ப அதிக உற்பத்தி' என்பதே தாரக மந்திரமாயிற்று.

ஆனால் திரு ஷா கூறத் தயங்கிய அல்லது கூற மறந்த மற்றோர் அம்சத்தை நாம் இங்கு ஞாபகப்படுத்துகிறோம்.

லாபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்; அதன் மூலம் அதிக விற்பனை கண்டு மொத்தத்தில் முன்னைக் காட்டிலும் அதிகப் பயனை அடையலாம் என்பது போலவே, வரிகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் பண்டங்களின் விற்பனையும் உற்பத்தியும் அதிகரிக்கும்; அரசாங்கத்தின் வருவாயும் கூடுதலாகுமேயன்றிக் குறையாது என்றும் சொல்லலாம். இதுவும் ஓர் அடிப்படையான பொருளாதாரக் கோட்பாடு.

ஒரு தீப்பெட்டி வாங்கினால் நாலைந்துவிதமான வரிகளைச் செலுத்துகிறோம். ஒரு கப் காப்பி சாப்பிட்டால் அப்படியே மூன்று நாலுவிதமான வரிகள். இப்படியே ஒவ்வொரு பண்டத்தின் மீதும், அதன் தயாரிப்பில் உபயோகமாகும் ஒவ்வொரு பொருள்மீதும் பலவித வரிகள், பல முனை வரிகள், மறைமுக வரிகள்.

இன்று மிக முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றமாகக் கருதப்படும் டெலிவிஷனை எடுத்துக் கொள்ளுங்கள். கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி டெலிவிஷன் நிலையங்களை ஏற்படுத்துவதன் நோக்கம் என்ன? அதை மக்கள் பரவலாகப் பார்த்துப் பயனடைய வேண்டும் என்பதுதானே ? கல்வி அறிவு பரவவும், குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரத்துக்கும், பசுமைப் புரட்சிக்கும், உழைப்பின் உயர்வை மக்கள் உணரச் செய்வதற்கும் டெலிவிஷன் சாதனம் உபயோகமாக வேண்டும் என்பதுதானே ?

ஆனால் ஒரு டெலிவிஷன் செட் விலை ரூபாய் ஐயாயிரம் என்னும்போது மேற்படி நோக்கம் எப்படி நிறைவேறும் ? இவ்விதம் விலை மிக அதிகமாக இருப்பதற்குப் பல முனை வரிகள் ஒரு முக்கிய காரணம் என்பதை அமைச்சர் சுக்லாவே ஒப்புக் கொண்டிருக்கிறார் அல்லவா ?

மற்றோர் உதாரணம்: மேல்நாடுகளில் பருத்தித் துணி ரொம்ப கிராக்கியாக இருக்கிறது என்பதற்காகவே செயற்கை நூலிழை கண்டுபிடித்தார்கள். அது மிக மலிவாகக் கிடைத்தது. மக்கள் மனமகிழ்ந்து தாராளமாக வாங்கினார்கள். உற்பத்தியும் அமோகமாகப் பெருகியது. ஆனால் நம் தேசத்திலோ செயற்கை

நூலிழைத் துணியாலான உடை ஆடம்பரப் பொருளாகி விட்டது. காரணம் அபரிமித மான வரிகள்தாம்.

இவ்வாறே மக்களின் அவசியத் தேவைகள் என மேல்நாடுகளில் கருதப்படும், சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார், ரேடியோ, பிரிஜிடைர் முதலானவை மீது இங்கே அபரிமிதமான வரிகள் விதிக்கப்படுவதால் இவை இங்கே ஆடம்பரப் பொருள்களாகிவிட்டன. நடுத்தர வர்க்கத்தினரின் வாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டதாகிவிடும்போது தேக்க நிலை, உற்பத்திக் குறைவு, தொழிலாளர்களின் தாற்காலிக வேலை நீக்கம் முதலியவை சங்கிலித் தொடர் போல் நிகழ்கின்றன.

தேசத்தில் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்டபோது இருவித நெருக்கடிகள் இருந்தன. ஒன்று அரசியல் ரீதியானது; மற்றது பொருளாதார ரீதியானது. அரசியல் ரீதியான நெருக்கடியை ஒருவாறு சமாளித்து வந்திருக்கும் ஸ்ரீமதி இந்திரா, பொருளாதார ரீதியான நெருக்கடியில் இன்னும் தீவிர கவனம் செலுத்துவார் என எதிர்பார்ப்போம்.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட நெருக்கடியிலிருந்து மீள ஒரே வழி வரிகளைக் கணிசமாகக் குறைப்பதுதான். அதிலிருந்து சங்கிலித் தொடராக விளையக்கூடிய நன்மைகள் :

சேமிப்பு அதிகரிக்கும், முதலீடு பெருகும், உற்பத்தி அதிகரிக்கும், வேலை வாய்ப்பு கூடுதலாகும்; மக்களின் வாங்கும் சக்தி பெருகும்; இதுவே உற்பத்தி மேலும் அதிகரிக்க வழி வகுக்கும். உற்பத்தியும் வியாபாரமும் பெருகி வரிகளைக் குறைத்ததால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய்க் குறைவை ஈடு கட்டிவிடும்.

இந்தச் சுபிட்ச நிலைக்கு ஸ்ரீமதி இந்திரா இன்றே அடிக்கல் நாட்டட்டும்.

அதிகாரிகளின் மெத்தனம்!

தினமலர் 12-10-75 நாளிதழில் வெளியாகியுள்ள செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது :

''கோவில்பட்டி பகுதியில் தீப்பெட்டிக்குரிய பண்ட்ரோல் பிரச்னையால் ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் கடந்த பத்து நாட்களாக வேலையின்றிப் பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

'' தீப்பெட்டிக்கு அக்டோபர் முதல் தேதி மீண்டும் பண்ட்ரோல் முறை அமுலுக்கு வந்தது. ஆனால் பண்ட்ரோல் சீட்டுக்கள் தீப்பெட்டி உற்பத்தியாளருக்கு விநியோகம் செய்யப்படவில்லை. பண்ட்ரோல் ஒட்டினால்தான் தீப்பெட்டியைப் பண்டலாகப் பேக்கிங் செய்ய முடியும்.

''இதனால் கடந்த பத்து நாட்களில் மத்திய அரசுக்குச் சுங்க வரி மூலம் கிடைக்க வேண்டிய ரூ. 38 லட்சம் நஷ்டமாகியிருக்கிறது!''

அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தையும் தொழிலாளருக்கு ஏற்படக்கூடிய தாங்கொணாக் கஷ்டத்தையும் நினையாமல் பத்து நாட்கள் வரை பேசாமலிருந்த அதிகாரிகளை என்னென்பது? தீப்பெட்டித் தொழிலில் சம்பந்தப்பட்டுள்ள சுமார் அறுபது பேர்கள் மதுரைக்குப் படையெடுத்த பின்னர் தான் சுங்க இலாகா அதிகாரிகள் அசைந்து கொடுத்திருக்கின்றனர் என்றால் இந்தப் போக்கை மெத்தனமென்பதா, ஆணவம் என்பதா ? எப்படி வர்ணிப்பது ?

இன்று நாட்டில் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதைக்கூட அறியாதவர்களா இவர்கள் ? முன்னெச்சரிக்கையுடன் ஏற்பாடுகளைக் கவனித்திருக்க வேண்டாமா ?

ராஜாஜி சிந்தனை

கண்ணன் காட்டும் வழி!

லோகாயதமான காரியங்களுக்கு இடையில் எப்படி நல்லவனாக விளங்குவது ? நேர்மையும் ஒழுக்கமும் மிக்க பாதையிலிருந்து பிறழாமல் எப்படி நடப்பது ?

உன்னுடைய காரியங்கள் வெளிப் பார்வைக்கு எப்படி இருந்தாலும் சரி, உன் பணிகள் எல்லாவற்றையும் ஆண்டவனுக்கே சமர்ப்பித்துவிடு. மனத்தைப் பக்குவப்படுத்துவதன் மூலம் அப்பணிகளை ஆண்டவனின் பொறுப்பாக்கிவிடு. சதா அவன் நினைவை உன் மனத்தில் வைத்துக் கொள்.

சதா அவனையே நினைத்துக் கொண்டிருப்பதில் சிரமம் தெரியலாம். நீ செய்யும் பணிகளிலும் கஷ்டம் எதிர்ப்படலாம். அவனைப் பற்றிச் சிந்தித்து, எல்லாக் காரியங்களையும் அவன் சார்பில் அவன் உதவியுடன் செய்வதான எண்ணத்துக்கு உன்னைப் பழக்கப்படுத்திக் கொள். அப்போது அவன் அருளை நீ பெறுவாய். எல்லாவித இடைஞ்சல்களையும் கஷ்டங்களையும் கடப்பதில் வெற்றி பெறுவாய்.

ஆண்டவன் அர்ஜுனனிடம் சொன்னது நம் எல்லோருக்காகவும்தான்:

''நீ என் நேசத்துக்கு உரியவன். நான் கற்றுத் தந்தபடி நடந்து கொள். உன்னை நான் காத்தருள்வேன்.

''ஒழுக்கம் தவறி நீ நடந்து கொண்டிருக்கலாம். பல தவறுகளைச் செய்திருக்கலாம். என்னிடம் வா, முழு நம்பிக்கையுடன் என்னைச் சரண் புகுந்தால் உன்னைச் சகல பாபங்களிலிருந்தும் மீட்பேன். இதில் உனக்குச் சந்தேகமே வேண்டாம்.''

- கீதா மண்டல் பிரகாரம், ரத்னகிரி, ஏப்ரல் 27, 1963


முதன்மந்திரி
ஆகும் நாள்
நெருங்கிவிட்டது!


MUSIC ACADEMY
CONFERENCE
மியூசிக்
அகடமி

உங்கள் குறைவும் என் நிறைவும்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

தன்னைக் கடைத்தேற்றிக் கொண்டவன் தான் மற்றவர்களைக் கடைத்தேற்ற முயற்சி பண்ணலாம் என்பது சாஸ்திரம். 'தீர்ணா: ஸ்வயம்... அன்யான் அபி தாரயந்த:' என்று ஆசார்யாள் சொல்லியிருக்கிறார். என்ன அர்த்தம் என்றால், முதலில் இவன் சம்ஸார சமுத்திரத்தைத் தாண்டியவனாக இருக்க வேண்டும். அப்போதுதான் மற்றவர்களையும் அப்படிக் கடத்துவிக்க இவனால் முடியும். இந்த நியாயப்படி, என் அநுஷ்டானங்களை எப்படி இருக்க வேண்டுமோ அப்படி என்னாலேயே மாற்றிக் கொள்ள முடியவில்லை என்றால், உங்களை மாற்றப் பார்க்கிறது நியாயமில்லை. எனக்கு அநுஷ்டான சக்தி வளர வளர நீங்களே என் வாக்குக்குக் கட்டுப்படுவீர்கள். 'பெரியவாள் சொன்னபடி செய்யவில்லையே, இதனால் நமக்குப் பாபமாச்சே' என்றோ, 'பெரியவாளுக்கு நாம் இந்த நன்றியை, கைமாற்றைச் செய்யவில்லையே' என்றோ உங்களுக்குத் தாபமே வேண்டாம். என்னுடைய குறைக்காக நீங்கள் நொந்து கொள்வது தப்பு என்று என் அபிப்பிராயம்.

என்னை நம்பிக் கொண்டிருக்கிறவர்கள் நீங்கள். நான் முழுக்கச் சரியாகாமல் என்னை நம்பிக்கொண்டிருக்கிறவர்களிடம் குறை சொல்லிப் பிரயோஜனமில்லை. சாஸ்திரத்தில் சொன்ன மாதிரி முதலில் நான் சரிப்பண்ணிக் கொள்ளப் பார்க்கிறேன். இதில் ஜெயித்தேனானால் அப்புறம் உங்களைச் சரிபண்ணுகிற காரியம். அது நான் பிரயத்தனப்பட்டுச் செய்ய வேண்டும் என்றுகூட இல்லாமல் தானாக உங்களுக்கு என்னிடம் இருக்கிற பக்தியினாலேயே நடந்துவிடும் — நான்மட்டும் பூரணமாகி விட்டால்.

பெரிய பெரிய மதாசாரியர்கள் தோன்றி, ஒவ்வொரு மதங்களை உண்டாக்கி, புரட்சி பண்ணி, அவரவர் காலத்திலேயே அநேக ஜனங்களை மகா சாந்தர்களாகவும், ஞானிகளாகவும், பக்தர்களாகவும், சீலர்களாகவும் செய்திருக்கிறார்கள் என்றால், இதற்கான பெரிய சக்தி அவர்களுக்கு எப்படி வந்தது? தாங்கள் சொன்ன மாதிரி அந்தந்த மத ஸ்தாபகரே அநுஷ்டித்துக் கொண்டிருந்தது தான் இவ்வளவு சக்திக்கும் காரணம். ஊருக்கு உபதேசம் என்றில்லாமல் அவர்களே வாழ்ந்து காட்டினார்கள். லோகத்தில் ஒரு பகுதி முழுவதும் உள்ள ஜனங்களும் மாறி மதஸ்தாபனம் ஏற்பட்டது. அந்த ஸ்தாபகர்களே போன பிறகுகூட, அதே மாதிரி அநுஷ்டாதாக்களாக இருக்கப்பட்டவர்கள் அந்தந்த மதத்தில் தோன்றிய போது, அவை லோகம் முழுக்க, மற்ற தேசங்களில் கூடப் பரவ ஆரம்பித்தன. வாழ்ந்து காட்டுவதுதான் வழியே தவிர, வாய் வார்த்தை இல்லை. அதனால் என் பேச்சைக் கேட்டுத் திருந்தாததற்காக நீங்கள் பட்ட வருத்தம், கைம்மாறு செய்யாத தோஷம் எல்லாமே அவசியமில்லாத விஷயங்கள்.

குறைப்பட்டுக் கொள்ளாமல், எல்லாம் நல்லதற்குத்தான் என்று, நடந்த மட்டும் கிடைத்த நன்மைகளை நினைத்துக்கொண்டு சந்தோஷமாக இருப்போம். ஏதோ ஒரு சந்தோஷம், திருப்தி கிடைத்ததால்தான் நீங்கள் எத்தனையோ அசௌகரியங்களுக்கு மத்தியில் இங்கே வந்து கொண்டிருந்தீர்கள். தற்கால சாந்தி என்றே வைத்துக் கொண்டாலும் பல சமாசாரங்களை உற்சாகத்தோடு கேட்டுச் சந்தோஷப்பட்டீர்கள். என்னைப் பொறுத்தமட்டில் நான் பல வருஷங்களாக அடைத்து வைத்திருந்த அபிப்பிராயங்களை வெளியே எடுத்துப் போடுவதற்கும், அதை உற்சாகத்தோடு அலசி அலசிச் சர்ச்சை பண்ணுவதற்கும், சந்தேகம் கேட்பதற்கும், ஆட்சேபம் எழுந்தால், 'இது இப்படி இருக்கலாமா, அப்படி இருக்கலாமா?' என்று ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கும் இந்த ஒன்றரை வருஷ உபந்நியாசம், கூட்டம், ரொம்ப உபகாரமாக இருந்திருக்கிறது. இதிலெல்லாம் நாம் பரஸ்பரம் சந்தோஷம் தான் படவேண்டுமே தவிரத் தாபப்பட்டுக் கொள்ள வேண்டியதில்லை. மொத்தத்தில் தினந்தோறும் எல்லோருக்கும் ஒரு நல்ல பிரவிருத்தி ஏற்பட்டதை நினைத்து இப்போது (பிரிவுபசாரம் என்று நடக்கிறபோது) சந்தோஷமாகவே இருப்போம்.

இங்கே வந்து இவ்வளவு காலம் இருந்ததற்கு எனக்குப் பல விஷயங்களில் தெளிவு ஏற்பட்டதே பிரயோஜனம் என்று நானும் நினைத்துக் கொள்கிறேன். அதோடு திருப்திப் பட்டுவிடாமல், என்னைச் சுத்தப்படுத்தவேண்டும் என்று பகவானைப் பிரார்த்தனை பண்ணிக் கொள்ளணும். எதையுமே பண்ண முடியாவிட்டாலும் அந்த நினைப்பு வந்தாலே விசேஷம் என்று சொன்னேன். அதே மாதிரி இந்தப் பிரார்த்தனையைக்கூட நான் இனிமேல் பண்ணுவேனோ, மாட்டேனோ, இப்போது, இந்த நிமிஷத்தில் அந்த நினைப்பாவது இருக்கிறது. அது எப்படி வந்தது என்றால், உங்களோடு பேச ஆரம்பித்ததால்தான். இதே போல் பல நாள் உபந்நியாசம் என்று உட்கார்ந்து கொண்டு ஆரம்பித்ததால்தான் எனக்கே பேசப் பேசப் பல நல்ல விஷயங்களில் மனசு போய்க் கொண்டு, புதிசு புதிசாக அபிப்பிராயங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. எனக்கு இந்த உபந்நியாச காலம் நல்ல பொழுதுபோக்காக இருந்தது. உபந்நியாசமே உங்களுடைய உற்சாகத்தினால் ஒவ்வொரு நாள் அர்த்த ராத்திரிக்கு அப்புறம் கூட நீண்டு போயிற்று. இதற்காக எனக்கு உபகாரமாயிருந்த உங்களுக்கெல்லாம் பகவான் அநுக்கிரகம் பண்ண வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன். (தொடரும்)

1959ல் சென்னை பிரிவுபசாரத்தில் அருளிய உரை.

படித்தோம், சொல்கிறோம்!

அன்பு மிகுந்த மதம்

'அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு' என்கிறார் வான்புகழ் வள்ளுவர். மனித வாழ்க்கையில் அன்பு என்னும் அரிய பிணைப்பு மட்டும் இல்லையென்றால், மனிதன் மனிதனாக வாழ முடியாது; மிருகத்தை விடக் கேவலமாக இருப்பான். அன்பு என்னும் அழியாத தத்துவம் பாசம், வாத்ஸல்யம், காதல், பிரேமை, பக்தி என்று சந்தர்ப்பத்துக்கு ஏற்பப் பல வடிவங்களை எடுக்கிறது.

எல்லா வகை அன்புகளிலும் இறைவன் மீது செலுத்தும் பக்திதான் அரியது; பெரியது; சாசுவதமானது.

சைவ சமயத்து நாயன்மார்களும், வைணவ சமயத்து ஆழ்வார்களும் பக்தி மேலீட்டில் இயற்றியுள்ள பாடல்கள் தமிழ் மொழியின் சிறப்பையும், உயர்வையும் எடுத்தியம்பும் அமர இலக்கியங்களாக விளங்குகின்றன.

மேற்படி பக்தி இலக்கியங்களில் முக்குளித்து இந்நூலாசிரியர் நமக்கு அரிய பெரிய கருத்துக்களை வாரி வழங்குகிறார்.

இறைவனையும், பிணைக்கவல்லது அன்பு என்னும் பலமான பிணைப்பு. இதை, சுவாமி ராமலிங்கப் பெருமான் "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே அன்பெனும் குடில் புகும் அரசே, அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே அன்பெனும் கரத்தமர் அமுதே" என்று சிவபரம்பொருளுக்கு இலக்கணம் வகுத்துக் காட்டி விளங்க வைத்தார். எல்லாம் வல்ல இறைவனை—குணம் குறி கடந்த கோமானாக, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவனாக, மனித முயற்சிகளுக்கெல்லாம் அப்பால் நின்று மனித இனத்தையே இயக்கும் ஒரு மாபெரும் சக்தியாக, விளங்கிக் கொள்ள முடியாத தத்துவமாக அறிந்து வழிபடுவது ஞான மார்க்கம். அது மிகவும் சிரமசாத்தியமானது; சாமானியர்களுக்கு எட்டாதது. ஆனால் இறைவனை, தாயாக, தந்தையாக, குழந்தையாக, தோழனாக, ஆண்டானாக, காதலனாக — அதாவது உலகியல் உறவு முறைகளாகத் தம்முடன் பிணைத்துக்கொண்டு வழிபடுவது மிகவும் சுலபமான வழி.

இந்த வழியின் அருமையை, பெருமையை, பல மேற்கோள்களுடன் எடுத்தியம்புகிறது இந்நூல். "அன்பு மிகுந்த மதம்" என்ற நூலின் பெயர் மிகவும் பொருத்தமானது.

— ஸோமாஸ்

ஆசிரியர்: அ. வெ. சுப்பிரமணியன்; பிரசுரம்: கலைஞன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை — 17; விலை: ரூ. 10.

அ. வெ. சுப்பிரமணியம்





அசோகமித்திரன்

கண்ணாடி மேலட்டை.



காலமும் ஐந்து குழந்தைகளும்

சமீப காலத்தில் எழுத்துலகில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. மனிதனை உயர்த்த உணர்ச்சிகளுக்குத் தூண்டும் சிறுகதைகள் மட்டுமின்றிக் கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு ஆளாக்கும் கதைகளும் எழுதலாம்; எழுத வேண்டும்; அவையும் இலக்கியமாக மதிக்கப்பட வேண்டும் என்று. இன்றென்று சர்வ சாதாரண உப்புச் சப்பற்ற அன்றாட நிகழ்ச்சிகளைக்கூடப் பொருளின்றியே எழுதிப் பதித்து விட வேண்டும் என்ற ஆர்வம். அதாவது வாழ்க்கையை அப்படியே தத்ரூபமாகப் பிரதிபலித்துக் காட்டுகிறார்களாம்! இந்த நியலிஸம், எக்ஸிஸ்டென்ஷலிஸம் எல்லாம் பல சமயங்களில் வெறும் அறுவைதான்!

திரு அசோகமித்திரன் பின்னால் குறிப்பிடப்பட்ட எழுத்தாளர் வகையைச் சேர்ந்தவர். எனினும், இவர் சில சமயம் தம்மை

யும் அறியாமல் நல்ல கதை எழுதிவிடுகிறார். அப்படிப்பட்ட கதைகளில் ஒன்று 'புலிக் கலைஞன்'.

இரண்டு கையாலாகாத ஜென்மங்களை— மோதவிட்டு, உயர்ந்த மனிதப் பண்பைக் கடைந்தெடுத்துக் கொடுக்கும்போது, இக் கதையை எழுதியவர் அசோகமித்திரனு என்று தோன்றுகிறது.

வேலையில்லாத ஒரு சினிமா ஸ்டுடியோவில் சர்மா கதை இலாக்காவில் ஒரு புள்ளியாக இருந்தார். அவருக்கு ஏதோ வேஷம் வாங் கித் தருவதில் செல்வாக்கு 'இருப்பதாக நினைத்து, பஞ்சத்திலும் பட்டினியிலும் வாடி வதங்கும் புலிவேஷக்காரர் அவரிடம் தம் திறமைகளையெல்லாம் காட்டிவிட்டு 'ரோல்' கேட்டு நிற்கிறான். ''ரோல்'' என்பது அவ் வளவு சுலபமாகக் கொடுக்கக் கூடியதா ? சர்மா தம் கையாலாகாத நிலையைக் கண்டு



கௌசிகன்

துக்கப்படுகிறார். இருந்தாலும் சர்மா, தம் ஜேபியிலிருந்தது, மற்ற நண்பர்களிடம் இருந் தது எல்லாம் சேர்த்தார். இரண்டு ரூபாய் தேறிற்று. அதை அவனிடம் கொடுத்து காண்டீனில் டிபன் பண்ணச் சொல்லுகிறார். அந்த ஏழை ''வேண்டாம்'' என்கிறான். ''ரோல் வாங்கித் தாங்க ஐயா !'' என்று அவன் அழுது கொண்டே சொல்வதும், சர்மா கோபமடைவதும், காதர் பணம் பெற்றுக் கொள்வதும், சர்மா பின்னர் இதமாகப் பேசு வதும் . மனிதப் பண்பை மிக நன்றாகத் தொட்டுக் காட்டுவன.

காந்தியைப் பற்றி அவர் பெயரிலேயே ஒரு கதை. கோட்ஸேக்குத் தம்பியாக ஒரு பாத்திரத்தைப் படைத்து வழங்குகிறார். ''காந்தியைப் போல் ஓர் அயோக்கியன் மனித சரித்திரத்திலேயே பிறந்ததில்லை. அவனைப் போல் ஒரு மனித இன விரோதி செயல் பட்டதேயில்லை. இன்று சோவியத்காரர் களும் தமக்குச் சௌகரியமாக இருக்கிறது என்று காந்தி பஜனை செய்யலாம். ஆனால் அவனைப் போன்ற ஒரு பாட்டாளி வர்க்கச் சத்துரு உலகத்தில் தோன்றியதே இல்லை '' என்று காந்தி இறந்து சில ஆண்டுகளுக்குப்

பிறகே தோன்றிய இளைஞன் சக்கைப் போடா கப் பேசுகிறான்.

இவனுடைய பேச்சுக்களைக் கேட்கும் நண்பன் மனம் குழம்புகிறான் ! இந்தக் கதை எதற்காக எழுதப்பட்டது என்று நாமும் குழம்புகிறோம்.

அசோகமித்திரன் சில சமயங்களில் ஆசிரி யர் கூற்றாகச் சில கருத்துக்களை உதிர்க்கப் பார்ப்பார். வாக்கியம் எங்கோ ஆரம்பித்து, பல சுழல்கள் யாத்து, பல அந்தரடி சாக சங்கள் புரிந்து எங்கோ போய் நிற்கும். அவ்வாக்கியத்தைப் படித்துவிட்டு ஆசிரியர் என்ன சொல்ல வருகிறார் என்று புரிந்து கொள்வதற்குள் போதும் போதுமென்றாகி விடுகிறது ! - எஸ். வி. எஸ்.

பிரசுரம்: கலைஞன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை 600017, விலை: ரூ. 7.50.

கண்ணாடி.

இந்த நவீனத்தின் ஆசிரியர் ஸ்ரீ பி. கேசவ் தேவ் மலையாள இலக்கியத்தில் தமக் கென்று ஒரு நிலையான இடம் பெற்றவர். இலக்கியத்தைக் 'காலக் கண்ணாடி' என்று கொண்டால், இந்த நவீனத்தின் பகைப்புல மும் 1940ஆம் ஆண்டு நிற்கும். ஆனால் வெளி யானது 1961ம் ஆண்டில் காலம் கடந்து. எனவே, இதற்குச் சூடான வரவேற்பு மலையாள மொழியிலேயே கிடைக்கவில்லை.

''இலக்கியம் என்னுடைய பிரச்னை அல்ல, வாழ்க்கைதான் என்னுடைய பிரச்னை. வாழ்க்கையில் இன்பத்தைப் பெருக்க வேண் டும், வேதனையைக் குறைக்க வேண்டும். இது தான் என் இறுதி இலட்சியம். இதற்காக நான் எழுதுவது மட்டுமல்ல, சொற்பொழி வாற்றுவதும் . உண்டு. ஒரு தெளிவான சமூகக் குறிக்கோள் உள்ள எழுத்தாளன் நான். இந்தச் சமூக உறவுதான் என்னை எழுத வைக்கிறது.''

இப்படிக் கூறும் ஸ்ரீ கேசவ் தேவினுடைய 'கண்ணாடி'யை அறிமுகம் செய்து வைக்கும் முன்னுரையில் ஸ்ரீ டி. என். ஜெயசந்திரன் கூறுகிறார் :

''தகழி சிவசங்கர பிள்ளையின் 'ஏணிப் படிகள்', எம். டி. வாசுதேவநாயரின் 'நாலு கெட்டு', பாறப்புறத்தின் 'அரநாழிக நேரம்' போன்ற நூல்கள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்படும்பொழுது அவைகளுடன் இணைக்கப்பட வேண்டிய கேசவ தேவின் படைப்பு நிச்சயமாகக் 'கண்ணாடி' அல்ல என்பது என் கருத்து......''

இந்தக் கருத்தே வாசகர்களின் கருத்தாக வும் அமையும். என்றாலும் கேசவ் தேவ், 'பாமர மக்களின் இலக்கிய ஆசிரியர்' என்று புகழ் பெற்றவர். பல நல்ல நூல்களுக்கு ஆசிரியர். முழுக்க முழுக்கக் கேரளத்து மண் வாசனை அடிக்க எழுதியவர்.

இவரது இலக்கியத்தை அறிமுகம் செய்து வைக்கும் முகமாக மலையாள நாவல் இலக்கிய வரலாற்றையே சிறந்த திறனுய்வுடன் ஸ்ரீ டி.

என். ஜெயச்சந்திரன் தமது முன்னுரையில் வடித்துள்ளார்.

ஸ்ரீ பி. பாலகிருஷ்ண மேனனின் தமிழாக்கம் சில இடங்களில் தமிழுக்கும் மலையாள மணம் கூட்டுகிறது. நெருடல் இல்லாத நல்ல மொழிபெயர்ப்பு. —ரா.வீ.

நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டிருக்கும் இந்த நவீனம் கிடைக்குமிடம்: பாரி நிலையம், 1–59, பிராட்வே, சென்னை – 1, விலை: 6.50.

சுழிக் காற்று

ரயிலில் வந்து இறங்கும் கதாநாயகன், நாயகியை வரவேற்கக் காத்திருக்கிறது ஒரு பெட்டி. பெட்டிக்குள் பிணம்! பெட்டியில் மேலே உள்ள பெயர் சேகர். சேகரோ பிரபல துப்பறியும் நிபுணர்!

இப்படி எடுத்த எடுப்பிலேயே மர்மத்துக்கு மேல் மர்மமாகச் சுழிக் காற்று வீசுகிறது! துப்பறியும் நிபுணன் சேகருக்குப் பிரச்னைக்கு மேல் பிரச்னை.

கொலைக்கு மேல் கொலை. மர்மத்துக்கு மேல் மர்மம் 'சுழிக்காற்று' நாவலின் தனி விசேஷம். கடைசி வரையில் மர்ம முடிச்சுக்கள் அம்பலமாகாமல் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரமும் போலீஸ் துப்பறியும் நிபுணர் துரைசாமியும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும்போது, மஞ்சுளாவின் காதலன் துப்பறியும் நிபுணன் சேகர் மர்ம முடிச்சுக்களை விடுவிக்கிறான். மஞ்சுளாவின் சொத்தை மீட்டுத் தந்து அவளது காதலையும் பெறுகிறான்.

இந்த மர்ம நாவலுக்கு முன்னுரை வழங்கிய திரு கோமதி சுவாமிநாதன் கூறியிருப்பது போல, ''கதாநாயகனும், நாயகியும் சாதாரண பாஸஞ்சர் ரயிலில் சாமுண்டிக் கோட்டை ஸ்டேஷன் வரை பிரயாணம் செய்வதாகக் கதை ஆரம்பித்தாலும், அவர்கள் அந்த ஸ்டேஷனில் இறங்கிய உடனேயே நிகழ்ச்சிகள் எக்ஸ்பிரஸ் வேகத்தில் ஓடத் தொடங்குகின்றன. அவர்கள் முல்லை வாசல் பங்களாவை அடைந்த உடனேயோ நிகழ்ச்சிகள் ஜெட் விமானங்களாகவே மாறி விடுகின்றன!''

திரு கோமதி ஸ்வாமிநாதன் ஆங்கில மர்ம நாவல்களை ராக்கெட் வேகத்தில் படித்துக் குவிப்பவர் என்பது அவரை நெருக்கமாக அறிந்தவர்களுக்குத் தெரியும். அவர் சுழிக் காற்றுக்கு வாழ்த்துக் கூறி விட்டாரெனில் வேறு என்ன வேண்டும்!

சுழிக் காற்று மூலம் 'கௌசிகன்' மர்மக் கதை உலகில் நல்ல புகழ் ஈட்டியிருக்கிறார். கல்கியில் தொடர்கதையாகப் பிரசுரமான நாவலைப் புத்தக உருவில் வெளியிட்டிருப்பவர்கள்: வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை–17 விலை: ரூ. 10. — பி.எஸ்.எம்.

வரிவிகடன்

விகடம் என்பதற்குப் பின்வரும் அர்த்தங்கள் அகராதியில் உள்ளன. வேறுபாடு, ஒரு வகைக் கூத்து, பயங்கரமானது, கரடுமுரடு, நகைப்புக்கு இடமாத பரப்பு, அழகு, இகைப்பு, மிகுதி, ஒரு நரகம்! இந்தப் பத்து அர்த்தங்களில் வரி விகடன் என்று தமது பத்திரிகைக்குப் பெயர் வைத்தவர்கள் அழகு என்ற அர்த்தத்தை மட்டும் நிச்சயமாக மனத்தில் கொண்டிருக்கமாட்டார்கள் என நினைக்கிறோம். வரியை அழகானது என்று யார் தான் வர்ணிப்பார்கள்?

நாளைக்கொரு வரி, தினத்துக்கு ஒரு சட்டம் என்ற நிலையில் நமது பொருளாதாரம் இங்கு கட்டுப்படுத்தப்படும்போது பல்வேறு வரிகளைப் பற்றியும் புதிய மாற்றங்கள் குறித்தும் விளக்கமாகத் தெரிந்துகொள்ள ஒரு பத்திரிகை அவசியம்தான். அத்தகைய ஒரு பத்திரிகை தமிழில் வருவது அதிசயமும்கூட. பல்வேறு பொருளாதாரப் பிரச்னைகளைச் சகலருக்கும் புரிகிற மாதிரி எளிதாக விளக்கியிருப்பது வரவேற்புக்குரியது என்பதுடன் இத்தகைய ஒரு பத்திரிகையை நடத்த ஆசிரியர் திரு பி. வைத்தியநாதனுக்குத் தகுதியும் இருப்பதைக் குறிப்பிட வேண்டும். ஆண்டுச் சந்தா ரூ. 15.

மூன்று நிபுணர்களை ஆசிரியர்களாய்க் கொண்டு ''**வரிச் சட்டங்கள்**'' என்ற நூலையும் இதே நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. வருமான வரி செலுத்துபவர்கள், விவசாயிகள், வியாபாரிகள் போன்ற சகலருக்கும் உதவக்கூடிய நூல். அரசுக்கு வரி செலுத்துவதன் மூலம் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமையை நினைவுபடுத்துவதுடன் எந்த அளவில் செலுத்தினால் போதும், என்னென்ன சலுகைகள் உள்ளன என்பதையும் உணர்த்துகிறது இந்தப் புத்தகம். விலை: ரூ. 20

பிரசுரம்: இன்டக்ரேட்டட் என்டர்பிரைஸஸ், கும்பகோணம் - 612001. — கி. ரா.

'ஸ்போர்ட்ஸ் சினி'

விளையாட்டுக் கலைகள், சினிமா ஆகியவற்றுக்காகவே தனியாக ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள ஒரு புதிய மாதாந்திரப் பத்திரிகையை அறிமுகப்படுத்துகிறோம். இதன் ஆசிரியர் திரு பி. என். சுந்தரேசன் 'ஹிந்து' பத்திரிகையில் நீண்ட நெடுங் காலம் கிரிக்கெட் விளையாட்டு விமர்சகராக இருந்து பிரசித்தமானவர். பெங்களூரிலிருந்து வெளியாகும் இந்த மாதப் பத்திரிகை ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வாரத்தில் வெளிவருகிறது.

இரண்டாம் இதழில் இந்திய லெக்ஸ்பின்னர் சந்திரசேகர் பேட்டியும், பௌவர் குமாரின் கிரிக்கெட் அனுபவமும் சுவாரசியமானவை. காப்டன் பட்டோடியின் சாதனைகளை பி. என். சுந்தரேசன் நினைவுகூருகிறார். அடுத்த காப்டன் யார்? பெரிய பிரச்னை. இந்தப் பிரச்னையைக் கிரிக்கெட் ஆட்டக்காரர் ஜெயசிம்மாவே அலசுகிறார். கிரிக்கெட் தவிர பல்வேறு விளையாட்டு விமர்சனக் கட்டுரைகள் படங்களுடன் இடம் பெற்றுள்ளன. சினிமாப் பகுதியும் ஏராளமான படங்களுடன் ஜிலுஜிலுப்பூட்டுகிறது. - குண்டுமணி

பிரசுரம்: Sports Cine, Single Copy Rs. 2-50, 8. Second Cross Road, Shanti Nagar, Bangaloe - 560027.

சிவகாமியின் சபதம்

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

வாதாபி தகனம்

மாமல்லச் சக்கரவர்த்தி தமது கூடாரத்தின் வாசலில் நின்று மாபெரும் பல்லவ சைனியம் வாதாபிக் கோட்டை மதிலை நெருங்கிச் செல்லும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். தமது வாழ்நாளிலேயே மிக முக்கியமான சம்பவம் தம் கண் முன்னால் நடைபெறத் தொடங்கியிருக்கிறது என்பதை அவருடைய அந்தராத்மா அவருக்குச் சொல்லிக் கொண்டிருந்தது. அன்றிரவு நடக்கப் போகும் மகத்தான கோட்டைத் தாக்குதலின் காரணமாக ஆயிரமாயிரம் வருஷங்கள் வரையில் அவருடைய பெயர் 'வாதாபி கொண்ட நரசிம்மன்' என்று சரித்திரத்தில் பிரசித்தி பெற்று விளங்கப் போகிறது.

ஆனால், அவர் எந்த நோக்கம் காரணமாக இந்த மகத்தான சைனியத்தைத் திரட்டிக் கொண்டு வந்தாரோ, அந்த நோக்கம் நிறைவேறுமா? சிவகாமிக்கு அவர் கொடுத்த வாக்குறுதி அன்றிரவோ மறுநாளோ நிறைவேறுவது நிச்சயம். மூன்று நாளைக்குள்ளே வாதாபிக் கோட்டை தகர்ந்து வாதாபி நகரம் பற்றி எரிவது நிச்சயம். ஆனால், அதைப் பார்ப்பதற்குச் சிவகாமி உயிரோடு இருப்பாளா? ஆஹா! அந்தப் பாவி உயிரோடு இருந்து வாதாபி எரியும் காட்சியைப் பார்த்துவிட்டு வெளியேறி வந்தால் தான் என்ன? அவர்களுடைய வாழ்க்கை பழைய ஆனந்த வாழ்க்கையாகப் போகிறதா? ஒருநாளும் இல்லை. அவர்களுடைய மனோராஜ்யமெல்லாம் ஒரு சிதைந்த கனவாகிவிட்டது. ஒருவேளை அந்தச் சிதைந்த கனவிலே சிவகாமி சில சமயம் இன்பத்தைக் காணக்கூடும். தமக்கோ அதுகூடக் கிடையாது. தமது பிற்கால வாழ்க்கை ஒரு வறண்ட பாலைவனமாகவே இருக்கும். அந்த எல்லையற்ற நெடிய பாலைவனத்தில் கானல் நீரைத் தவிர வேறு குளிர்ச்சியான காட்சியே தென்படப் போவதில்லை!

இவ்விதச் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த மாமல்லர் தம்மிடம் முடிவாக விடைபெற்றுச் சென்ற பரஞ்சோதி, மீண்டும் வருவதைக் கண்டு சிறிது வியப்புற்றவராய், அவர் தம் அருகில் நெருங்கியதும், "சேனாதிபதி! ஏதாவது புதிய விசேஷம் உண்டா?" என்று கேட்டார்.

"ஆம், பிரபு! சத்ருக்னன் திரும்பி வந்தான்" என்று சேனாதிபதி கூறி, அவன் சொன்ன விஷயங்களைச் சுருக்கமாகத் தெரிவித்தார்.

அமரர் கல்கி



எல்லாவற்றையும் கேட்ட மாமல்லர், ''இந்தச் செய்திகள் காரணமாக நமது யோசனையில் ஏதேனும் மாறுதல் உண்டா ?'' என்று கேட்டார்.

''விசேஷமாக ஒன்றுமில்லை, பிரபு! ஆனால், கோட்டைத் தாக்குதலைக் கூடிய விரைவில் நடத்த வேண்டிய அவசியம் அதிகமாகிறது. எதிரில் பாயும் புலியைக் காட்டிலும் காலடியில் நெளிந்து ஓடும் பாம்பு அதிக அபாயம் உள்ளதல்லவா?''

''அப்படியானால் காபாலிகையின் கதையை நீர் நம்புகிறீரா? உமக்கு யுத்தச் சீட்டு அனுப்பியது புலிகேசி இல்லை, நாகநந்தி பிக்ஷுதான் என்று நினைக்கிறீரா? நானும் உங்களுடனே கோட்டைக்குள் இப்போதே வந்து விடட்டுமா ?''

''வேண்டாம், பிரபு! தாங்கள் இங்கே இருப்பதுதான் உசிதம் என்று கருதுகிறேன்.''

எது எப்படிப் போனாலும் இந்தத் தடவை தளபதி பரஞ்சோதி சிவகாமி தேவியைத் தாமே முதலில் சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தார். முன் தடவை மாமல்லர் சிவகாமியைச் சந்தித்துப் பேசியதன் விபரீத விளைவை அவர் மறந்து விடவேயில்லை. அம்மாதிரி இம்முறை ஏற்படாமல் தடுப்பது தம் கடமையெனக் கருதினார்.

மாமல்லரும் பல காரணங்களினால் சிவகாமியை உடனே சந்திக்க விரும்பவில்லை. எனவே, அவர் பின்வருமாறு கூறினார் :

''அப்படியே ஆகட்டும், சேனாதிபதி! ஒரு விஷயத்தை மறந்து விட வேண்டாம். புலியைவிடப் பாம்பு கொடியது என்று நீர் கூறியது முற்றும் உண்மை. நாகநந்தி விஷயத்தில் தாட்சிண்யமே பார்க்க வேண்டாம். அந்தக் கள்ள பிக்ஷு உயிரோடிருக்கும் வரையில் இந்த வாழ்க்கையில் நம் இருவருக்கும் நிம்மதி கிடையாது. இதை மறக்கமாட்டீர் அல்லவா?''

''மறக்கமாட்டேன், பிரபு!''

இதற்குப் பிறகும் சேனாதிபதி தயங்கி நிற்பதைக் கண்டு மாமல்லர், ''இன்னும் ஏதாவது சொல்லுவதற்கு இருக்கிறதா ?'' என்றார்.

பரஞ்சோதி, ''ஆம், இன்னும் ஒரே ஒரு விஷயம். மன்னிக்க வேண்டும். வாதாபி நகரை எரித்துவிட வேண்டும் என்ற கட்டளையில் மாறுதல் ஒன்றும் இல்லையே?'' என்று கேட்டார்.



''சேனாதிபதி! போதும்! இந்த நிமிஷமே நான் கோட்டை வாசலுக்குப் போகிறேன். இனி உம்மை நம்பிப் பயனில்லை. நீர் திருநீறு தரித்து ருத்ராட்சம் அணிந்து சிவ பஜனை செய்யச் செல்லும்!''

''பிரபு! திருநீறு தரித்த பெருமான் திரிபுரத்தையே எரித்தார். இந்த வாதாபியை எரிப்பது அவருக்குப் பெரிய காரியம் இல்லை. இன்று இரவே வாதாபி நகரம் பற்றி எரிவதைக் காண்பீர்கள்.''

''அப்படியானால் ஏன் இந்தத் தயக்கம், கேள்வி எல்லாம்?''

''தங்களுடைய விருப்பத்தை நிச்சயமாகத் தெரிந்து கொள்வதற்காகத்தான். கோட்டைக்குள் புகுந்த பிறகு நகரை எரிக்க வேண்டும் என்று தாங்கள் கட்டளையிட்டீர்கள். அதை மாற்றிச் செய்ய விரும்புகிறேன். முதலில், வாதாபி தகனம் ஆரம்பமாகப் போகிறது. வெளியிலிருந்தபடியே நெருப்புப் பந்தங்களை நகருக்குள் எறியும்படி கட்டளையிடப் போகிறேன்.''

''இதற்கு என்ன அவசியம்?''

''நகரத்துக்குள்ளேயிருந்து நம் வீரர்கள் கொண்டு வரும் பொருள்களில் பாதி அவரவர்களுக்கே சொந்தம் என்று சொல்லியிருக்கிறேன். ஆகையால், நகரம் பற்றி எரிவதைக் காணும்போது நம் வீரர்கள் வேகம் ஒன்றுக்குப் பத்து மடங்காகும். பிரபு! நாளைச் சூரியோதயத்துக்குள்ளே நான் இந்தக் கோட்டைக்குள் பிரவேசித்தாகவேண்டும். அதற்குமேல் தாமதித்தால் சிவகாமி தேவியைக் காப்பாற்றுவது அசாத்தியமாகி விடலாம். சூரியோதயமாகும் சமயத்தில் தாங்களும் ஆயத்தமாயிருக்க வேண்டும். இன்று ஓரிரவு தூங்காமல் வாதாபி தகனத்





தைப் பார்த்துக் கொண்டிருங்கள்!'' என்று சொல்லிவிட்டுச் சக்கரவர்த்தியின் மறுமொழிக்குக் காத்திராமல் சேனாதிபதி விரைந்து சென்றார்.

சேனாதிபதி சொன்னபடியே அன்றிரவு நடுநிசி நேரத்தில் வாதாபி தகனம் ஆரம்பமாயிற்று. கோட்டை மதிலைச் சுற்றி ஆங்காங்கு பெரிய உயரமான தூக்கு மரங்கள் நிறுத்தப்பட்டன. அந்த மரங்களின் மீது ஏறி நின்று அதற்கென்று பயிற்சி செய்யப்பட்டிருந்த பல்லவ வீரர்கள் கொளுத்தப்பட்ட தீப்பந்தங்களையும் கந்தக வெடிகளையும் நகருக்குள் வீசி எறிந்தார்கள். தீப்பந்தங்கள் போகும்போதே காற்றினால் ஜுவாலை விட்டுக் கொண்டு சென்று விழுந்த இடங்களில் எல்லாம் குபீர் குபீர் என்று தீ மூட்டின. கந்தக வெடிகள் ஆங்காங்கு வெடித்து நெருப்பைப் பரப்பின.

அன்றிரவு மூன்றாம் ஜாமத்துக்குள் இலட்சோப இலட்சம் ஜனங்கள் வசித்த அந்த வாதாபி மாநகரத்தின் நாற்புறமும் தீ மூண்டு எரியத் தொடங்கியது.

அக்கினி தேவனுக்கு உதவி செய்ய வாயு பகவானும் வந்து சேர்ந்தார். மூண்டடித்த காற்றினால் தீயின் ஜுவாலைகள் குதித்துக் குதித்துப் பாய்ந்து வாதாபி நகரின் மாட மாளிகைகள் கூடகோபுரங்கள் எல்லாவற்றையும் விரைந்து விழுங்கத் தொடங்கின.

தீயோடு புகையும் படலம் படலமாக எழுந்து எட்டுத் திசைகளையும் வானத்தையும் மறைத்தது.

அதே சமயத்தில் பல்லவ பாண்டிய வீரர்கள் கோட்டையை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு மதில் மீது ஏறிக் குதிக்க முயன்றார்கள். மதில் மீதிருந்த சளுக்க வீரர்கள் அவர்களைத் தடுத்தார்கள். அவர்களுடைய வாளாலும் வேலாலும் அம்புகளாலும் தாக்கப்பட்டு ஆயிரமாயிரம் தமிழ் வீரர்கள் உயிரிழந்து விழுந்தார்கள். ஆயினும் சமுத்திரத்தில் பெருங் காற்று அடிக்கும் போது ஓர் அலைக்குப் பின்னால் இன்னோர் அலை இடைவிடாமல் வந்து கரையை மோதுவதுபோலத் தமிழ் வீரர்கள் மேலும் மேலும் வந்து கொண்டேயிருந்தார்கள்.

அதோடு கோட்டையின் நாலுபுறத்து வாசல்களும் பலமாகத் தாக்கப்பட்டன. ஏக காலத்தில் பத்துப் பன்னிரண்டு யானைகள் தங்கள் துதிக்கையினால் பிரம்மாண்டமான மரத் தூண்களையும் இரும்புலக்கைகளையும் தூக்கி அதிவேகமாகக் கோட்டை வாசல் கதவுகளின் மீது மோதிய போது அந்தக் கதவுகள் படார் படார் என்று தெறித்து முறிந்து விழுந்தன.

சேனாதிபதி பரஞ்சோதி சக்கரவர்த்தியிடம் கூறிய வண்ணமே அன்றிரவு நாலாம் ஜாமம் முடியும் தறுவாயில் வாதாபிக் கோட்டை வாசல்களைத் திறந்து பல்லவ வீரர்கள் ஏற்கனவே எரியத் தொடங்கியிருந்த வாதாபி நகருக்குள் பிரவேசித்தார்கள்.

கோட்டை மதிலைத் தாக்கிய பல்லவ வீரர்களும் நாற்புறத்திலும் உள்ளே குதிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

வாதாபி நகரம் தீக்கிரையாகும் இந்தச் சரித்திரப் பிரசித்திபெற்ற சம்பவத்தைக் கீழ் வானத்தில் உதித்திருந்த விடிவெள்ளி கண் கொட்டாமல் பார்த்து வியந்து கொண்டிருந்தது.

(தொடரும்)




சவரன் பரிசு!
தீபாவளி போனஸாக
எங்கள் ஜவுளி மாளிகையில்
நீங்கள் வாங்கும்
ஒவ்வொரு ரூ 100/= க்கும்
அதிர்ஷ்ட பரிசு கூப்பன் உண்டு!
கூப்பன்களை குலுக்கி
தீபாவளியன்று
சவரன் பரிசு
வழங்குகிறோம்!
உங்கள்
அபிமான
புதிய ஜவுளிக்கடை!
சுப லக்ஷ்மி
வண்ணத் துணிகளின் வசந்த மாளிகை
17-C, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-600017

ஒரு மனிதன் தான் இன்புற்றிருக்க, தன்னைச் சுற்றியுள்ளவர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்று எண்ணுவான் என்றால், அவனை நல்லிதயம் படைத்த மனிதன் என்று சொல்லுவோம். ஆனால் துன்பமே வாழ்க்கை அமைப்பாகிவிட்ட ஒருவர், தன் அபாக்கியங்களை யெல்லாம் சமாதானத்துடன் ஏற்று வேதனையில் உழலும்போதும், தன்னைச்

ஒதுங்க நினைத்த உலகத்தை அணைத்தவர்

சார்ந்த அனைவரின் நல்வாழ்விலும் அக்கறையும் ஆனந்தமும் கொள்ளுவார் என்றால், அவரை மனித தெய்வமாகவே நம் மனம் போற்றுகிறது. தாய் மாமன், ரங்காச்சாரி அவர்கள் அப்படிப்பட்ட ஒருவர்.

அவருக்கு இரண்டு வயதாகி இருக்கும் போதே அவர் தந்தை காலமாகி விட்டார். அப்புறம் எவ்வளவோ இன்னல்களுக்கிடையே அவர் படித்துப் பள்ளி இறுதி ஆண்டை முடித்தார். உபகாரச் சம்பளம் கிடைத்தும் கலாசாலையில் சேரத் தாயின் பரிதாப நிலை இடம் கொடுக்காததால் உத்தியோகத்தில் சேர்ந்தார். ஏதோ சாதாரணத் தேமல் என்று எண்ணியதை மரண தண்டனையை விடக் கொடிய தீர்ப்பாகத் தொழுநோய் என்று டாக்டர் கூறியபோது ... உறவினர்களால் ஒதுக்கப்பட்ட அவர் வேலையையும் ராஜிநாமாச் செய்ய வேண்டி வந்தது. பம்பாயிலிருந்து சென்னை நோக்கி வந்த அ கவாளி பரைத் தற்கொலையிலிருந்து காப்பாற்றியவர் அவர் தாய். அவர் திறமையை நன்கு உணர்ந்த பிரபல வக்கீல் ஒருவருக்குக் குமாஸ்தாவானார். எழும்பூர்ப் பகுதியில் பத்துக் குடித்தனங்கள் வாழ்ந்த ஒரு வீட்டில் ஒதுக்குப்புறமான அறையில் குடியேறினார்.

நோய் வெளியில் தெரியும் அளவுக்குப் பரவாத நிலையில் அவருக்குப் பெண் கொடுக்க முன் வந்தவர்களிடம் அவர் தம்மைப் பற்றிய உண்மையைக் கூறியதோடு நில்லாமல், அந்தப் பெண்ணுக்கு வேறு இடங்களில், தமக்குத் தெரிந்த பையன்களைப் பார்க்கும்படி சிபாரிசும் செய்து அனுப்பினாராம். காவி உடுத்தாத துறவி போல் வாழ்ந்த அவர் தேவைகள் மிகச் சொற்பம். ஆனால் இந்தப் பற்றின்மைத் துறவு மனப்பான்மை எல்லாம் தம்வரைதான். தம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் உறவினர்களுக்கும், அவர்களுடைய ஆயிரம் ஆசாபாசங்களையும் பரிவுடன் உணர்ந்து, அவர்களுடைய இன்னல்களுக்குக் கைகொடுத்துத் தம்மாலான உதவியை அளிக்கத் தவறவே மாட்டார்.

அடுத்த போர்ஷனிலுள்ள பையனுக்குப் பரீட்சைக்குப் பணம் கட்ட அன்றுதான் கடைசி நாள். மறு பேச்சின்றிப் பணம் கிடைத்து விடுகிறது. மருந்துக்காக வைத்திருந்த பணம். "பையனோட பரீட்சை ரொம்ப முக்கியம் அல்லவா ..." என்று தம் தாய்க்குச் சமாதானம் சொல்லுவார் தனயன்.

அவருடைய கருணைக்குப் பாத்திரமான இரு பூனைகளைப் பற்றி முக்கியமாகச் சொல்லி ஆக வேண்டும். அந்தப் பூனைகளின் தாய் அவை இரு மாதக் குட்டிகளாக இருந்த போது வீதியில் கார் அடியில் அகப்பட்டு இறந்து விட்டது. முற்றத்தில் அநாதரவாகக்



கிடந்த அந்தக் குட்டிகளைப் பாலூட்டிப் பேரன்போடு வளர்த்தார் மாமா.

ஒரு நாள் மாலை என் மாமா வந்ததும் பூனைகள் என்றுமில்லாத வழக்கமாக அவர் காலைச் சுற்றிச் சுற்றி வந்து கத்திக் கூப்பாடு போட்டன. என் பாட்டி விளக்கினாள்: "இமௌர்னு குழந்தைகள் (நாங்கள்) வரவே தயிர் போதவில்லை. அதனால் இவைகளுக்கு இன்னிக்குக் கடையில் வாங்கிய மோரில் சாதம் போட்டேன். சாப்பிடாமல் உன் கிட்டே கோள் சொல்லியாகிறது." நாங்கள் விழுந்து விழுந்து சிரித்தோம், அந்தப் பூனைகளின் சாமர்த்தியத்தைக் கண்டு. மாமாவோ அவைகளை வெகு நேரம் சமாதானப்படுத்தி, தமக்காகத் தாய் வைத்திருந்த தயிர் சாதத்தை அவைகளுக்குப் போடச் செய்து, தாம் மோர் சாதம் சாப்பிட்டார்.

அந்தத் தெய்வ மனிதர், ஒரு நாள் ஆண்டவனைத் தொழுதபடி தாயின் மடியில் உயிர் நீத்தார். சோக மயமான உயர்ந்த கவிதையைப் படிக்கும்போது ஏற்படுமே, இன்பம்—துன்பம் — இரண்டும் கலந்த ஒரு பரவசம் — என் மாமா ரங்காச்சாரி அவர்களைப் பற்றி நினைக்கையில், அத்தகைய மெய் சிலிர்ப்புத் தான் என் மனத்தில் ஏற்படுகிறது.

— ராஜம் பார்த்தசாரதி


இந்தியாவிலும். அயல்நாடுகளிலும்
இப்பொழுது அதிகமான அளவில்
தேவைப்படுகிறது இந்த
தேங்காய் நார்
Ennor
இயந்திரங்கள் —
தேங்காய் நார்
தயாரிக்க.
Crusher

குறைந்த முதலீட்டில் சிறந்த முறையில் தேங்காய் நார் தயாரிக்க இயந்திரங்கள் இதோ!


தேங்காய் நார் தயாரிக்க இந்தியாவில் இதுவரை சரியான இயந்திரங்கள் இல்லாமல் இருந்தது. அதிக அளவு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய முடியாமல் இருந்தது.


இப்பொழுது இதற்குத் தேவையான எல்லா இயந்திரங்களையும் நாங்கள் தயாரித்துள்ளோம். இதன் மூலம் நீங்கள் குறுகிய காலத்தில் அதிக அளவு தேங்காய் நார் உற்பத்தி செய்யலாம். அதிக அளவு ஏற்றுமதியின் மூலம் அதிக வருவாய் தேடிக் கொள்ளலாம்...
உங்களுக்கும் உங்கள் தேசத்திற்கும்!


இதுவரை தென் இந்தியாவில் 12 இடங்களில் எங்கள் என்னுர் இயந்திரங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன


மற்ற விபரங்களுக்கும் சரியான ஆலோசனைக்கும் எங்களை அணுகுக!

Manufacturers:
BHARAT MOTORS
5, Greames Road, Madras-600006
Phone: 86204 Cable: FIBRO-FLEX


Turbo Cleaner


Defibering Machine


Revolving Screen


Fibre Baling Press



பொன்னியின் புதல்வர்

சுந்தா



கிரிப்ஸ் தூது

4. மெய்க் காவல்

சொலல் வல்லன், சோர்விலன்,
அஞ்சான்; அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது
— திருக்குறள்

மகாத்மா காந்தியிடமிருந்து 'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு கடிதம் வந்தது — கல்கிப் பத்திரிகை தொடங்கிய புதிதில். அந்த ஆங்கிலக் கடிதத்திற்குக் கல்கியே செய்து வெளியிட்ட தமிழாக்கம்:

சேவாக்கிராம்
(மார்க்கம்) வார்தா
10—9—41

அன்புள்ள கிருஷ்ணமூர்த்தி,

தலைவர்கள் கூடித் தீர்க்காலோசனை செய்து, தங்கள் முடிவான அபிப்பிராயத்தை வெளியிடவேண்டும் என்னும் உங்களுடைய யோசனை எனக்குப் பிடித்திருக்கிறது. பாமர ஜனங்களின் அபிப்பிராயம் என்று சில விஷயங்களைச் சொல்லி இருக்கிறீர்கள். பாமர ஜனங்கள் வாயில்லாத ஊமைகள் அல்லவா? என்னைப் பொறுத்தவரையில் இயந்திரத்தைப் போல் நான் ஏதும் செய்ய இயலாது. கடவுளின் விருப்பம் நிறைவேறும்.

(ஒப்பம்) எம். கே. காந்தி

''அஹிம்சையா? அரசியலா?'' என்ற மகுடத்துடன் ஒரு தலையங்கத்தைக் கல்கி எழுதி, தமது பத்திரிகையின் மூன்றாவது இதழில் வெளியிட்டிருந்தார். அப்படி வெளியிட்டதோடு, அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை மகாத்மா காந்திக்கு அனுப்பி யிருந்தார். அதற்குப் பதிலே, மேலே கண்ட கடிதம்.

நாலு முழுப் பக்கங்களில் வெளியாகி யிருந்த அந்தத் தலையங்கத்தின் சாரம் இதுதான்:

''யுத்தம் முடியும்வரையில் சுயராஜ்யம் என்ற பேச்சே எடுக்க வேண்டாம்; தற்சமயம் உலகத்துக்கு அஹிம்ஸையைப் போதிப்பதே இந்தியாவின் தர்மம்'' என்று மகாத்மா சொல்கிறார்.

சுயராஜ்யம் பெறுவதற்கு இந்த யுத்த சமயம்தான் சரியான சமயம் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ''இந்த நெருக்கடியில் நாம் போராடி சுயராஜ்யம் வாங்காவிடில், வேறெப்போது வாங்கப் போகிறோம்'' என்று நிராசை அடைகிறார்கள்...

உண்மையான தேசபக்தர்களும் தேசத் தலைவர்களும் இப்போதைய அரசியல் நிலைமையைப் பற்றித் தீர்க்காலோசனை செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். தங்களுடைய மனத்தில் உள்ளவற்றைப் பயப்படாமல் பகிரங்கமாகச் சொல்ல வேண்டும்; பொதுஜனங்களின் மனத்தையும் அறிய வேண்டும். அவர்களுடைய முடிவான கருத்தை மகாத்மாஜியிடம் சென்று தெரிவிக்க வேண்டும்.

''மகாத்மாஜி! ஜனங்களின் மனோபாவம் இப்படி இருக்கிறது. அவர்களை நீங்கள் சோதித்தாகி விட்டது. அஹிம்ஸைக்கு விரோதமின்றி இத்தனை காலமும் நடந்திருக்கிறார்கள். ஆகையால், சுயராஜ்யப் போரைத் தீவிரமாக ஆரம்பித்து நடத்துங்கள்'' என்று கேட்க வேண்டும். அதற்கு அவர் ஒருவேளை சம்மதிக்காவிட்டால் ''அஹிம்சைப் போரை நீங்கள் நடத்துங்கள்; அதற்குப் பாதகம் நேராமல் சுயராஜ்யப் போரை நாங்கள் நடத்துகிறோம்'' என்று கேட்க வேண்டும்.

இவ்வாறு கேட்பதில் எவ்வித தவறும் இல்லை என்பது நமது உறுதி. இதனால் மகாத்மாவுக்கு வருத்தம் உண்டாக்குவோம் என்ற பயத்துக்கு இடமில்லை. மனத்தில் உள்ளதை உள்ளபடி சொன்னால் காந்தியடிகள் மகிழ்ச்சி அடைவாரே தவிர ஒருநாளும் வருத்தப்பட மாட்டார்.

1—9—41 தேதியில் வெளியான இந்தத் தலையங்கத்தை, பல தமிழ்ப் பத்திரிகைகள் வன்மையாய்த் தாக்கி எழுதின. அந்தத் தாக்குதலுக்கு உடனேயே பதில் வெட்டுக் கொடுக்கவில்லை கல்கி. ஐந்து மாதம் பொறுத்திருந்து,

நாம் முன்னெட்டி யோசித்துச் சொன்னதைப் போலவே, காங்கிரஸ் பெருந் தலைவர்களும் யோசித்துத் தீர்மானம் செய்ததைக் கண்ட பிறகுதான், அந்தத் தாக்குதலை அவர் குறிப்பிட்டும் எதிர்த்தும் எழுதினார்.

...இன்று தேசமே ஒப்புக் கொண்டிருக்கும் ஒரு கொள்கையை ஐந்து மாதங்களுக்கு முன்பு நாம் வெளியிட்டபோது ஒரு பெரிய அதிசயத்தைக் கண்டோம். நமது சகோதரத் தமிழ்ப் பத்திரிகைகள் பல நம்மை மூர்த்தண்யமாய்த் தாக்கின. காங்கிரசுக்கும் காந்திஜிக்கும் நாம் மகத்தான துரோகத்தைச் செய்து விட்டதாகக் கூறின.

தேசத் தொண்டில் ஈடுபட்டுத் தியாகங்கள் செய்த பத்திரிகாசிரியர்கள் நம்மைக் கண்டித்து எழுதியதில் நமக்குக் குறையே கிடையாது. அத்தகையவர்களுடைய அபிப்பிராயங்களை மரியாதையுடன் கவனித்து நம்மிடம் பிசகு இருந்தால் திருத்திக் கொள்ளச் சித்தமாய் இருக்கிறோம்.

ஆனால், தேசத்துக்காகத் துரும்பை எடுத்துப் போட்டு அறியாதவர்களும், கதர் கூட முழுதும் அணியாதவர்களும் நாம் காந்திஜிக்குத் துரோகம் செய்து விட்டதாக எழுதிய போதுதான் நமக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

அடக்கு முறைக்குப் பயந்து விளக்கெண்ணெய்க் கொள்கையை எழுத வேண்டும் என்று ஆசிரியரை வற்புறுத்திய பத்திரிகையில் — சத்தியாக்கிரகத்தில் ஈடுபடத் துணிந்த குற்றத்துக்காக ஆசிரியரை வேலையை விட்டுப் போகச் சொன்ன பத்திரிகையில் — நமது யோசனை கண்டிக்கப் பட்டிருந்தது. காங்கிரஸ் திட்டத்தில் மாறுதல் வேண்டும் என்று சொல்வதே பெரிய பாவம், காந்திஜிக்குத் துரோகம் என்று பொருள்பட எழுதியிருந்தது!

(கல்கி இதழ் 16-1-42)


□ இவர்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை ''ஒழுங்கற்ற நடவடிக்கை'' என்றார் ''கல்கி''.

□ ராஜாஜிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யவென்றே தொடங்கப்பட்ட துணைக் கல்கி.

□ மகாத்மா காந்தியிடமிருந்து கல்கி ஆசிரியருக்கு ஒரு கடிதம் வந்தது.

□ ராஜாஜிக்கு எதிர்ப் பக்கத்தில் எஸ். சத்தியமூர்த்தியும், கே. காமராஜும் முக்கியமானவர்கள்.





SEVAGRAM
WARDHA (C. P.)

10-9-44

Dear Krishnamurthy,
I like your suggestion that leaders should meet & deliver their considered judgment. You put words into the mouth of the masses. Are they not dumb? As to your suggestion I can do nothing mechanically. Gods will be done.
Yours sincerely,
M.K.Gandhi

இனி, காங்கிரஸ் கொள்கையில் உண்டான மாறுதல் என்ன என்பதைப் பார்ப்போம்.

ராஜாஜியைத் தொடர்ந்து, காங்கிரஸ் அக்கிராசனர் அபுல்கலாம் ஆஸாத், சர்தார் படேல், நேரு போன்ற பெருந் தலைவர்களும் விடுதலை அடைந்தார்கள். ரஷ்யாவை ஜெர்மனி தாக்கியதை அடுத்தும், ஜப்பானும் போர் தொடுத்து விட்ட காரணத்தா



கல்கி

— வாரம் ஒரு முறை —

காந்திஜியும் - ராஜாஜியும்





லும், யுத்த நிலைமை அடியோடு மாறிப் போனதை உணர்ந்த அவர்கள், தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காக, பிரிட்டிஷ் யுத்த முயற்சிக்கு ஆதரவு தர வேண்டியது அவசியம் என்பதைக் கண்டார்கள். அவர்களில், காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள், 1942 ஜனவரி முற்பாதியில் பர்தோலியில் கூடி, ஏழு நாட்கள் ஆலோசனை நடத்தி, புதிய கொள்கை முறை ஒன்றை வகுத்து ஒரு தீர்மானத்தை இயற்றினார்கள். அதன்படி, காங்கிரஸ் மகா சபையின் பேரால் இனி அரசியல் சத்தியாக்கிரகம் நடக்காது; தனிப்பட்ட முறையில், அஹிம்சா தர்மத்தின்படி மகாத்மா காந்தி யுத்த எதிர்ப்பு சத்தியாக்கிரகம் செய்யலாம்; அதற்கென அவர் காங்கிரஸ் தலைமைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப் படுவார்.

ஜப்பான் மூலம் இந்தியாவுக்கு நேரக் கூடிய ஆபத்தை எண்ணி, ராஜாஜி கூறிய யோசனையை ஏற்று நிறைவேறிய தீர்மானம் அது. பின்னர் அதை வர்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் ஒப்புக் கொண்டது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் சுதந்திர உரிமையை ஒப்புக் கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்தால், யுத்த முயற்சிகளில் காங்கிரஸ் ஒத்துழைப்பதற்கு அத் தீர்மானம் வழி செய்தது.

பிரிட்டிஷ் அரசாங்கம் சிறிதுகாலம் மெத்தனமாய் இருந்து விட்டு, ஜப்பானியப் படைகள் மலேயாவை ஆக்கிரமித்துக் கொண்டு பர்மாவில் முன்னேறிக் கொண்டிருக்கையில், ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் என்ற ராஜதந்திரியை இந்தியத் தலைவர்களுடன் சமரசம் பேசுவதற்காக மார்ச்சு மாதத்தில் அனுப்பி வைத்தது. அவர் கொண்டு வந்த திட்டத்தில் (1) யுத்தத்துக்குப் பிறகு இந்தியாவுக்கு முழு சுதந்திரம் என்ற வாக்குறுதி இருந்தது. (2) மாகாணங்களுக்குப் பிரிந்து போகும் உரிமை (அதாவது பாகிஸ்தான் கோரிக்கை) உண்டு என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. (3) இந்தியாவின் பாதுகாப்பு பிரிட்டனின் பொறுப்பு; ஆயினும் தேசிய அரசாங்கம் ஒன்று அமைந்து சில யுத்த முயற்சிகளுக்கு உதவி செய்யலாம்.

இந்த மூன்றின் அடிப்படையில், வெவ்வேறு கட்சிகளின் தலைவர்களுடன் கிரிப்ஸ் நடத்திய பேச்சு வார்த்தைகளில், தோல்வியே கண்டபலனாயிற்று.

அந்தத் தோல்விக்குப் பொறுப்பாளிகள், கிரிப்ஸும் அவருக்கு யோசனை சொன்ன அதிகார வர்க்கத்தாரும் மட்டும் அல்ல, காங்கிரஸ் தலைவர்களுந்தான் என்று ஏப்ரல் 16-ம் தேதிய கல்கி இதழில் அதன் ஆசிரியர் குறை கூறி எழுதினார். கிரிப்ஸுடன் பேச்சு வார்த்தை நடத்திய அபுல்கலாம் ஆஸாதும் ஜவாஹர்லால் நேருவும், தம்முடன் ராஜாஜியைச் சேர்த்துக் கொள்ளாதது ஒரு தவறு என்றார். அந்தத் தூதரின் வருகையை முன்னிட்டு, முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னாவுடன் காங்கிரஸ் தலைவர்கள் பேசி, பாகிஸ்தான் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ளாததை இன்னொரு தவறாகக் குறிப்பிட்டார்.

கிரிப்ஸ் தூதின் தோல்வியை அடுத்துத் தேசம் முழுவதிலும் மிக்க பரபரப்பை உண்டாக்கிய காரியம் ஒன்றை ராஜாஜி செய்தார். சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியினரின் கூட்டம் ஒன்றை நடத்தி, இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றினார். அவற்றின் சாரமாவது:

1) முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கையைக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டு இந்தியாவில் தேசிய சர்க்கார் ஏற்படுவதைச் சாத்தியமாகச் செய்ய வேண்டும்.

2) அகில இந்தியாவின் நிலைமை எப்படி இருந்தபோதிலும், சென்னை மாகாணத்தில் காங்கிரஸும் முஸ்லிம் லீகும் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்க அனுமதிக்க வேண்டும்.

இந்த இரண்டு தீர்மானங்களும், அலகாபாத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தாக்கலாகி, ஒரே அடியாக நிராகரிக்கப்பட்டன.

இவற்றில் முதல் தீர்மானத்தை ஏற்றிருந்தால் இரண்டாவது தீர்மானம் அடிபட்டுப் போயிருக்கும். முதல் தீர்மானத்தில் அடங்கிய பாகிஸ்தான் யோசனையைப் பின்னர் அதே அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர்கள் ஒப்புக் கொள்ளும்படியாகத்தான் நேர்ந்தது; அதை ஒப்புக் கொள்ளாவிடில் சுயராஜ்யம் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது.

பின்னால் நடந்தது இருக்க, அப்போது, அந்தத் தீர்மானங்கள் வெளியானதும் என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம். ஹிந்து மகா சபையினர் எல்லோரின் கண்டனத்துக்கும், காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோரின் எதிர்ப்புக்கும் அவை இலக்காயின. வட நாட்டிலும், தென்னாட்டிலும்,

---



''உங்க நாடகத்திலே ஒரு வேஷம் கொடுங்க, வேஷம் கொடுங்கன்னு உயிரை வாங்குவானே, என்ன வேஷம் கொடுத்தே அவனுக்கு?''

''சத்தியவான் - சாவித்திரி நாடகத்திலே யமன் வேஷம்!'' - உ. வி.

நெஞ்சை அள்ளும்

"நீரஞ்சனி"

சுபத்தை அளிக்கும்

"ஸ்பாஷினி"

சந்தோஷத்தை அளிக்கும்

"ஸஜ்னி"

புதிய டிசைன்கள்.



10%

தீபாவளி முடிய
பட்டுப்
புடவைகளுக்கும்
மற்ற எல்லா
ரகங்களுக்கும்
தள்ளுபடி உண்டு

சாரதாஸ்

பட்டுப் புடவைகளில் புதிய டிசைன்களுக்கு புகழ் பெற்ற பெயர்

தீபாவளி முடிய
ஞாயிற்றுக்
கிழமைகளிலும்
விடுமுறை
நாட்களிலும் விற்பனை உண்டு

தன்பில்டிங்
மவுண்ட்ரோடு
சென்னை 2
போன் : 87177

N. S. B. ரோடு
திருச்சி - 2
போன்: 7077



"என் தோழியை ஒரு லட்சாதிபதியாக்கினேன்!"

அவள் செய்ததெல்லாம் அடுத்த வீட்டுத் தோழியை ஒரு பிரஸ்டீஜ் வாங்கச்செய்ததுதான். உடன் அவள் பிரஸ்டீஜ் பயன்படுத்தும் 15 லட்சம் குடும்பத் தலைவிகளில் ஒருத்தியாகிவிட்டாள்—இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் பிரஷர்குக்கர் இது.

எல்லாம் இப்படித்தான் தொடங்கியது. ஒரு நாள் திருமதி ரங்காச்சாரியின் பிரஸ்டீஜ் குக்கரை திருமதி ஹர்பான்ஸ் கௌர் பயன்படுத்தி பார்த்தார். இந்தியா முழுவதும் இதுபோல நிகழ்ச்சிகள் தினம் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

இதற்கு காரணம் பிரஷர் குக்கர் எதுவானாலும் நேரமும், எரிபொருளும் மிச்சம்தான். ஆனால் பிரஸ்டீஜ் மிக அதிகமான சிக்கனத்தை சாத்தியமாக்குகிறது.

அதன் கொள்ளளவு அதிகம். அதனால் அதிக அளவு உணவைச் சமைக்க முடிகிறது. பிரஸ்டீஜ் தயாரிக்கப்பயன்படும் தனிரக அலுமினிய உலோகக் கலவை உஷ்ணத்தை விரைவாகவும் சமப்பரவலாகவும் பரப்புகிறது.

பிரஸ்டீஜின் சிறப்பு அம்சங்கள்: மூடுவதற்கு வசதியுள்ள மூடி, மூன்று கட்டங்களில் அமைத்துள்ள பிடியுடன் கூடிய ரப்பர் பாதுகாப்பு அடைப்பான், ISI தரமுத்திரை மற்றும் நாடு முழுவதும் விற்பனை-சர்வீஸ் நிலையங்கள்.



Prestige

பிரஸ்டீஜ் விற்பனையிலும் மக்கள் விருப்பத்திலும் இன்று இந்தியாவில் உயர்ந்து நிற்கும் பிரஷர்குக்கர்.

கவனிக்கவும்: பிரஸ்டீஜின் அடிப்புறம் அதி-கனமானது—நீண்ட ஆயுள், சீரான உஷ்ணத்தை அளிக்கிறது.

Prestige PREETT

டிடி. (பிரைவேட்) லிமிடெட்
பெங்களூர் 560 016

SAA/TTP/1785

ஆஸ்பத்திரியில் :

''அந்தப் பக்கத்துக் கட்டிலிலே படுத்திருக்கிற ஆளு நம்ப கூடப் பேச மாட்டாரும்! என்ன அவன் மேலே புத்தம் புதுக் கார் ஏறிச்சாம். நம்ப மேலே ஓட்டைக் கார்தானே ஏறிச்சு! கர்வம்!

- உ. வி.

தலைவர்களும், மக்களும், பத்திரிகைக்காரர்களும், ஜப்பானியப் படையெடுப்பு அபாயத்தையும் மறந்து, அவைகளைப் பற்றியே விவாதித்தார்கள். வடநாட்டுக்காரர்கள் பொதுவாகப் பாகிஸ்தான் யோசனையை மட்டுமே தாக்கினார்கள்; தென்னாட்டவரில் ஒரு பகுதியினரோ, ராஜாஜியையும் சேர்த்துத் தாக்கினார்கள். இரண்டாவது தீர்மானத்தைச் சுட்டிக் காட்டி ''ராஜாஜிக்குப் பதவி மோகம்'' என்று ஏசினார்கள். தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்கள், ராஜாஜி கட்சி — எதிர்க் கட்சி என்று இரண்டு சாரியாகப் பிரிந்தார்கள்.

ராஜாஜியின் பக்கத்தில் இருந்தவர்களில் சிலர்: டாக்டர் சுப்பராயன், ராதாபாய் சுப்பராயன், கே. சந்தானம், டாக்டர் ராஜன், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கோயமுத்தூர் சுப்ரி, புலுசு சாம்பமூர்த்தி.

எதிர்ப் பக்கத்தில், எஸ். சத்தியமூர்த்தியும், அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராய் இருந்த கே. காமராஜும் முக்கியமானவர்கள்.

பல ஊர்களுக்கு ராஜாஜி சென்று, தமது யோசனையை விளக்கிப் பொதுக் கூட்டங்களில் பேசினார். சில கூட்டங்களில் விஷமிகள் கல்லெறிந்தார்கள்; மணலை அள்ளிப் போட்டார்கள். பம்பாய்க் கூட்டம் ஒன்றில், அவருடைய முகத்தில் ஒருவன் தார் எண்ணெயை வீசினான். எதையும் அவர் பொருட்படுத்தாமல் தமது பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார். தமது தீர்மானங்களை அகில இந்தியக் காரியக் கமிட்டி நிராகரித்த பிறகும், தம் கருத்தை வெளியிடத் தமக்கு உரிமை உண்டு என்ற கொள்கையுடன் பிரசாரம் செய்தார்.

அந்நிலைமையில், தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியினர் பதினொரு பேர், ஜூன் இறுதியில் காமராஜின் தலைமையில் குற்றாலத்திலே கூடி, ராஜாஜியின் பாகிஸ்தான் பிரசாரம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய செயலாகும் என்ற காரணத்தால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தார்கள். அதுபற்றிய நோட்டீஸ் வந்த மறு கணமே, தம் பதவிகள் எல்லாவற்றையும் ராஜாஜி உதறித் தள்ளினார்—சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவி, சட்டசபை உறுப்பினர் பதவி, கட்சியின் சாதாரண உறுப்பினர் பதவி அனைத்தையும். எற்கனவே அவர், அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து விலகி யிருந்தார்.

''ஒழுங்கற்ற நடவடிக்கை'' என்பதாக, ராஜாஜி மீது தொடுத்த ஒழுங்கு நடவடிக்கையைக் கல்கி குறிப்பிட்டுக் கண்டித்தார். அவருடைய ராஜி நாமாவை, ''தியாகத்தின் சிகரம்'' என வர்ணித்தார்.

இந்தத் தியாகத்தினால் ராஜாஜியின் மேன்மை முன்னெப்போதைக் காட்டிலும் துல்லியமாகத் துலங்குகிறது. அவருடைய மாசு மறுவற்ற தேசத் தொண்டு இன்னும் மெருகு பெற்று விளங்குகிறது. தமிழ் நாடே இன்று அவருடைய தியாகப் பெருமையினால் பூரித்திருக்கிறது...

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நிர்வாகிகள் தங்கள் அற்பத் தனமான காரியத்தினால், காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கே இழுக்கையும், அபகீர்த்தியையும், அவமானத்தையும் தேடி விட்டார்கள்.

தமிழ் நாட்டுக் காங்கிரசுக்கு ஏற்பட்டு விட்ட இந்த இழுக்கானது, ராஜாஜியின் ஒப்பற்ற தியாக அக்னியின் மூலமாகத்தான் போக வேண்டும். (கல்கி இதழ் 16-7-42)

பாகிஸ்தான் விவாதத்தின் தொடக்கம் முதல், தமது பத்திரிகையில் இதழுக்கு இதழ், பக்கம் பக்கமாய் ராஜாஜியின் கட்சியை ஆதரித்தும் எதிர்க் கட்சியை முறியடித்தும் கல்கி எழுதித் தள்ளினார். ஒவ்வொன்றிலும் தமது பிரசார வித்தையையும், வாதத் திறமையையும், எழுத்தின் வேகத்தையும் காட்டினார். ''கல்கியைப் படிக்காதீர்கள்'' என்று எதிர்க்கட்சி மேடைப் பேச்சாளர்கள் தடை உத்தரவு போட்டார்கள். ஆனால், அப்படிப் போட்டவர்களும் அவர்களைக் கேட்டவர்களும் அதைப் படித்துக் கொண்டேதான் இருந்தார்கள்.

பிரதானப் பிரசாரத்துடன், ஒரு பக்கவாட்டுத் தாக்குதலாக, சில பத்திரிகைகளுடன் சொற்போர்களும் தொடுத்தார் கல்கி. அவற்றில், மிக்க பரபரப்பை ஊட்டியதும், பலருடைய நினைவில் வெகு காலம் நிலைத்திருந்ததுமான ஒன்றை மட்டும் சுருக்கமாய்ப் பார்ப்போம்.

காந்திஜிக்குக் கல்கி துரோகம் இழைத்ததாகக் குற்றம் சாட்டியதும், முன்பு கல்கி பெயர் சொல்லாமல் குறிப்பிட்டதுமான ஆனந்த விகடனுடன் நடந்த சொற்போர்தான் அது. அந்தப்

பத்திரிகையின் 24—5—42 இதழில், ராஜாஜிக்கு விகடன் எழுதிக் கொண்டதாய், ஒரு பகிரங்கக் கடிதம், தலையங்கப் பகுதியில் வெளியாயிற்று. அதில் விகடன், ராஜாஜி முன்னுக்குப்பின் முரணாய்ப் பேசியுள்ளார் என்றும், பாகிஸ்தான் யோசனை தேசத்துக்குக் கேடானது என்றும் சொல்லிவிட்டு, இறுதியில் ஒரு கேள்வி கேட்டான்: ''எந்தத் தைரியத்தைக் கொண்டு நீங்கள் இந்தப் பாகிஸ்தான் புரட்சியைக் கொண்டு வந்தீர்களோ, அதே தைரியத்துடன் தேச நலனை உத்தேசித்து நீங்கள் அதை வாபீஸ் வாங்கிக் கொள்ள மாட்டீர்களா என்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்தத் தைரியம் வருமா ?''

ஐந்தரைப் பக்கம் கொண்ட அந்தக் கடிதத்துக்கு, கிட்டத்தட்ட அதே நீளத்தில், 31-5-42 கல்கி இதழில் அதன் ஆசிரியர் பதில் கொடுத்தார். விகடனின் வாதங்களுக்கெல்லாம் விரிவாக எதிர்வாதம் செய்துவிட்டு, இறுதியில் சொன்னார் :

ராஜாஜி முன்னுக்குப் பின் விரோதமாக அப்படி என்ன பேசுகிறார்? முன்னே அவர், ''பாகிஸ்தான் கெடுதல்'' என்று சொன்னார். இப்போது, ''பாகிஸ்தான் நல்லது'' என்கிறாரா? ஒரு நாளும் இல்லை. இப்போதும் ''பாகிஸ்தான் கெடுதல்'' என்றுதான் சொல்கிறார். தேசத்தைப் பிளப்பது நல்லது, விரும்பத்தக்கது என்று யார்தான் சொல்லுவார்கள்? ராஜாஜி நிச்சயமாகச் சொல்லவில்லை....

கெடுதல்களில் சின்னக் கெடுதல், பெரிய கெடுதல் என்று உண்டு. ''பாகிஸ்தான்'' என்பது சின்னக் கெடுதல்; பராதீனம், அடிமைத்தனம் என்பவை மகா பயங்கரமான கெடுதல்கள். ''அடிமைத்தனமாகிற பெரிய கெடுதலை விலக்குவதற்காகச் சின்னக் கெடுதலாகிய பாகிஸ்தான் உரிமையை ஒப்புக் கொள்ளலாம்'' என்கிறார் ராஜாஜி...

அபத்தங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற ஓர் அபூர்வ யோசனையைக் கடைசியாக விகடன் சொல்லியிருக்கிறான். அதாவது தேச நலனை உத்தேசித்து ராஜாஜி தமது யோசனையைத் தைரியத்துடன் வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமாம். ''அந்தத் தைரியம் வருமா?'' என்று விகடன் கேட்கிறான்.

யோசனையை வாபீஸ் வாங்கிக் கொள்ளப் பிரமாதமான தைரியம் வேண்டியதில்லை. பெரும் எதிர்ப்பு ஏற்படும் என்று தெரிந்திருந்தும் யோசனையைக் கொண்டு வருவதற்குத்தான் தைரியம் வேண்டும். மகாத்மாவும் ஜவாஹரும் எதிர்த்தும், அ. இ. கா. கமிட்டி நிராகரித்தும், தமது யோசனையை வாபீஸ் வாங்கிக்கொள்ளாமல் பிரசாரம் செய்வதற்குத்தான் தைரியம் வேண்டும். கல்லும் மண்ணும் எறிந்து காலாடித்தனம் செய்கிறவர்களை எதிர்த்து நிற்பதற்குத்தான் தைரியம் வேண்டும்.

தேச நலனுக்காக சமூக பகிஷ்காரத்தையும், சர்க்காரின் கோபத்தையும், சொல்லொணாக் கஷ்டங்களையும் அனுபவிக்கும் தைரியம் ராஜாஜிக்கு உண்டு என்பதை 1906ம் வருஷத்திலிருந்து தமிழ்நாடு பார்த்து வந்திருக்கிறது.

தைரியத்தைப் பற்றிய வரையில் விகடனிடம் ராஜாஜி பாடம் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்பது சர்வ நிச்சயம். சர்க்கார் எச்சரிக்கை வருமோ என்ற பயத்தினாலேயே உளறி அடித்துக் கொண்டு தொடை நடுங்கும் நிலைமையை அடைந்து விட்ட விகடன் ''தைரியம் வருமா?'' என்று ராஜாஜியைப் பார்த்துக் கேட்கிறதென்றால், வனத்தில் யதேச்சையாகத் திரியும் சிங்கத்தைப் பார்த்து வளையில் ஒளியும் சுண்டெலி, ''தைரியமாய் இரு!'' என்று போதிப்பதற்குத்தான் அதை ஒப்பிட வேண்டும்.

இதிலுள்ள கடைசி வாக்கியத்துக்கு விளக்கமாகக் கார்ட்டூன் ஒன்று எதிர்ப் பக்கத்தில் வெளியாகியிருந்தது —

விகடன் முகம் கொண்ட ஒரு சின்ன எலி, நடுங்கியபடி, ஒரு மரத்தடி வளைக்குள் ஒளியவிருக்கும் தறுவாயில், ''தைரி




வானவில்லின்
வனப்புமிக்க
வண்ணங்களை
எட்டிப் பிடித்து
உங்கள் இல்லங்களில் இட்டு நிரப்பவே


bp
EOMITE
bp
EOMITE



இனிய
கனவுகளின்
நனவினிலே !!!

"சாந்தி"

அளிக்கும்

உயர்ரகப் பட்டுச்சேலைகள்
கைத்தறி மில் துணிகள்



கலை நயமுடையது
விலை நியாயமானது
நீடித்து உழைப்பது
நிறைவு தருவது

மயிலாப்பூர்
சாந்தி சில்க்
எம்போரியம்

5, சன்னதி தெரு, மயிலாப்பூர்,
சென்னை- 600004 போன்: 74403

103, தாணுத் தெரு, புரசைவாக்கம்,
(ஈஸ்வரி லஞ்ச் ஹோம் கட்டிடம்)
சென்னை- 600007 போன்: 664215

RAJATHI

ஞாயிறு கடை உண்டு. இலவச பீகே போனஸ் கூப்பன்கள் வழங்குகிறோம்.

யம் வருமா ?'' என்று கேட்கிறது ; ராஜாஜியின் முகத்துடன்கூடிய ஒரு பெரிய சிங்கம் அந்த எலியை அலட்சிய மாய்த் திரும்பிப் பார்க்கிறது.

இதற்குப் பதில் கார்ட்டூன் ஒன்று, அடுத்த மாதம் ஏழாம் தேதிய ஆனந்த விகடனில் வந்தது —

அதே சாயலில் சிங்கமும் எலியும் ; ஆனால் இந்தச் சிங்கம், தேசிய சர்க்கார் என்ற வேட்டைப் பொருள் மேல் விரித்த, பாகிஸ்தான் வலைக்குள் சிக்கிக் கொள்ளும் தறுவாயில் இருக்கிறது ; அதைப் பார்த்து விகடன் எலி, ''ராஜா(ஜி) திரும்பிப் பாருங்கள்'' என்று எச்சரிக்கை செய்கிறது; சிங்கத்தின் தூக்கிய வாலின் நுனியில், ''கல்கீசசு'' உட்கார்ந்திருக்கிறது ; அந்த ஈ எலியைப் பார்த்து, ''ஏய், எலியே ! உனக்கு இவ்வளவு துணிச்சலா ?'' என்று கேட்கிறது.

இந்தக் கார்ட்டூனுக்கும், இது வெளியான விகடன் இதழில் வந்த தலையங்கத்துக்கும், அதே மாதம் 16ம் தேதிய கல்கியில் பதில் கொடுக்கப்பட்டிருந்தது:

...''அவசியமானால் 'கல்கி'க்குப் புரிகிற பாஷையில் எழுதுவோம்'' என்று விகடன் தெரியப்படுத்தி யிருக்கிறான். எனவே, இது வரையில் கல்கிக்குப் புரியாத பாஷையில் சிரமப்பட்டு எழுதி வந்ததாக ஏற்படுகிறது. கல்கிக்குப் புரிகிற தமிழ்ப் பாஷைதான் தமிழ் மக்களுக்குப் புரிகிற பாஷையாகும். பத்து வருஷம் விகடனின் துணை ஆசிரியராக இருந்தவருக்குப் புரியாத பாஷை, தமிழ் மக்களுக்கு நிச்சயமாகப் புரியாதல்லவா?

ராஜாஜியைத் தூற்றவோ, அவருடைய நோக்கங்களுக்கு மாக கற்பிக்கவோ, நாக்கில் நரம்பின்றித் தூஷிக்கவோ, அவ்விதம் செய்யும் கோஷ்டியுடன் சேரவோ விகடனுக்கு விருப்பமில்லை — சேரப் போவதில்லை என்று சொன்னதில் நமக்கு அளவிலாத மகிழ்ச்சி.

ராஜாஜி சிங்கம்தான். விகடன் எலிதான். சிங்கத்துக்கு எலி தைரியம் போதிக்க முன் வந்தது பிசகுதான் என்று ஒப்புக்கொண்டு கன்னத்தில் போட்டுக் கொண்டதில் நமக்குப் பரிபூரண சந்தோஷம். மற்றப்படி, சிங்கத்தின் தூக்கிய வாலின் மேல் நமக்கு விகடன் சிம்மாசனம் கொடுத்தது பற்றியும் கொஞ்சம் கூட அதிருப்தி கிடையாது.

இவ்விதமான சொற் போர்களும், மற்றும் சோதனைகளும் வேதனைகளும் மிகுந்திருந்த அந்நாட்களில், ராஜாஜியின் மெய்க் காவலுக்கு, அப்போது மாதம் இரு முறையாக வந்து கொண்டிருந்த கல்கிப் பத்திரிகை போதுமான



எலியால் ஏழையானவர் !

ஹைதராபாத் நிஜாம் மன்னரின் அரண்மனையில், ஓர் அறைக்குள் ரூபாய் நோட்டுக்கள் அடுக்கிய பெட்டிகள் இருந்தன. எப்படியோ எலிகள் அந்த அறைக்குள் நுழைந்து பெட்டிகளுக்குள்ளும் புகுந்து ரூபாய் நோட்டுக்களைக் கத்திரித்து ஜல்லிகளாக்கி விட்டன !

மறைந்த நிஜாம், (பிரதமராயிருந்த) நேருவுக்குக் கடிதம் எழுதி, ''நான் மிகவும் ஏழை. எலிகளால் கடிக்கப்பட்ட சேதக் கரன்ஸிகளுக்கும் பதில் புதிய கரன்ஸி நோட்டுக்கள் அளிக்க வேண்டும்....'' என்று தெரிவித்துக் கொண்டார். இந்திய அரசு அவர் கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை !

ஆதாரம்: சிங்கப்பூர் 'தமிழ் நேசன்'

தகவல்: ஏ. சுவாமிநாதன்

தாய் இல்லை. அதை எண்ணி, வாரம் இரு முறை வெளியீடாகத் துணைக் கல்கி ஒன்று தொடங்கப்பட்டது. அந்த ஆண்டு மே 22ம் தேதியிலிருந்து, சிறு செய்தித் தாள் வடிவில் உலவிய அந்தத் துணைக் கல்கியில், ராஜாஜியின் பிரசாரச் சுற்றுப் பயணம், அவருக்குப் பக்கபலம் அளித்தவர்களின் விவரங்கள், அவர்களுடைய கருத்துக்கள், படங்கள் ஆசிரியரின் விளக்கக் கட்டுரைகள், எதிர்த் தாக்குதல்கள் முதலியன இடம் பெற்றன. அவை மட்டும் அல்லாமல் பொதுவாகச் சுவை ஊட்டுவதான யுத்தச் செய்திகள், வானொலிப் பகுதி, சினிமாக் குறிப்புக்கள், தமிழிசைப் பிரசாரம் முதலியனவும் அதில் வெளிவந்தன. அரையணா விலை கொண்ட அந்தப் பத்திரிகை எடுத்த எடுப்பிலேயே அள்ளிக் கொண்டு போயிற்று.

கல்கியின் ''மகுடபதி'' நாவல் ஆறுவது இதழில் தொடங்கியதை அடுத்து, அதன் செலாவணி மேலும் பெருகிற்று. ஆனால் நெடுநாள் அது தொடர்ந்து வெளிவர முடியாதபடி, ஆகஸ்டு கொந்தளிப்பை அடுத்து வந்த கடுமையான கட்டுப்பாடுகள் தடை செய்தன. 21ம் இதழுடன் அது நின்று போயிற்று. அதன் கடைசி இதழில் பதினொரும் அத்தியாயத்துடன் நின்ற ''மகுடபதி'', பிரதானக் கல்கிப் பத்திரிகையில் தொடர்ந்தது ; வேறு சில அம்சங்களும் தொடர்ந்தன. ஆகவே, துணைக் கல்கி நின்று போயிற்று என்பதற்குப் பதிலாக, பிரதானக் கல்கியுடன் இணைந்து கொண்டது என்றே சொல்லலாம்.

(தொடரும்)

"தெரியாமச் செஞ்சுட்டேன் டாடி. இனிமேல் செய்ய மாட்டேன் டாடி." பயத்தால் குழந்தை பாலுவின் உடல் நடுங்கியது. மூலையில் போய் ஒதுங்கிக் கொண்டான்.

"இங்கே வாடா ராஸ்கல். தெரியாம என்னடா தெரியாம. பத்து வயசாச்சு, இன்னுமா தெரியாது? டிரான்ஸிஸ்டரை வைச்சுண்டு விளையாடக் கூடாதுன்னு இன்னுமா தெரியாது? சும்மாவா வந்தது டிரான்ஸிஸ்டர்? வாடா இங்கே!" விசுவநாதன் குரல் கோபத்தில் தொனித்தது. மாதக் கடைசி. வெயிலில் வெளியே சுற்றி விட்டு அலுத்துச் சலித்து வந்த அவனுக்குப் பத்து வயசு ஒரு குழந்தையின் வயசாகத் தெரியவில்லை.

"அவனை ஒன்னும் செய்யாதேங்கோ. பாவம்.... என்னமோ தெரியாமப் பண்ணிட்டுது குழந்தை. ப்ளீஸ் அவனை அடிக்காதீங்கோ..." இருமலுக்கிடையே கனகம் கெஞ்சினாள்.

"நீ சும்மா இரு கனகம்... அவனுக்கு இடம் கொடுத்து. இடம் கொடுத்து அவன் குட்டிச்சுவராயிட்டான். இன்னிக்கு ரெண்டிலே ஒன்னு பார்த்துடறேன். ராஸ்கல்."


"நான் என்ன இடம் கொடுக்கிறேன்?"

"பின்னே என்ன? உன்னால் ஒன்னும் செய்ய முடியாதுன்னு அந்த ராஸ்கல் தெரிஞ்சுண்டிருக்கான். நான் அவனைக் கண்டிக்க வந்தா குறுக்கே நீ வந்து தடுத்துடுவேன்னு அவனுக்குத் தெரியும். அதான் ஆட்டம் காட்டறான்."

கனகம் வாய் பேசவில்லை. அவள் படுத்த படுக்கையாய் ஒரு மாதமாகி விட்டது. என்ன இருமலோ சனியோ — சனியன் விட்டபாடு இல்லை. அவள் இயல்பாகவே நோஞ்சான். பாலுவைப் பெற்ற பிறகே உடம்பு தளர்ந்து விட்டது. போதாக்குறைக்கு இரண்டு அபார்ஷன் வேறு. ஒரு மாதம் படுப்பதும், மறு மாதம் எழுந்திருப்பதுமாக அவள் ஒன்றுக்கும் பிரயோசனமில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தாள். 'உன்னாலே ஒன்னும் முடியாது' என்று தன் கணவன் சொல்வதன் உள்ளர்த்தம் அவளுக்குத் தெரியாமலில்லை. மனசுக்குள் அழுவதைத் தவிர வேறு வழியில்லை. பாலு பிறப்பதற்கு முன்பு மல்லிகைப் பூவும், சினிமாவும் கிளுகிளுப்புமாய்த் தாம்பத்யம் இதமாகத்தான் நடந்து கொண்டிருந்தது. இருந்தால் திடகாத்திரமாய், புருஷனைச் சந்தோஷப்படுத்துகிற மாதிரியாய் இருக்கணும் — இல்லாவிட்டால் போய்விடணும். இப்படி அடிக்கடி நினைத்துக் கொள்வதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை அவளால்.

"அம்மா...அம்மா... டாடி அடிக்கிறார் அம்மா...." சமையலறையில் இருந்து எச்சிற் கையைக்கூடக் கழுவாமல் ஓடி வந்து கனகத்தின் கட்டிலில் ஏறி உட்கார்ந்து கொண்டான் பாலு. விசுவநாதன் தொடர்ந்து வந்தான். அவன் முகம் ரௌத்திராகாரமாய் இருந்தது.

"அம்மா கிட்டப் போய் ஒளிஞ்சுக்கிட்டியா? செய்யறதையும் செஞ்சுப்பிட்டு ஒளிஞ்சுக்கிறியா?"





ரா. அனந்த கிருஷ்ணன்

''என்ன செஞ்சான்?''

''சாப்பிட்டுண்டே இருக்கச்சே தண்ணி வேணும்னான். சாப்பிட்டு முடிஞ்சதும் குடிடான்னு. இப்பவே வேணும்னு இடக் கையாலே தண்ணீர்ப் பானையைச் சரிச்சான். பானை கவிழ்ந்து தண்ணீர் மொத்தமும் கொட்டிடுத்து. சமையலறை முழுவதும் தண்ணி. குடிக்கத் தண்ணி கிடையாது.''

''இவ்வளவுதானே?''

''என்னது? இவ்வளவுதானேவா? இது போறுதா? உம்... சரி சரி.. உன்கிட்ட விவாதம் பண்ணினு பிரயோசனமில்லே.'' விசுவநாதன் வெளியே கிளம்பிப் போய்விட்டான்.

பாலுவைக் கூப்பிட்டுப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு புத்திமதி சொன்னாள் கனகம். ''அப்பாகிட்டே சமர்த்தா நடந்துக்கணும்டா குழந்தை. அம்மாவாலேதான் ஒண்ணும் முடியலியேன்னு. அப்பாவைத் தொந்தரவு பண்ணக் கூடாது. அப்பா வெளியிலெல்லாம் சுத்திட்டுச் சலிச்சுப் போய் வரார். அவர் கடிஞ்சுக்கற மாதிரி நடந்துக்கப் படாது. நீ இப்படி எல்லாம் பண்ணினு அம்மா செத்துப் போயிடுவா. அப்புறம் அப்பா வேறே யாரையாவது கல்யாணம் செஞ்சுண்டுடுவார். அவ — அந்தச் சித்தி உங்கிட்டே ஆசையா இருப்பாளா? சமர்த்தா இருக்கணும் கண்ணு!''

பாலு சொன்ன பதில் அவள் மனத்தைத் தொட்டது. ''நான் டாடி கிட்டே சரியாத்தான் நடந்துக்கணும்னு பார்க்கறேன் அம்மா. அப்படி நினைச்சுண்டே இருக்கச்சே ஏதாவது தப்பு நடந்துடறது அம்மா. நான் வேணும்னு தப்புப் பண்ணலே. நான் ஸாரின்னு சொல்றதுக்குள்ளே டாடி என்கிட்டே கோவிச்சுண்டுடறு, அடிச்சுடறு?''

அன்றிரவு தூக்கத்தில் பாலு புலம்பினான்: 'டாடி.... டாடி என்னை அடிக்காதே, டாடி. அப்புறம் அம்மா செத்துப் போயிடுவா. எனக்கு அம்மாவே இருக்க மாட்டா டாடி.' அழுது கொண்டே எழுந்து உட்கார்ந்த பாலுவைச் சமாதானப்படுத்தி ஒரு டம்ளர் தண்ணீர் கொடுத்துப் படுக்க வைத்தாள் கனகம். உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த அவள் மனம் மிகவும் சஞ்சலமடைந்தது. தான் குழந்தையிடம் சொன்ன மாதிரியே தனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்? அவள் கண்கள் ஊமைக் கண்ணீர் வடித்தன. சற்றுத் தூரத்தில் படுத்துக் கொண்டிருந்த தன் கணவனை உற்றுப் பார்த்தாள். பகலெல்லாம் சுற்றி விட்டு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் விசுவநாதன். எதையோ நினைத்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது கனகத்திடமிருந்து.

''இன்னிக்கு ஸ்கூலிலே என்னடா விசேஷம்?'' வழக்கமாகக் கேட்கிற கேள்வியைப் பாலுவிடம் கேட்டாள் கனகம்.

''குமார் இன்னிக்கு மயக்கம் போட்டு விழுந்துட்டாம்மா!'' குமார் யார் என்று கனகத்துக்குத் தெரியும். பாலு கதை கதையாய்ச் சொல்லியிருக்கிறான் அம்மாவிடம். குமாரின் அப்பா அம்மா இருவருமே கார் விபத்தில் இறந்து போய் விட்டார்கள். அம்மா வழி தாத்தா பாட்டியிடம் வளர்ந்து கொண்டிருந்தான் குமார். ஒரே செல்லம். போதாக்குறைக்கு அப்பா வழித் தாத்தா பாட்டியும் அடிக்கடி அவனை அழைத்துக் கொண்டு போய்ச் சீராட்டுவார்கள். சின்ன வயசிலேயே சகாக்களுக்கு ஒரு ஹீரோவாய் ஒரு ஜூனியர் 'மைனராய்த்' திகழ்ந்தான்.

''ஏன் மயக்கம் போட்டு விழுந்தான்?''

''ஊஹூம், அசெம்பிளியிலே பிரார்த்தனை நடந்துக்கிட்டிருந்தது. அப்போ விழுந்தான். வீட்டிலே ஒண்ணும் சாப்பிடலையாம். பாட்டி கிட்டே கோவிச்சுண்டு சாப்பிடாம வந்துட்டானாம். அப்புறம் அவன் பாட்டி தாத்தா ரெண்டு பேரும் ஸ்கூலுக்கு வந்து அவனைக் கட்டாயப்படுத்தித் தோசை சாப்பிட வச்சா. நாங்களெல்லாம் வேடிக்கை பார்த்தோம். அவன் சாப்பிட மாட்டேன்னுட்டு தூணைச் சுத்திச் சுத்தி ஓடினான். அவன் தாத்தா அவனைப் பிடிச்சுண்டு வந்து பாட்டி கிட்டே குடுத்தார். பாட்டி 'சாப்பிடுடா கண்ணு'ன்னு அவனுக்கு ஊட்டினா.''

கனகம் பேசாமல் பாலு சொல்லுவதையே கேட்டுக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூடத்தில் நடந்த காட்சியை அப்படியே தத்ரூபமாக நடித்துக் காட்டிக் கொண்டிருந்த தன் மகனைப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தாள்.

''குமார், லக்கி இல்லேம்மா?''

சட்டென்று திடுக்கிட்டாள் கனகம்.

''என்னது?''

'ஆமாம்மா. அவன் லக்கி ஃபெல்லோ தானே? ரெண்டு தாத்தாவும் பாட்டியும் அவன் கிட்டே எவ்வளவு ஆசையா இருக்கா?''

''அது சரி. அவன் அப்பா அம்மா இருந்தா இன்னும் ஆசையா இருப்பா இல்லியா?'' கனகம் கேட்டாள். அவள் பார்வை தன் பிள்ளையின் மனத்தை ஊடுருவிப் பார்த்தது.

''உக்கும் ....எல்லா அப்பாவும் ஆசையாத்தான் இருக்காளா?''

''என்னடா பாலு...உனக்கும் அப்பாவும் அம்மாவும் இல்லாட்டா உன்கிட்டே யாராவது ஆசையா இருப்பான்னு சொல்றயா?''

''போம்மா ... அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா.''

பாலுவின் பதிலில் அழுத்தமான மறுப்பு இல்லை. தனிர் மனத்தில் எப்படிப்பட்ட வெறுப்புணர்ச்சி புரையோடியிருக்கிறது என்று புரிந்து கொள்ள முடிந்தது அவளால். முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும்.

''ஏண்டா! குமாருக்கு அவனோட தாத்தாவும் பாட்டியும் இருக்கா. நானும் உங்கப்பாவும் போயிட்டா உனக்கு யாருடா இருக்கா?''

''உக்கும்...மூர்த்தி மாமா இல்லியா?''

கனகத்துக்கு நெஞ்சு படபடத்தது. பத்து வயசுக் குழந்தை மனசில் இப்படியொரு எண்ணம் புரையோடியிருக்கிறதா? இது யார் தவறு?

மூர்த்தி அவளுடைய ஒரே அண்ணன். குழந்தை பாலு சொல்லுவதில் தவறு இல்லை. மூர்த்திக்குக் குழந்தைகள் எதுவும் இல்லை. ஒவ்வொரு முறை தன் தங்கை கனகத்தைப் பார்க்க வரும்போதும் பாலுவுக்குத் தவறாமல் ஏதாவது விளையாட்டுச் சாமான் வாங்கி வருவான் மூர்த்தி. மாமா வந்து விட்டால் பாலு பாடு குஷிதான். டாடி என்னதான் கோபித்துக் கொண்டாலும் இரண்டு நாட்கள் பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போட்டு விட்டு மாமாவோடு ஊரைச் சுற்றுவான் பாலு. கடற்கரை, ஹோட்டல், சினிமா என்று ஒரே குஷி. தனக்கோ உடம்பு முடியவில்லை. தன் கணவனுக்கோ வேலைத் தொல்லை என்று பாலுவின் போக்கிலும் தன் அண்ணன் போக்கிலும் விட்டு விடுவாள் கனகம். மூர்த்தி மாமா கிளம்பிப் போகிற அன்று பாலுவின் முகத்தில் சோகம் கப்பும். பிறகு இரண்டு நாட்கள் சரியாகச் சாப்பிட மாட்டான். அந்த மூர்த்தி மாமாதான் ஆசையாகப் பார்த்துக் கொள்வார் என்கிறான் குழந்தை.

''ஏண்டா அப்படீன்னா உனக்கு அப்பா அம்மா ரெண்டு பேரும் வேண்டாமா?''

''நான் அப்படிச் சொன்னேனா?''

''பின்னே?''

இதற்கு மேலும் பேச்சை வளர்த்தால் குழந்தையின் பதில்கள் விபரீதமாகி விடும் என்று கனகத்துக்குத் தெரியும். ''சரி, விளையாடப் போ'' என்று அவனை அனுப்பி விட்டாள்.

ஆனால் நெடுநேரம் குழந்தையின் மனத்தில் இப்படியோர் எண்ணம் வருவானேன் என்ற கேள்வி அவள் மனத்தை வாட்டிக் கொண்டிருந்தது.

இரவு, சாப்பாட்டுக்குப் பிறகு தன் கணவனிடம் இந்த விஷயத்தைச் சொன்னாள் - கனகம்.

''பார்த்தாயா உன் பிள்ளை மனசு எப்படி விபரீதமா வேலை செய்யறதுன்னு?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான் விசுவநாதன்.

''ஊஹும். குழந்தைகளுக்கு என்ன தெரியும்? நாம அதுகள் கிட்டே நடந்துக்கறதைப் பொறுத்துத்தான் அதுங்க நம்மகிட்டே நடந்துக்கும்!''

''அப்படீன்னா எனக்குப் பாலுகிட்டே ஆசையே இல்லேன்னு சொல்றியா?''

''நான் ஒருநாளும் அப்படிச் சொல்ல மாட்டேன். அவனுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துடுத்துன்னா நீங்க எப்படித் துடிச்சுப் போய் விடுவேள்னு எனக்குத் தெரியும். ஆனா உங்களுக்கு முன்கோபம் வந்துடறது. குழந்தைக்கு அது தெரியலை. அவனுக்கு மட்டும் டாடின்னு ஆசையில்லையா, பெருமையில்லையா? நான் உங்களை ஒண்ணும் குறை சொல்லலை. சின்னக் குழந்தை தன் மனசுலே பட்டதை அப்படியே சொல்லிடறது. பெரியவாதான் கொஞ்சம் நிதானமா நடந்துக்கணும். நிஜம்மாவா குழந்தை அப்பாவும் அம்மாவும் செத்துப் போயிடணும்னு நினைச்சுப்பான்? ஊஹும், ஒருநாளும் இராது...''

'உம்' என்று பெருமூச்சு விட்டான் விசுவநாதன். ஆனால் கனகம் சொல்வதை ஒத்துக் கொள்வது போலிருந்தது அவன் முக பாவம்.

'ம்...' விசும்பல் ஒலி கேட்டது. பாலு தூங்கவில்லையா? தூங்கி விட்டான் என்று நினைத்துத்தான் இருவரும் உரக்கப் பேசிக் கொண்டிருந்தார்கள். படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான் குழந்தை. ''டாடீ .. அம்மா, என்கிட்டே வாங்கோ...!'' விசும்பி விசும்பி அழுத குழந்தையின் இரண்டு பக்கமும் இருவரும் உட்கார்ந்தார்கள்.

குழந்தை சொல்லாமலே அவன் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்ட பார்வை இருவர் முகங்களிலும் தெரிந்தது.



தபால் தலையில் பரதநாட்டியம்!

எத்தனையோ பெரிய மனிதர்களுக்காகத் தபால் தலை வெளியிடுகிறார்கள். இந்தப் பெண்மணியோ ஸ்டாம்பு போடுவதற்காகப் 'போஸ்' கொடுத்திருக்கிறாள்! இந்திய நடனங்கள் என்ற தலைப்பில் சில தபால் தலைகளை அரசு வெளியிடுகிறது. அவற்றுள் பரத நாட்டியத்துக்காகப் 'போஸ்' கொடுக்கப் பிரஸன்னவதனியை ஸ்ரீமதி ருக்மிணி தேவியே தேர்ந்தெடுத்தார்.


தொட்டில் பழக்கம் இன்னும் உன்னை விடவில்லையே...
பள்ளிக்கூடத்திலே தான் என்னைப் பார்த்து
காப்பி அடிச்சேன்னு, இந்தக் காப்பி விஷயத்திலேயுமா
நீயும் அய்யங்கார்ஸ் காப்பி தானா?
அய்யங்கார்ஸ்
காபி கம்பெனி



3. தேவகி வருகிறாள்!

மொட்டைத் தலையும் பட்டை விபூதியுமாக, காவி உடையில் இருந்த கோவிந்துவிடம், ''ஸ்டேஷனுக்குப் போக வண்டி தயார்!'' என்று பணிவோடு அவர் முன் ஒரு டிக்கெட்டையும், ஒரு பயணப் பையையும் வைத்து விட்டு நின்றார் ஜெயராம். அவர் கண்களில் நீர் ததும்பியிருந்தது.

''அப்பனே! ஒரு முக்கியமான விஷயம்—''

''சொல்லுங்க, சாமி!''

''ஜெயராம்! என்னைத் தேடிக்கிட்டு யாராச்சும் வரலாம்—

''தனம், தனம் என்று ஒரு பெண்பிள்ளை.''

ஜெயராமின் மூளையில் மின்னல் வெட்டியது. ''பெங்களூர்க்காரியா சாமி?''

''ஆமாம், உனக்குத் தெரியுமா?''

''கேட்கிறதுக்கு மன்னிக்கணும் — சாமியோட அறையிலே பெரிசாக ஒரு கண் 'கட்-அவுட்' செஞ்சு மேசை எதிரில் வைத்துச் சுவரில் மாட்டி யிருக்குதே—''

''அவ இல்லே. அந்தப் பாவி பேச்சை எடுக்காதே. இவள் வேறே... பூர்வாசிரமத்தில் எனக்கு ஏதோ உறவு. இவள் வந்தால்—சொத்து பத்து ஏதேனும் கேட்க மாட்டாள். நான் இருக்கிற இடத்தைக் கேட்பா...''

''சாமி, கவலையே படவேண்டாம். அவ இங்கே வரவே மாட்டாள்... இப்போ அவ இந்தப் பூமியிலேயே இல்லே...''

''என்னது?'' என்று தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு அதிர்ந்து போய் விழித்தார் கோவிந்து சாமியார்.

''ஆமா. அவளைக் கொன்னுட்டாங்க... கொன்ன ஆளும் நமக்குத் தெரிந்தவருதான். ரமேஷ்னு ஓர் ஆஷாடபூதி வருவானே—''

''ஹா! ரமேஷா?''

''ஆமா! அவர்தான். போலீஸிலே அரஸ்ட் செய்து வைச்சிருக்காங்களாம்.''

சாமியார் இக்பிரமை பிடித்தவர் மாதிரி சில விநாடிகள் நின்றார். அரைச் சந்தோஷம் அவர் முகத்தில் மின்னி மறைந்தாற் போல ஜெயராமுக்குத் தோன்றியது.

''எப்போ நடந்ததாம்?''

''பத்து நாட்களாச்சுதாம். இன்ஸ்பெக்டர் சொன்னாரு.''

''பத்து நா...ளா...ச்...சா...?'' என்று நீட்டி முழக்கிச் சாவதானமாகக் கேட்டார் சாமியார். 'மூந்தாநாள்கூட என்னுடன் டெலிபோனில் பேசினாளே' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டார். 'இது வேறு தனமாக இருக்குமோ?'

''இரண்டொரு தடவை அந்தக் கண் அறையிலே உட்கார்ந்து, அந்தக் 'கட்-அவுட்' விழிகளையே பார்த்துச் சத்தமில்லாமல் சாமி அழுததை நான் பார்த்தது உண்டு—

''அந்தப் பொண்ணைக் கட்டிக்கிட்டிருந்தா சாமி வாழ்க்கை நல்லா இருந்திருக்கும்.''

''விதியை மீற முடியுமா? அந்தப் பொண்ணுக்கு வேறே இடத்திலே கல்யாணமாகிப் போச்சு'' — சாமியார் வண்டியை நோக்கி நடந்தார். ஏறிக் கொண்டார். ''விடுடா, வண்டியை'' என்றார்.

''சாமி! சாமி! அவங்க பேரை மட்டும் சொல்லிட்டுப் போங்க சாமி! ரொம்ப நாளா கேட்கணும்னு ஆசை சாமி'' என்று பின்னால் ஓடிவந்தார் ஜெயராம்.

''பேரா... பேரா... வந்து...வந்து...'' என்று சாமியார் யோசிப்பது மட்டும்தான் காற்றில் கேட்டது. வண்டி பிய்த்துக் கொண்டு கிளம்பி விட்டது.

ஓடும் வண்டியில், ''அவ பேரு... அவ பேரு... வந்து... நிர்மலா... நிர்மலா...நிர்மலா!'' என்று புலம்பிக் கொண்டே பற்களை நறநறவென்று இனம் தெரியாத வெறியில் சாமியார் கடித்துக் கொண்டது ஜெயராமுக்குத் தெரியாது.

போலீஸ் தலைமையகத்தில் மூன்றாவது மாடியில், கீழ்க் கோடியில் இருந்த 'லாக்அப்' அறையில் 'கிளிக்' என்று பூட்டு திறக்கும் ஓசை கேட்டது. சுவரைப் பார்க்க நின்றிருந்த ரமேஷ் திரும்பினான். கண்களில் நீர் ததும்பத் தலையில் முக்காட்டுடன் மாலதி நின்றாள்.

'ரமேஷ்!' என்று அவன் உயிர் துடிப்பது உதடுகளில் பிரதிபலித்தது. ஆனால் அடுத்த கணமே, 'நான் ஒரு குற்றவாளி' என்கிற மாதிரி ரமேஷ் தலையைத் தாழ்த்திக் கொள்வதைக் கண்டதும் அவள் முகத்தில் அருவருப்பு படர்ந்தது. 'மாலு! நான் நிரபராதி' என்று அவன் ஏன் அவளைப் பார்த்ததுமே கதறிக் கொண்டு வரவில்லை? அண்ணா சொன்னதெல்லாம் நிஜம்தானா?

''நீங்கள் இப்படிச் செய்வீர்கள் என்று நான் நினைக்கவே இல்லே!'' என்றாள் வெறுப்புடன். ரமேஷ் பதில் சொல்லாமல் நின்றான்.

''நீங்கள் பேசினது, பழகினது எல்லாமே வேஷம்; வெறும் வேஷம்... அன்று நான் மகாபலிபுரத்தில் சற்று அசந்திருந்தால் தனத்தைக் கொன்றது போல் என்னையும் கடலில் தள்ளிக் கொன்றிருப்பீர்கள்—''

''மாலு—''

''ஷட் அப்! என் பெயரை உச்சரிக்கக்கூட உனக்கு இனி அருகதை கிடையாது. உன்மீது வைத்த ஆசை, அன்பு, பாசம், காதல், நம்பிக்கை எல்லாமே பொடி சூர்ணமாகி விட்டது. தகர்ந்து விழுந்து விட்டது. என்ன பார்க்கிறாய்? 'என்ன சொல்லி இவளை ஏமாற்றலாம்' என்றா? நடக்காது, ரமேஷ்! இனி உன் ஜாலமெல்லாம் நடக்காது. யார் இந்தத்



இரு விழிகள்

ரேகா சந்திரராஜ்

தனம்? உனக்கும் அவளுக்கும் என்ன உறவு? எத்தனை நாட்களாக உறவு என்பதெல்லாம் எனக்குத் தெரிந்து விட்டது ரமேஷ்!''

''என்ன தெரியும் உனக்கு?'' என்று கேட்டான் ரமேஷ்.

''என்ன தெரியுமா?... அந்தத் தனம் குடகில் ஒரு காப்பித் தோட்ட மானேஜரின் மகள் என்பது தெரியும். கான்வென்டில் படித்துக் கொண்டிருந்தாள் என்று தெரியும். உன் பேச்சில், கபடச்சிரிப்பில், பொய்யில் மயங்கித் தன்னையே உனக்குக் கொடுத்து ஏமாந்தாள் என்பதும் தெரியும்... அவளை ஒட்ட உறிஞ்சி விட்டுக் கைவிட்டுவிட்டாய்; அவள் கதறினள்; ஆபீஸில் மாற்றல் வாங்கிக் கொண்டு இங்கே வந்து விட்டாய்.''

ரமேஷ், 'இதெல்லாம் இவளுக்கு எப்படித் தெரிந்தது?' என்கிற மாதிரி பார்த்தான்.

''எப்படித் தெரிந்தது இந்தப் பெண் பிள்ளைக்கு என்று பார்க்கிறாயா?.. உன் பூர்வோத்திரம் முழுதும் கட்டுக் கட்டாக என் அண்ணன் கைக்கு வந்து விட்டது.''

''உம்....அப்புறம்?''

''இங்கே வந்ததும் மாலதி என்ற பேதைப் பெண்ணைப் பார்த்தாய். அவள் அழகில் மயங்கினய். ஆனல் தனம் உள்ளூற உன்னை மிரட்டிக் கொண்டிருந்தாள். நீ அவளுக்கு எழுதின கடிதங்களையெல்லாம் 'உன் புதுக் காதலிக்கு அனுப்பி விடுவேன்' என்று.''

''ஓ—''

''ஆகவே அவளைத் தீர்த்துக் கட்டிவிடத் தீர்மானித்தாய். செய்தி சேகரிக்கப் பெங்களூர் போவதாகப் புதுக் காதலியிடம் கூறிவிட்டுப் பெங்களூர் போனய். விஜய் என்ற கடத்தல்கார ஆசாமி ஒருவனுடன் தொடர்பு கொண்டாய். இருவருமாக அவளை டெலிபோனில் அழைத்து 'ஜோக்' பால்ஸுக்கு வரவழைத்து அருவியில் தள்ளி 'க்ளோஸ்' செய்துவிட்டீர்கள்.''

''மாலு!'' என்று ஏதோ சொல்ல வாய் எடுத்தான் ரமேஷ். சாவிக் கொத்து குலுங்கும் ஓசையும், அடித் தொண்டையில் யாரோ செருமிக்கொள்ளும் ஓசையும் கேட்டன. ரமேஷ் — மாலு இருவருமே திரும்பிப் பார்த்தார்கள். கடுகடுப்பான முகத்துடன் சேகர் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. ''மாலு! ஐந்து நிமிஷம் முடிந்து விட்டது.''

''இதோ வந்து விட்டேன், அண்ணு!'' என்று மாலதி திரும்பிக் கண்களைத் துடைத்துக்கொண்டாள். ரமேஷைக் கனல் கக்கப் பார்த்துக் கடைசி அஸ்திரத்தை எறிந்தாள். ''ரமேஷ்! பெண்களை ஏமாற்றிய எந்த அயோக்கியனும் வாழ்ந்தது இல்லை. தனத்தின் ஆவி உன்னைச் சும்மா விடாது. அந்த உன் கூட்டாளி விஜயனைச் சுற்றி வலை வீசியாகி விட்டது. கிடைத்ததும் உங்கள் இருவரையுமே தூக்குமேடை வழியாக அந்தத் தனத்திடமே அனுப்பி விடுவார்கள். நாட்களை எண்ணிக் கொண்டிருங்கள். இதைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்—பை!''

அடுத்த நிமிஷம் கிராதிக் கதவுகள் இடிபடும் ஓசை, பூட்டிலே சாவியைத் திருப்பும் ஓசை, 'தட்தட், தட்தட்' என்று இரண்டு ஜோடி பாத அணிகள் நடந்து செல்லும் ஓசை எல்லாம் வரிசையாகக் கேட்டன.

ஒருவர் கேள்வி; பலர் பதில்!....

'உலகம் திருந்த வழி என்ன?'

''உலகம் திருந்த வேண்டுமா ? முதலில் உன்னை யோக்கியனாக ஆக்கிக் கொள். அடுத்த விநாடியே உலகத்தில் ஓர்அயோக்கியன் குறைந்திருப்பதை உணர்வாய்.''

-கார்லைல்

✖ ✖ ✖

'அவமானம் எது ?'

''தொழில் எத்தனை கீழ்த்தரமானாலும் அதைச் செய்வதில் அவமானம் ஒன்றுமில்லை. சோம்பல் ஒன்றுதான் அவமானம்.''

-டால்ஸ்டாய்

✖ ✖ ✖

'சட்டம் எதைப் போன்றது?'

''சட்டம் சிலந்தி வலை போன்றது. அதில் சிறு ஈக்கள் சிக்கிக் கொள்ளும். ஆனால் குளவிகளும், வண்டுகளும் அதை அறுத்துக் கொண்டு ஓடி விடும்.''

-ஸ்விஃப்ட்

✖ ✖ ✖

'இயற்கையின் அற்புதம் என்ன?'

''இயற்கையின் அற்புதத்தைப் பாருங்கள். பல வருடங்களுக்குப் பின்,நீங்கள் மூக்குக் கண்ணாடி போடப் போவதை உணர்ந்து காதுகளை முன்பே படைத்திருக்கிறதே !''

- வில்லியம் காலின்ஸ்

✖ ✖ ✖

'அழகு என்பது என்ன?'

''அழகு - சிறிது காலம் நிலைத்திருக்கும் ஓர் ஆணவ ஆட்சி.''

- சாக்ரடீஸ்

தொகுப்பு :
கொ. வெ. தூரிகை

மிஸஸ் பணிக்கர் துயரமே வடிவாக, மடியில் கைகளைக் கோத்துக் கொண்டு உட்கார்ந்தாள். அவள் முகம் வெளிறிக் கிடந்தாள். மாது அருகிலிருந்தாள்.

''மேடம் பணிக்கர்! இந்தத் துயரம் நிறைந்த வேளையில் உங்களைச் சிரமப்படுத்துவதற்காக ரொம்பவும் வருந்துகிறேன்'' என்ற சேகர், மேஜை டிராயரைத் திறந்து ஒரு சின்ன டேப் ரிகார்டரை எடுத்து மேஜையின்மீது வைத்தான்.

''கோபால் ஆர் யு ரெடி?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு காஸெட்டை ரிக்கார்டரில் போட்டான் சேகர். ''ரெடி ஸார்'' என்றவாறே நோட் புக்கைப் பிரித்துக் கொண்டார் சேகரின் உதவியாளர் கோபால்.

''மேடம்! இப்போது இந்த டேப்பில் இரண்டு குரல்கள் கேட்கும். நன்றாகக் காது கொடுத்துக் கேளுங்கள். கேட்டுவிட்டுப் பேசுகிற இரண்டு குரல்களும் யாருக்குரியவை என்று சொல்ல முடிகிறதா பாருங்கள்.''

பட்டனைத் தட்டியதும் சக்கரங்கள் சுழன்றன. 'கிர்...கர்...கர்' என்ற சத்தம் வந்தது. பிறகு திடீரென்று ஓர் ஆண் குரல் கேட்டது. ''தேவகி! சீக்கிரம் சொல்! இங்கே எங்கே வந்தாய்?''என்று ஆச்சரியத்துடன் கேட்டது.

''எங்கே வந்தேனா? உன்னைப் பழி வாங்க வந்திருக்கிறேன். கொன்று குவிக்க வந்திருக்கிறேன். ஆயிரம் துண்டுகளாகக் கிழித்துப் போட்டுவிட வந்திருக்கிறேன். பாவி! உனக்கு எத்தனை பெரிய மாளிகை? எத்தனை சுகபோக வாழ்க்கை? எத்தனை ஆள் அம்பு? இப்போதுதான்டா தெரிகிறது, ஏன் என் தங்கையைக் கைவிட்டுவிட்டு ஓடிவந்தாய் என்று...''

''கத்தாதே தேவகி! இந்த மாளிகை, இந்தப் பணம், இந்தச் சுகபோகம் — இவற்றுக்கெல்லாமிடையில் நான் துளிக்கூட நிம்மதியாக இல்லை தேவகி! நரக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இந்தச் சனியனையெல்லாம் விட்டு எப்போது விடுதலை பெறப் போகிறோம் என்று துடித்துக் கொண்டிருக்கிறேன்.



இந்தப் பணம், காசு; வீடு வாசல், எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்திருக்கிற பூதம் என் வாழ்க்கையை ரணமாகக் கிறிக்கொண்டிருக்கிறது. கடவுள் எல்லாவற்றையும் ஒரு தண்டனையாகவே மாற்றி விட்டார் தேவகி. இதை யெல்லாம் எடுத்துக் கொண்டு என் நிர்மலாவை மட்டும் எனக்குக் கொடுத்தால் மகிழ்ச்சியோடு உலகின் எந்தக் கோடிக்கும் போய்க் கூலி வேலை செய்தாவது பிழைத்துக் கொள்ள நான் தயார் தேவகி—''

''உன் பாவ வாய்க்கு நிர்மலாவின் பெயரைச் சொல்லக் கூட உரிமை கிடையாது.''

''அவள் இப்போது எங்கே இருக்கிறாள் தேவகி?''

''அதை நீ தெரிந்துகொள்ளாமல் இருப்பதே அவளுக்கு நல்லது. எதற்காகக் கேட்கிறாய்? பாவி! மீண்டும் அவள் வாழ்க்கையில் தலையிட்டு அதை நாசப்படுத்துவதற்காகவா?''


''ஒருநாளும் மாட்டேன். அவள் மீது நான் வைத்திருந்தது அத்தனை சாதாரண அன்பல்ல. அதோ பார்! அவளுடைய நிகரற்ற கண் விழிகளையும் இரப்பைகளையும் உயிருள்ளது போலவே செய்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு விநாடியும் அதைப் பார்த்து உருகிக் கதறிக் கொண்டிருக்கிறேன், தேவகி! அவள் எங்கே இருக்கிறாள்? தயவு செய்து சொல் தேவகி. சாவதற்கு முன் அவளை ஒரு தடவை பார்த்துவிட்டால்தான் என் நெஞ்சு வேகும். அவள் உயிரோடு இருக்கிறாளா? ஊரை விட்டுப் போய்விட்டாள் என்றும், எங்கோ ஆசுபத்திரியில் செத்துப் போய்விட்டாள் என்றும் ராஜமுந்திரியில் சொன்னார்களே—''

''சீச்சீ! என்ன பொய்! அவள் எதற்காகச் சாக வேண்டும், அயோக்கியனான நீயே உயிரோடு இருக்கும்போது? — அவள் உயிரோடு தான் இருக்கிறாள், சௌக்கியமாக இருக்கிறாள்.''

''சௌக்கியமாக இருக்கிறாளா?''

''சௌக்கியமாக எப்படி இருக்க முடியும்? உன்னை உயிருக்கும் மேலாக நேசித்தாளே! இன்னும் உன்னைத்தான் மனத்தில் வைத்துக் கொண்டு உருகிக் கொண்டிருக்கிறாள். நீ அவளைக் கைவிட்டு விட்டதாக அவள் நினைக்கவில்லை. விதி பிரித்து விட்டதாகவே நினைத்திருக்கிறாள்..... அப்பா அவளை ஒரு பெரிய டாக்டருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்

கம்ப்யூட்டர் கிண்டல்!



தார். 'உன்னை மறந்து விட்டுப் புது வாழ்வு தொடங்கும்படி நான் எவ்வளவோ படித்துப் படித்துச் சொன்னேன். அவள் புது வாழ்வு தொடங்கவில்லை. டாக்டருடன் ஒட்டவே இல்லை. நரக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அதைச் சீர்ப்படுத்த உன் உதவியைக் கோரித்தான் வந்தேன்...நாலு வருஷங்களாக உன்னைத் தேடி அலைகிறேன்....''

''நான் என்ன செய்ய வேண்டும் தேவகி?''

''நீ ஒரு கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும்.... நீ அவளை என்றும் நேசிக்கவில்லை என்றும், தாரிணியுடன் சந்தோஷமாக இருப்பதாகவும் எனக்கு எழுதுகிற மாதிரி ஒரு கடிதம் எழுதிக் கொடு. அதைப் பார்த்து அவள் உன்னை வெறுத்தால்தான் அவளுக்கு வாழ்வு.''

''நானே நேரில் வந்து அவள் மனத்தை மாற்றுகிறேன், தேவகி.''

''கூடாது! நீ அவளைப் பார்க்கவே கூடாது. கடிதம்தான் எழுதித் தரவேண்டும். அவளை நீ நேசித்தது உண்மையானால் இதை நீ கட்டாயம் செய்வாய்.''

''அவளை ஒரு தடவையாவது நான் நேரில் பார்த்துவிடுகிறேன் தேவகி! ப்ளீஸ்!''

''கூடாது... கூடவே கூடாது... கடிதம் எழுதித் தரப் போகிறாயா இல்லையா?''

பதில் இல்லை. டேப் 'ஙிர்ர்ர்' என்று வெறுமையாக நகர்ந்தது. பிறகு ''சரி, தேவகி! எழுதித் தருகிறேன். ஆனால் இப்போ முடியாது. இன்று பாரிபூர் மகாராணி இங்கே வருகிறாள். பெரிய விருந்துக்காக எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன... உன் விலாசத்தைக் கொடுத்து விட்டுப் போ. நாளை மறுநாள் எழுதி அனுப்பி விடுகிறேன். அவள் எங்கேயாவது நன்றாக இருந்தால் அதுவே எனக்குப் போதும்.''

''ஒரு காகிதமும் பென்சிலும் கொடு. என் விலாசத்தை எழுதித் தருகிறேன்.''


டேப் 'டக்' என்று நின்றது. பட்டனைத் தட்டினான் சேகர்.

''இதில் பெண் குரல் யார் என்று தெரியவில்லை. ஆண் குரலைத் தெரிகிறது.... என் கணவர் டாக்டரின் குரல்தான்!'' என்றாள் மிஸஸ் டாணிக்கர்.

சேகரின் விழிகள் வியப்பால் விரிந்தன.

(தொடரும்)

கே.வி.முரளி



மேற்கத்திய இசை அமைத்த முத்துஸ்வாமி தீக்ஷிதர்

டி. எஸ். பார்த்தசாரதி

[கலப்பு இசை என்ற தலைப்பில் அக்டோபர் 12ந் தேதி கல்கி இதழில் ஒரு விமர்சனம் வெளியாகி யிருக்கிறது. அதன் அடிப்படை வாதமே தவறு என்றும் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதரே மேற்கத்திய இசை வடிவத்தில் வடமொழியில் சாஹித்தியங்கள் இயற்றியுள்ளார் என்றும் திரு டி. எஸ். பார்த்தசாரதி நமது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். எனவே மேற்படி விமர்சனத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் கலைஞர்களுக்கு நமது இதய பூர்வமான வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதே நேரத்தில் அந்த விமர்சனம், திரு பார்த்தசாரதி இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டுதலாக அமைந்தது என்ற அளவுக்கு மகிழவும் செய்கிறோம்.

- ஆசிரியர்]

"இசை என்பது பல சமுதாயங்களுக் கிடையே உள்ள வேற்றுமைகளைக் குறைத்து, மனிதாபிமானத்தை இணைக்கும் சக்தியைத் தன்னகத்தே கொண்டது. உலக மக்களிடையே ஒருமைப்பாட்டை 'வேறு எந்த சாதனமும் சாதிக்க முடியாத வகையில் இசை ஏற்படுத்தும்'' என்று வயலின் மேதை யெஹூதி மெநுஹின் அகில உலக இசை வாரத்தை யொட்டி விடுத்த அறிக்கையில் வற்புறுத்தியிருப்பது பல்லாயிரக்கணக்கான இசையன்பர்களின் மனத்தை மிகவும் கவர்ந்திருக்கிறது.

இசையின் மூலம் இத்தகைய உலக ஒருமைப்பாடு உண்டாவதற்கு, இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ் நாட்டில் தோன்றிய ஒருவர் அஸ்திவாரம் அமைத்தார் என்பது பலருக்கு வியப்பை விளைவிக்கலாம். ஓரளவு இந்துஸ்தானி இசையின் அம்சங்களையும் ராகங்களையும் தமது கிருதிகளில் அமைத்த முத்துஸ்வாமி தீட்சிதர் அவர்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட மேற்கத்திய இசை வடிவங்களுக்கு இனிய வடமொழியில் சாஹித்யம் இயற்றி, இந்தியரேயன்றி மேல்நாட்டவரும் அவற்றைப் பாடி மகிழுமாறு உதவியிருக்கிறார். ஐரோப்பிய இசைக்கும் அவருக்கும் ஏற்பட்ட தொடர்பையும், அவர் பாண்டு (Band) மெட்டுக்களுக்குச் சாஹித்யம் அமைத்ததையும் பற்றிய வரலாறு சுவாரசியமானது.



முத்துஸ்வாமி தீட்சிதரின் தந்தையாரான ராமசாமி தீட்சிதர் அவர்கள் சென்னைக்கு அடுத்த மணலி கிராமத்தைச் சேர்ந்த சங்கீத ரசிகரும் கொடை வள்ளலுமான வேங்கட கிருஷ்ண முதலியார் என்ற சின்னய்யா முதலியாரால் சில வருடங்கள் ஆதரிக்கப்பட்டு வந்தார். அச்சமயம் ராமஸ்வாமி தீட்சிதரின் குமாரர்களான முத்துஸ்வாமி, சின்னஸ்வாமி, பாலஸ்வாமி ஆகிய மூவரும் உடன் இருந்தார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியில் துபாஷாக இருந்த முதலியார் அவர்கள் தமது அலுவல்களுக்காக அடிக்கடி ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குச் செல்வது வழக்கம். அங்கு வாசிக்கப்பட்டு வந்த இங்கிலீஷ் பாண்டு இசையைக் கேட்டு ரசித்த முதலியார், அச்சமயம் தந்தையிடம் சங்கீதப் பயிற்சி பெற்று வந்த முத்துஸ்வாமி தீட்சிதரையும் அவருடைய இரு தம்பிகளையும்



கோட்டைக்கு அழைத்துச் சென்று மேற்கத்திய இசையைக் கேட்குமாறு செய்தார். ஓர் ஐரோப்பிய வயலின் ஆசிரியரை அமர்த்திப் பாலஸ்வாமி தீட்சிதருக்கு வயலின் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். மூன்று வருடப் பயிற்சிக்குப் பின்னர் பாலஸ்வாமி தீட்சிதர் ஐரோப்பிய இசையைத் தவிர, கர்நாடக சங்கீதத்தையும் சாதகம் செய்து சிறந்த முறையில் வாசிக்கும் திறமை பெற்றார். தற்காலத்து சங்கீதக் கச்சேரிகளில் வயலின் இன்றியமையாத வாத்தியமாக விளங்குவதற்கு பாலஸ்வாமி தீட்சிதரே காரணபூதர் ஆவார். வீணையிலும் வாய்ப் பாட்டிலும் சிறந்த பயிற்சி பெற்றிருந்த முத்துஸ்வாமி தீட்சிதரும் கோட்டையில் பாண்டு கோஷ்டியினர் வாசித்து வந்த வர்ண மெட்டுக்களைப் பாடம் செய்து கொண்டார்.

பல வருடங்களுக்குப் பிறகு கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த கர்னல் ப்ரௌன் என்பவரின் ஆலோசனைப்படி முத்துஸ்வாமி தீட்சிதர் சுமார் ஐம்பது மேற்கத்திய இசை மெட்டுக்களுக்குச் சம்ஸ்கிருதத்தில் சாஹித்யம் அமைத்து உதவினார். இவற்றின் கையெழுத்துப் பிரதி ஒன்று சென்னை அரசாங்க ஓரியண்டல் ஏட்டுச் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதன்படி அந்த சாஹித்தியங்கள் 1832ம் ஆண்டில் கவனம் செய்யப்பட்டவை போல் தோன்றுகின்றன.

நோட்டு ஸ்வரங்கள் எனப்படும் இவை கர்னல் ப்ரௌன் அவர்களுக்கு அர்ப்பணம் செய்யப் பட்டன என்றும் தெரிய வருகிறது.

பாலஸ்வாமி தீட்சிதரின் பேரனும், 'ஸங்கீத சம்பிரதாய பிரதர்சினி' என்ற ஒப்பற்ற இசை நூலின் ஆசிரியருமான சுப்பராம தீட்சிதர் 1905ம் ஆண்டு பிரசுரிக்கப்பெற்ற தமது 'பிரதம அப்யாஸ புஸ்தகம்' என்ற நூலில் முத்துஸ்வாமி தீட்சிதர் இயற்றியிருந்த மேற்கத்திய இசை வடிவங்களுள் முப்பத்து மூன்றை ஸ்வர தாளக் குறிப்புக்களுடன் அச்சிட்டார். இவற்றின் தலைப்பில் எழுதியுள்ள ஒரு குறிப்பில் அவர், ''இந்த நோட்டு ஸ்வரங்களில் விசேஷமாகக் கமகங்கள் கிடையா. இந்த ஸ்வரங்கள் அனைத்தும் சங்கராபரண ராகமே. இவை திச்ர கதியிலும் சதுரச்ர கதியிலும் அமைந்துள்ளன. இந்த ஸ்வர சாகித்தியங்கள் பாடுவதற்கும், வீணையில் வாசிப்பதற்கும் சுலபமாகவும் ரஞ்சகமாகவும் இருப்பதுடன், ஆரம்பப் பயிற்சி செய்பவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்'' என்று எழுதியிருக்கிறார்.

''சக்தி ஸஹித கணபதிம்
 சங்கராதி ஸேவிதம் — வி
ரக்த ஸகல முநிவர
 ஸுரராஜ விநுத குருகுஹம்
பக்தாளி போஷகம்
 பவஸுதம் விநாயகம்
புக்தி முக்தி ப்ரதம் பூஷிதாங்கம்
 ரக்த பாதாம்புஜம் பாவயாமி''

என்பது விக்கினேசுவர துதியாகிய முதல் நோட்டு ஸ்வரம். பின்னர் தீட்சிதர் சிவபெருமான், அம்பிகை, முருகன், விஷ்ணு, ராமபிரான் முதலிய பல தெய்வங்களைச் சிறிதும் பேதமின்றி எளிய, இனிய பதங்களால் போற்றியிருக்கிறார். இசையை ஒதுக்கிவிட்டு வெறும் சாகித்தியமாகப் படித்தாலும் தீட்சிதரின் இந்த சாகித்தியங்கள் தேன் போல இனிக்கின்றன. இவை அனைத்திலுமே 'குருகுஹ' முத்திரை அமைந்துள்ளது. விசிஷ்டாத்வைத மதத்தை ஸ்தாபித்த ஸ்ரீ பெரும்பூதூர் ராமானுஜாச்சாரியார் துதியாக அமைந்துள்ள 'பூதபுரேசம்' என்ற நோட்டு ஸ்வரத்தில் மாத்திரம் முத்திரை காணப்படவில்லை.

God save the King என்ற இங்கிலீஷ் தேசிய கீதம் தீட்சிதரை மிகவும் கவர்ந்திருக்க வேண்டும். இந்த மெட்டில் அவர் அமைத்துள்ள பாடலில் அவருடைய முத்திரையும் வருகிறது.

''ஸந்ததம் பாஹி மாம் ஸங்கீத ச்யாமலே
ஸர்வாதாரே — ஜனனி
சிந்திதார்த்த ப்ரதே சித்ரூபிணி சிவே
ஸ்ரீ குருகுஹ ஸேவிதே சிவ மோஹாகாரே.''

இவற்றிலிருந்து தீட்சிதர் போன்ற நமது வாக்கேயக்காரர்கள் மேற்கத்திய இசை மீது மோகம் கொண்டு அதற்கு முக்கியத்துவம் அளித்தனர் என்று நாம் முடிவு செய்துவிடக் கூடாது. தியாகராஜஸ்வாமி அவர்களும் மேல் நாட்டு மெட்டுக்களைத் தழுவி ''வர லீல கானலோல'', ''ரமிஞ்சுவாரெவரு'' என்ற இரு கிருதிகளை இயற்றியிருக்கிறார். பிற்காலத்தில் வீணை குப்பையர், கரூர் தட்சிணாமூர்த்தி முதலியோரின் கிருதிகள் சிலவற்றில் இத்தகைய தழுவல்களைக் காண்கிறோம். மற்ற இசை முறைகளில் உள்ள வடிவங்களை எடுத்துக் கையாண்டு சுவைப்பது தமிழ் நாட்டினரின் பரந்த மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மகாராஷ்டிரர்களின் 'கீர்த்தன்' என்ற பிரவசன முறையை நமக்கே சொந்தமாக்கிக் கொண்டு 'ஹரிகதை' என்ற ஒப்பற்ற கலை வடிவத்தை நாம் அமைத்துக்கொண்டோம். தில்லானா, ஜாவளி முதலிய முறைகளையும் நமது சங்கீதத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டோம். ராகமும், தாளமும், கமகங்களும்தாம் கர்நாடக சங்கீதத்தின் ஜீவநாடிகள் என்பது தீட்சிதருக்குத் தெரியாததல்ல. நூற்றுக்கணக்கான மகோந்நத கிருதிகளைப் படைத்தவர் அல்லவா அவர்? ஆகவே பலதரப்பட்ட அவருடைய மேதாவிலாசத்தின் சில கோணங்களாக நாம் அவரது இந்துஸ்தானி இசை வடிவங்களையும், நோட்டு ஸ்வர சாகித்தியங்களையும் சுவைத்து மகிழ்வோம்!

கல்கி

மகிழ்ச்சியும்
பெருமிதமும் பொங்க
வழங்கும்

மகோன்னத
சரித்திர நவீனம்

கண்ணதாசன்

எழுதும்

சேரமான் காதலி

விரைவில்
ஆரம்பமாகிறது



மேலட்டையில்: கண்ணதாசன். வண்ணப் படம்: உத்ரா



யார் சொன்னது?
சாஸ்திரியாரின் கடையில் 9 கஜம் புடவைதான் இருக்கிறது என்று.
பாசம் மிக்க மாமியாருக்கு ஏற்ற 9 கஜமும் உண்டு.
நேசம் மிக்க மருமகளுக்கு ஏற்ற 6 கஜமும் உண்டு.
சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்
வடக்கு மாட வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.
போன்: 71719
கல்கத்தா: 14-A, பார்க்ஸைட் ரோட்,
கல்கத்தா-26 போன்: 46-3976
ஜம்ஷெட்பூர்: மதருவலி சம்மேளனி,
"L" ரோடு, ஜம்ஷெட்பூர்



ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்
EYETEX
BINDI
EYETEX
BINDI
EYETEX
REGD.
EYETEX- DELUXE BINDI PENCIL
ARAVIND LABORATORIES MADRAS-600 033

எந்தவிதக் கதாபாத்திரமாக இருந்தாலும், அதை ஏற்றுக் கொண்டுவிட்டால், அந்தப் பாத்திரத்துக்குத் தம் திறமையால் விசேஷ மெருகூட்டும் சாமர்த்தியம் 'சீனியர்' திரைப்பட நடிகைகள் வெகு சிலருக்கே உண்டு. அந்த வெகு சிலரில் சௌகார் ஜானகி குறிப்பிடத் தக்கவர்.

எனக்கும் ஜானகி அவர்களுக்கும் அறிமுகமான நிகழ்ச்சியே விநோதமானது! நண்பர் கே. பாலசந்தர், 'மேஜர் சந்திரகாந்த்' நாடகத்தை வெற்றிகரமாக எழுதித் தயாரித்த



திறமைமிக்க திலகங்கள் சௌகார் ஜானகி

கையோடு 'மெழுகுவத்தி' என்ற நாடகத்தை எழுதினார். இந்தப் புது நாடகத்துக்கு யாரைக் கதாநாயகியாகப் போடுவது என்ற கேள்வி எழுந்தது.

அப்போது பாலசந்தரோ நானோ, திரைப் படத் துறையில் நுழைந்திருக்கவில்லை. நாடக உலகுக்குத்தான் அறிமுகமாகி யிருந்தோம்.

திடீரென்று பாலசந்தர், ''இந்தக் கதா நாயகி 'ரோஜு'க்குச் சௌகார் ஜானகிதான் மிகப் பொருத்தமானவர். ஆனால் அவர் ஒரு 'பிஸி' திரைப்பட நடிகையாயிற்றே! மேடையில் நடிக்க அவருக்கு அவகாசம் இருக்குமா! ஒப்புதல் அளிப்பாரா?'' என்று தம் விருப்பத்தையும் வெளிப்படுத்திக் கேள்விக் குறியையும் எழுப்பினார்.

அப்போது நான் டெலிபோன் இலாக்காவில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். முகம் அறியாதவர்கள் பலரிடம் டெலிபோனில் பேசி, அவர்களின் போன் வசதிக் குறைகளைக் கேட்டு அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய வழி காண்பது என் பணியின் ஒரு பகுதி. ஆகவே, அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் பாலசந்தருக்கு அபயம் அளித்தேன்.

''டோண்ட் வொர்ரி, நான் ஜானகி அவர்களுடன் டெலிபோனில் பேசிப் பார்க்கிறேன். அவர்கள் பதிலை அனுசரித்துப் பிறகு யோசிக்கலாம்'' என்று சொல்லிவிட்டு ஒருநாள் அப்படியே பேசவும் செய்தேன்.

'' நீங்கள் யார்?'' என்று ஜானகி கேட்டார். ''நான்தான் 'மேஜர் சந்திரகாந்த்' நாடகத்தில் மேஜர் பாத்திரம் ஏற்கும் மேஜர் சுந்தரராஜன். நீங்கள்கூட ஒரு நாள் அந்த நாடகத்துக்கு வந்திருந்தீர்களே!'' என்றேன்.

''வெரிகுட்! அந்த 'மெழுகுவத்தி' நாடகக் கதையை ஒரு நாள் என்னைச் சந்தித்துச் சொல்லுங்கள். பிறகு பார்க்கலாம்!'' என்று நம்பிக்கையூட்டும் வகையில் அவரிடமிருந்து பதில் வந்தது.

எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. நான் போய்ப் பார்த்துக் கதையைச் சொன்னபோது அதில் அவர் நடிக்க மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். தமிழ் நாடக மேடைக்கு வரத் தயாரானார். அவருக்குத் தாமாகவே நாடக வசனங்களைப் படித்துப் பாடம் செய்யப் போதிய அவகாசம் இல்லாததால், நேரம் கிடைக்கும் போதெல்லாம், என்னையும் நண்பர் கோகுல்நாத்தையும் வரச் சொல்லி மனத்தில் கிரகித்துக் கொள்வார்.

அந்த நாடகம் வெற்றி அடைந்தது பற்றி அவருக்கு வெகு திருப்தி. அவரைத் துணிச்சலுடன் நாடக மேடைக்கு அழைத்த என்னைப் பாராட்டி ஒரு பரிசு கொடுக்க விரும்பினார். ''நல்ல சூட் ஒன்று தைத்துக் கொள்ளுங்கள்'' என்ற ஆசியுடன் ஒரு தொகையைக் கொடுத்தார்.

சொல்பவர்: மேஜர் சுந்தரராஜன்



சர்க்கார் சம்பளத்தைத் தவிர வேறு வருமானம் என்ற வகையில் என் கைக்கு வந்த முதல் பணம் அது. ஜானகி அவர்களின் கை மிகவும் அதிர்ஷ்டம் நிறைந்த கை என்பதை என்னால் மறக்கவே முடியாது. நான் என் பணியிலிருந்து நிரந்தர விடுதலை பெற்றுத் திரைப்பட நடிகனாக மாறிய பிறகு என் வருமானம் கூடிக் கொண்டே தான் வருகிறது.

மெழுகுவத்திக்குப் பின்னர் பாலசந்தர் எழுதித் தயாரித்த வேறு சில நாடகங்களிலும் நடித்தார். 'எதிர் நீச்சல்' நாடகம் திரைப்படமான போது 'பட்டு மாமி' பாத்

திரத்தைத் தாங்கித் தமிழ் கூறும் நல்லுலக மெல்லாம் அமோக பிரசித்திபெற்றுவிட்டார். 'அடுத்தாத்து அம்புஜத்தை' முணு முணுத் துப் பாடிப் பார்க்காதவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

திரைப்படங்களில் நடிக்கும்போது, சௌகாருக்கு மனத் தடுமாற்றமே ஏற்படுவ தில்லை. தம் மனத்துக்குத் திருப்தியளிக்காத பாத்திரங்களை ஏற்க நிர்தாட்சிண்யமாக மறுத்து விடுவார். வருமானத்துக்கு மாத் திரம் அவர் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

மனத்துக்குப் பிடித்த பாத்திரத்தை ஏற்று நடிக்க ஒப்புக் கொண்டு விட்டாரோ, அப் புறம் அந்த 'ரோலி'ன் மூக்குத்தியிலிருந்து கால் மெட்டி வரை கவனம் செலுத்திப் பட்டியல் போடுவார்.

தம் வீட்டை மிக அழகாகவும் சுத்தமாக வும் வைத்திருப்பதில் நிறைய ஆர்வம் காட்டு வார். சமையற் கலையில் அவர் ஓர் 'எக்ஸ் பர்ட்'. எனக்குச் சில அயிட்டங்கள் நன்ருகத் தயார் செய்யத் தெரியும் என்ற கர்வம் உண்டு. ஆனல் ஒரு நாள் ஜானகி அவர்கள் கைப்படத் தயாரித்த சில உணவு வகைகளைச் சாப்பிட்டுவிட்டு நான் அயர்ந்து போனேன்!

எதையும் மனத்துக்குள் வைத்துக்கொண்டு நாகரிகத்துக்காக இதமாகப் பேசி வைப்பது என்ற வழக்கமே இவரிடம் கிடையாது. எதை யும் மனம் திறந்து பேசுவார். பாராட்ட வேண்டிய அவசியம் ஏற்படும்போது துணி வாகப் பாராட்டுவார். தயங்கிக் கொண்டே சந்தர்ப்பத்தை விட்டுவிட மாட்டார். நான் நடித்து வெளியான 'ராஜநாகம்' படத்தைப் பார்த்து ரசித்து ஒருநாள் டெலிபோனில் கூப்பிட்டு 'ஓஹோ' என்று பாராட்டினர்.

எந்த மொழித் திரைப்படமானுலும் நல்ல தயாரிப்பு என்று கேள்விப்பட்டால் உடனே பார்ப்பார். அத்துடன் சும்மா இருந்து விடாமல், நடிக நண்பர்களையும் அந்தப் படங்களைப் போய்ப் பார்க்கத் தூண்டுவார்.

அவருக்குத் தாய் மொழி தெலுங்கு. ஆனுலும் தமிழ்ப் படங்களுக்கான வசனங் களை,அற்புதமாக,அர்த்த பாவத்துடன் பேசும் வித்தையை நன்கு பயின்றுவிட்டார். சில புது முகங்களுக்கு இவரே சரியான தமிழ் உச்சரிப் பைக் கற்றும் கொடுப்பார். அதே நேரத்தில்; என் போன்றவர்களிடம் ''நான் அந்த 'டயலாக்கை'ச் சரியாகச் சொன்னேனு?'' என்றும் கேட்டுத் திருப்தி அடைவார்.

அவர் செட்டில் நடிக்க வந்துவிட்டால் சக நடிகர்கள்பாடு ஒரு விதத்தில் கொண் டாட்டம்தான்! தாம் வீட்டிலிருந்து ஸ்டுடியோவுக்குக் கிளம்பும்போது கூடவே, பால், காப்பி டிகாக்ஷன், தேயிலை, சர்க்கரை, எல்லாம் தனித் தனியாக எடுத்து வரச் செய் வார். தம் கையாலே காப்பி, டீ கலந்து சக நடிக நடிகையருக்குக் கொடுப்பார்.

சௌகார் ஜானகி நடித்து வெளியாகும் ஒரு படம், மொத்தக் கண்ணேட்டத்தில் வெற்றியையோ, தோல்வியையோ அடைந் திருக்கலாம். ஆனுல் அவரைப் பொறுத்த வரை, அவர் ஏற்றுக் கொண்டு நடித்த பாத் திரம், ஒருநாளும் தோல்வி அடைந்ததில்லை.

அது அவர் ராசி!

கேட்டு எழுதியவர்: **கோமதி சுவாமிநாதன்**

சிறப்பான சித்திர அகராதி

சர்வதேசப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ் நிறுவனம் தமிழ்நாட்டுக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்காக ஆக்ஸ்போர்டு பட அகராதி ஒன்றை அண்மையில் வெளியிட்டிருக்கிறது. அன்றாட வாழ்க்கையில் குழந்தைகள் எத்தனையோ பொருள் களைப் பார்க்கிறார்கள். ஆனுல் அத்தனைக்கும் முறை யான பெயர் தெரியாது. எனவே படங்களில் எண்க விட்டு அவற்றை ஆங்கிலம் - தமிழ் இரு மொழிகளி லும் பெயர் கூறி விளக்கி யிருக்கிறார்கள். படங்க ளெல்லாம் வண்ணங்களில். நூலைத் தயாரித்த திரு வேங்கடசுப்பிரமணியம் பாராட்டுக்குரியவர். படங்கள் தமிழ்மக்களுக்கு மிகவும் பழக்கமான 'ஜெ'- திரு ஜெயராஜ் பெர்னுண்டஸ் வரைந்தவை. படத்தில் அமைச்சரிடமிருந்து அகராதியின் ஒரு பிரதியை 'ஜெ' பெற்றுக் கொள்கிறார்.





மாணிக்கவேலருக்கு முத்து விழா!

''1952-ம் வருஷம் ராஜாஜி தலைமையில் ஏற்பட்ட மந்திரி சபையில் மாணிக்கவேலர் ரெவின்யூ மந்திரி; நான் நிதிமந்திரி. பத்து வருஷங்களில் கற்றுக் கொள்ளக்கூடிய நிர்வாகத் திறமையை ஆமான் ராஜாஜியிடம் இரண்டே ஆண்டுகளில் கற்றுக் கொண் டோம்!'' எனக் கூறினர், மத்திய சர்க்கார் நிதிமந்திரி திரு சி. சுப்பிரமணியம், ராஜேசுவரிகல்யாண மண்ட பத்தில் நடைபெற்ற எம். ஏ. மாணிக்கவேலர் முத்து விழாவில். ராமலிங்கர் பணிமன்றம் ஏற்பாடு செய்த விழாவில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. தலைமை வகித்தார். நாவலர் நெடுஞ்செழியன் மாணிக்கவேல ருக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். மேல்சபையில் காரசாரமான விவாத காலத்தில் திரு மாணிக்கவேலர் வேடிக்கையாகப் பதிலளித்து 'டென் ஷனை'க் குறைத்த மகிமையை நாவலர் வியந்தார்.

எங்கள் முதலாண்டு இருவார விழா

இன்னும் இரண்டே வாரத்தில் எங்கள் இரண்டாம் ஆண்டு துவக்கம். அதைக் களிப்புடன் கொண்டாட எங்கள் அன்புப் பரிசுத் திட்டம். ரூ. 1500, அதற்கும் மேற்கொண்டு வாங்குவோருக்கு, தக்க மகத்தான பரிசுகள்.

இந்த அரிய வாய்ப்பை நழுவவிடாமல் பயன் அடையுங்கள்.

தங்கம், வைரம், ஜெம்-ஸெட் ஆபரணங்கள், வெள்ளிப் பாத்திரங்கள் கலைநோக்கோடு தயாரித்தவை. உங்களுக்காகவே.

அன்புப் பரிசுத் திட்டம்!

அக்டோபர் 15 முதல் நவம்பர் 3 வரை



ADWAVE-VSJ-354 TAM

உம்மிடி சாரதி ஜுவல்லர்ஸ்

40, பாண்டி பஜார், மாம்பலம், சென்னை-600017. போன்: 442500

அன்றும் இன்றும்




நேற்று நிறுவப்பட்டது ஜோதி ஸ்டார்ட்டர்




இன்றே கனவு முடிந்தது இன்ப நாள்.

முன்னேற்றத்தின் இரகசியம்—

ஜோதி ஸ்டார்ட்டர்



ஜோதி
ஆயில்-
இம்மர்ஸ்டு
ஸ்டார்ட்டர்



ஜோதி
எய்ர்-பிரேக்
ஸ்டார்ட்டர்

மற்ற ஸ்டார்ட்டர்களைத் திரும்பத் திரும்பப் பழுது பார்க்கவோ, மாற்றிப்போடவோ தேவைப்படும் அதேநேரம் நல்லபடி ஓயாது உழைக்கிறது ஜோதி ஸ்டார்ட்டர். ஜோதி என்றாலே நீடித்த ஆயுள்-பலமுள்ள ஸ்டார்ட்டர். ஸிங்கிள் ஃபேஸ், ஓவர்லோடு, தாழ்ந்த வேல்டேஜ் ஆகியவற்றிலிருந்து மோட்டார்களைப் பாதுகாத்து எவ்வித இசைகேடான சேதமும் வராதபடி மோட்டாரைக் காப்பாற்றுகிறது இந்த ஸ்டார்ட்டர்.


ஜோதி லிமிடெட், பரோடா 390 003

quality is our creed.

everest/23/JY-tm

கிளை: எயர் லைன்ஸ் ஹோட்டல், 177/179 மவுண்ட் ரோடு, சென்னை. போன்: 85007.
வியாபாரிகள்: ராஜம் & கோ., சதி ரோடு, ஈரோடு; மேலக்கடை எலக்ட்ரிகல்ஸ், பெண்ணாடம்; ராஜா டிரேடிங் கோ., அருணாசல ஆசாரித்தெரு, சேலம்; ஆட்டோமேட்டிக் பம்ப் ஸ்பெஷலிஸ்ட்ஸ், 4 பாண்டி பஜார், சென்னை; முருகன் ஆட்டோ[illegible], காளியம்மன் கோவில் தெரு, உசிலம்பட்டி; பிரீமியர் இண்டஸ்ட்ரீஸ், செம்புதாஸ் ஸ்ட்ரீட், சென்னை.

ஒரு குடும்பத்தின் கதை



படம் முழுவதும் சோகம்தான் அதிகம். நடுத்தரக் குடும்பங்களில் சோகம்தானே அதிகமாக இருக்கிறது என்ற எண்ணம் போலும்! மூத்த மகள் ஆனந்தி தாய் போலக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறாள்; இரண்டாமவள் சாந்தி நர்ஸ் வேலை பார்க்கிறாள். மூன்றாவது பெண் வசந்தி டைப்ரைட்டிங் பயில்வதோடு டியூஷன் சொல்லிக் கொடுக்கிறாள். தம்பி பாலு வீடுதோறும் பேப்பர் போட்டுக் கொண்டு படிக்கிறான். அவனுக்கு அடுத்தவள் ஜெயந்தி கடற் கரையில் முறுக்கு, சீடை விற்கிறாள். இப்படி எறும்பாக உழைத்து வாழும் அக்குடும்பத்துக்குச் சோதனை மேல் சோதனை!

ஏழைக் குடும்பத்தின் மாப்பிள்ளையாக வந்து குடும்பத்தின் பொறுப்பையே ஏற்றுப் பொறுப்பாக நடத்தி வருபவர் முத்துராமன். அந்தக் குடும்பத்துப் பேர்களுடன் பாசத்தோடு பழகி மிக மிக இயல்பாக நடித்திருக்கிறார். தடைப்பட்டு நின்ற கல்யாணத்தினால் மனம் முறிந்துபோன பெண்ணுக்கு வாழ்வளிக்கப் போக, அவள் இறந்துபோனதும் அவள் தங்கையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையில் படம் முடிகிறது.

மூத்தவள் ஆனந்தியாக வரும் நந்திதா போஸின் நடிப்பில் விசேஷமாகச் சொல்ல எதுவும் இல்லை. அவருக்குக் குரல் கொடுத்திருப்பது சரியாயில்லை; எதிரொலிக்கிறது. வேறு தமிழ் நடிகை யாரும் அந்தப் பாத்திரத்துக்குக் கிடைக்கவில்லையோ? நர்ஸ் சாந்தியாக வரும் சுமித்ராவின் நடிப்பில் மனத் திருப்தி ஏற்படுகிறது. தன்னைக் காதலிக்கும் புற்று நோயாளியுடன் பழகினபோதும், வீட்டில் குழந்தைகளுடன் பழகினபோதும், தன் வசமிழந்து, நெறி தவறித் தன்னையே இழந்துவிட்ட தங்கையிடம் சீறியபோதும் அவர் நடிப்பு சிறப்பாயிருக்கிறது.

புற்று நோயாளியாக வரும் ஸ்ரீகாந்த், திரைக் கதையின் முக்கியமான திருப்பத்துக்கும், நல்ல முடிவுக்கும் துணை நின்று நடிப்பிலும் தலைநிமிர்ந்து நிற்கிறார்.

பணத்தாசை பிடித்த தாய்க்கு இரண்டு பிள்ளைகளும் எதிரிடையாய்ப் போய்விடுவது கதைக்கு நல்லதொரு திருப்பத்தைத் தருகிறது.

வில்லனாக மனோகரைப் பார்த்துப் பழகியவர்களுக்கு மனோகர் நல்லவனாக நடித்து அதிர்ச்சியைத் தருகிறார். — அதுவும் ஓர் ஏழை அர்ச்சகராக. என்ன பதவிசு! என்ன அடக்கம்!

திரைக் கதை, டைரக்‌ஷன், ஆகியவற்றின் பொறுப்புக்களை ஏற்றுப் பொறுப்பாக நிறைவேற்றியிருப்பவர் துரை. ஒரு பெரிய கதையைப் படமாக்க முற்பட்டு அதைக் குழப்பமில்லாமல் செய்திருப்பதே பாராட்டுக்குரியதுதானே?

பாடல்கள் படத்தின் ஓட்டத்துக்குத் தடைக் கற்களாக நிற்கின்றன. பழி வாங்கிவிட்டார்கள்.

''ஒரு குடும்பத்தின் கதை'' என்னும் தலைப்பைப் போலவே படப் பிடிப்பும் விறு விறுப்பில்லாமல் இருக்கிறது. ஆனால் முழுமையான ஒரு கதை இருக்கிறது. — **காந்தன்**

வட்ட மேஜை

கல்வியில் ஆர்வம் உள்ள நம்மில் பலருக்கு மேல்நிலைக் கல்வி கற்கப் பல காரணங்களினால் முடிவதில்லை. அவற்றுள் முக்கியமான காரணங்கள் இரண்டு: பொருளாதார வசதிக் குறைவும், கல்லூரியில் இடமின்மையுமாகும். இனி ஆர்வமுள்ள சென்னை வாசிகளுக்கு அவை இரண்டும் தடையாக இருக்காது. கல்வியில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து சில பெரியவர்களின் உதவியோடு பட்டதாரிகள் கழகம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். மேற்படி பட்டதாரிகள் கழகமானது தில்லி பல்கலைக் கழக முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் ஸ்ரீ வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்தின் எம். ஏ., எம். காம்., பட்டப் படிப்புக்கு மிகக் குறைந்த சந்தா விகிதத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு வகுப்புக்கள் நடத்தி வருகின்றது. மாதச் சந்தா ரூ.5தான். நல்ல உள்ளம் கொண்ட கல்லூரிப் பேராசிரியர்கள், மற்றும் உயர்ந்த மனம் கொண்ட பல அறிவாளிகள் ஆகியோரின் இலவசக் கல்விதானத்தைக் கொண்டு மேற்படி கழகம் நடக்கிறது. இதன் வகுப்புக்கள் தியாகராய நகர் உயர்நிலைப் பள்ளி, வெங்கட நாராயண ரோடு, தியாகராயநகர், சென்னை-17ல் நடக்கின்றன. (பனகல் பூங்காவுக்கு அருகில்). ஆண், பெண் இருபாலர்களும் இதில் சேர்ந்திருக்கிறார்கள். இதில் சேர்ந்து கற்பவர்களில் பெரும்பான்மையோர் அலுவலகங்களில் வேலை செய்பவர்களே. ஆதலால் வகுப்புகள் மாலையிலும், ஞாயிறன்று காலையிலும் நடைபெறுகின்றன.

சென்னை — 17
1—10—75 ஆர். ராமதாஸ்

தலையங்கம் படிக்கும்போது கண்களில் கண்ணீர் திரையிட்டது. திரு காமராஜின் மொத்த உருவிலான, ஆன்மீக, அரசியல் முதிர்ச்சியைத் தெளிவாகக் கூறுவதாக அமைந்துள்ளது. எளிமை மிக்க ஒரு தலைவரிடம் வலிமை மிக்கதொரு சக்தி இருப்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். தன்னலம் கருதாத காமராஜின் மறைவினால் ஏற்பட்டுள்ள பேரிழப்பை நினைக்கும்போது காமராஜ் போன்ற எளிய, திறமை மிக்க பண்பின் இருப்பிடமான தலைவர் தொடர்ந்து காந்தியத்தைக் காக்க இனிமேல் எப்போது பிறப்பாரோ என்று நெஞ்சம் பொருமுகிறது.

10—10—75
சென்னை — 5 எஸ். ஆர். கோபாலன்

திரு ''துரோணன்'' அவர்களின் போட்டிக் கதை மர்மங்கள் நிறைந்த சிறப்புச் சிறுகதை; மிகச் சிறப்பான 'எடிட்டிங்கு'க்கு ஒரு சிறு உதாரணம்:

''நெருக்கடி நிலை' பிரகடனத்துக்கு முற்பட்ட கதை !'' என்ற வரிகள் !

கண்ணதாசன் அவர்களின் சொல் வன்மைக்கு ஓர் உதாரணம்: ''பொருளா — தாரம் ?'' என்ற ஒரே வார்த்தையைப் 'பதம்' பிரித்ததுதான் ! என்ன இருந்தாலும், கண்ணதாசன் கண்ணதாசன்தான் !

கடலூர் — 2
10—10—75 கே. ஆர். கிருஷ்ணா

இன்பத் தென்றல் தொடர்கதையில் ஹாஸ்டல் வார்டன் சிஸ்டர் தெரெஸா என்று கூறி, அவரை ஒரு தமிழ் பெண்ணாகக் குடும்பப் பெண்ணாகப் படம் போட்டு நெற்றியில் காலணா அளவுக்குக் குங்குமப் பொட்டு வேறு வைத்திருக்கிறீர்களே ?

ஈரோடு — 6
10—10—75 எஸ். ராஜன்

'கல்கி' இதழ் உருவாகிய கதையினையும், அதன் பாரம்பரியத்தையும் படிக்கின்றபோது எழுத்தாளன் என்ற முறையில் எனக்கு ஓர் உணர்ச்சிக் கொந்தளிப்பு ஏற்படுகிறது. எழுதுகின்ற 'சுந்தா'வுக்கும், அதிபர் சதாசிவத்துக்கும் எனது அன்பான நமஸ்காரங்கள்.

திருச்சி — 1
10—10—75 கவித்தலம் ஆசா


“ஹைதராபாத் நகர்வலம் பற்றிய கட்டுரையுடன் வெளி வந்த கல்கி இதழ் பார்த்தேன். கடுகைத் துளைத்து ஏழ்கடலை அதில் புகுத்தியது போல் அத்தனை விஷயங்கள்! மலைத்து நிற்கிறேன் ! மிக அருமையான தொகுப்பு. எனக்கே தெரியாத பல விஷயங்கள்; உருவகங்கள்; உதாரணங்கள். மூன்றாண்டுகளாக அங்கிருந்தும் இவ்வளவு கருத்துக்களை நான் கேள்விப்பட வாய்ப்பின்றிப் போய்விட்டது !

ஹைதராபாத்
7—10—75 சி.ஜே.ஷாஜஹான்

சொத்துரிமை பற்றிய தங்கள் தலையங்கம் படித்தேன். நாட்டு மக்களின் நல் வாழ்வில் நாட்டம் கொண்டு நல்ல கருத்தினை அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளீர்கள்.

பணக்காரர்களை ஏழையாக்கும் எண்ணம் கூடாது. ஏழையைப் பணக்காரனாக்கும் இலட்சியம்தான் தேவை. செல்வந்தர்கள் மீது கடுமையான வரி விதிப்பினை உபயோகப் படுத்தினால் அவர்கள் தங்கள் தொழிலில் ஊக்கம் குன்றியவர்களாவதோடு, கஷ்டப் பட்டுச் சேர்க்கும் பணத்தில் பெரும் பகுதியை அரசாங்கத்துக்கு வரி என்ற பெயரில் கொட்டிக் கொடுக்கப் பயந்து கொண்டு வருமானத்தைக் குறைத்துக் காட்ட ஆரம்பிக்கிறார்கள். பணம் பதுங்குகிறது. மேலும் வரிகள் அதிகரிக்கும்போது பணக்காரன் அவற்றையெல்லாம் தான் உற்பத்தி செய்யும் பொருள்களின் மீது ஏற்றி வைத்து விற்கிறான். விலைகள் உயர்கின்றன. ஏழை, நடுத்தர மக்கள்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

சென்னை — 5
8—10—75 எம்.எஸ். மாரியப்பன்



உங்கள் எல்லாத் தலைவலிகளையும் போக்குகிறது ஒரே ஒரு **ஸாரிடான்**

'ரோஷ்'

5

அஞ்சு ரூபாவை விடவில்லை. ''அடியே! எதற்காக இப்படிப் பயப்படுகிறாய்? நாங்கள் உன்னை 'டிஸ்டர்ப்' செய்ய மாட்டோம். நீங்கள் இருவரும் சந்தித்துக் காதல் மொழியில் உரையாடுங்கள். நாங்கள் கிட்டக்கூட வரமாட்டோம். அந்தக் காட்சியை எட்டத்தில் இருந்துகொண்டே நாங்கள் பார்த்து மனம் மகிழ்வோம்!'' என்றாள்.

ரூபா பேச்சை மாற்றுவதற்காக ''அது போகட்டும். உன் ரோமியோ என்ன ஆனான்?'' என்று கேட்டாள்.

''படுபாவி! ஏமாற்றி விட்டான். இங்கே என்னைக் காதலிப்பதாகச் சொன்னான். அங்கே இன்னொரு பெண்ணுடன் சரசமாடி மாட்டிக் கொண்டான். அந்தப் பெண்ணின் உறவினர்கள் அவனைப் புரட்டி எடுத்துவிட்டார்கள். அதோடு அவனை வலுக் கட்டாயப் படுத்தி அவளையே மணந்துகொள்ளுமாறும் செய்து விட்டார்கள்.''

''உனக்கு எப்படித் தெரிந்தது ?''

''அவன் வலையில் மாட்டிக் கொண்டு, அவன் குழந்தைக்குத் தாயாராகவிருக்கும் அந்தப் பெண்ணே சொன்னாள்!''

''ஓ, மை காட் !'' ரூபா இடிந்துவிட்டாள்: ''நல்ல வேளை, நீ பிழைத்தாய் !''

''உயிரும் மானமும் பிழைத்தன. அதனால் ஏற்பட்ட மனக் குழப்பத்தில் பரீட்சை முடிவைப் பற்றித்தான் கவலையாக இருக்கிறது.''

'' ஏன் ? சரியாக விடைகள் எழுதவில்லையா ?''

''ரிஸல்ட் வந்தால், தானாகத் தெரிந்து போகிறது !'' என்றவண்ணம் அஞ்சு முகத்தைத் திருப்பிக் கொண்டு படுக்கையில் படுத்து விட்டாள்; பெருகும் கண்ணீரை மறைப்பதற்காக முகத்தைப் புத்தகத்தில் பதித்துக் கொண்டாள்.

கிறிஸ்துமஸ் அன்றிரவு ரூபா தன் பிரின்ஸைச் சந்திக்கக் கிளார்க்ஸ் ஹோட்டலுக்குப் போகப் போகிறாள் என்னும் செய்தி மறுநாள் பொழுது விடிந்ததும் தீயைக் காட்டிலும் வேகமாக ஹாஸ்டல் முழுதும் பரவிவிட்டது. ஒருபுறம் மாணவிகள் ரூபாவின் அதிர்ஷ்டத்தை எண்ணிப் பொறாமைத் தீயில் மாய்ந்தனர். இன்னொருபுறம் ரூபா தனக்குத் தானே பின்னிக் கொண்ட வலையில் சிக்கித் துடிதுடித்தாள். கவலையில் அவள் அன்றிரவு முழுவதும் கண் கொட்டவில்லை. பிரின்ஸைப் பார்க்க அவள் போகவில்லையென்றால் தோழிகள் அனைவரும் துளைத்தெடுத்து விடுவார்கள். போனால் அவள் சாயம் வெளுத்துவிடும். என்ன செய்வது ?

அவளுக்கு இந்த இக்கட்டிலிருந்து விடுபட ஒரே ஒரு வழிதான் தோன்றியது. அவள் கட்டிக்காத்த இரகசியத்தை ஹோட்டல் வரையிலாவது காப்பாற்ற வேண்டும் என்பதுதான் அந்த வழி. எனவே, நீர யோசித்த ரூபா ஹோட்டலுக்குப் போய் வருவது என்ற முடிவுக்கு வந்தாள். அதற்காக அவள் ஒரு திட்டமும் தீட்டிக் கொண்டாள். 'அங்கே போய்க் கொஞ்ச நேரமாவது பிரின்ஸை எதிர்பார்ப்பவள்போல் இருப்பது. திடீரென்று சிம்லா



இன்பத்

குல்ஷன் நந்தா

போக நேர்ந்துவிட்டதால் பிரின்ஸினால் வர முடியவில்லை என்று நாடகமாடுவது : அதற்குத் தனக்குத் தானே பிரின்ஸ் எழுதினாற் போல் ஒரு கடிதத்தை எழுதித் தோழிகளை நம்ப வைப்பது !'

என்ன பேஷான திட்டம் ! தன் திட்டத்தில் தானே மகிழ்ந்தவாறு அன்று மாலை அவள் புதிய மாக்ஸியை அணியலானாள். தன்னைச் சிங்காரித்துக் கொள்ள அவள் அஞ்சுவின் உதவியையும் நாடினாள். அஞ்சு அக மகிழ்ந்து போய்த் தனது அழகு சாதனங்கள் அத்தனையையும் அவள் எதிரே பரப்பிவிட்டாள். அது மட்டுமா ? தனது விலை உயர்ந்த முத்து மாலையையும் அவளுக்கு அணிவித்து அனுப்பத் திட்டமிட்டாள். ஆனால் ரூபாதான் வெகு நாசூக்காக மறுத்துவிட்டாள். ''அஞ்சு ! என் பிரின்ஸ் ரொம்ப எளிமைப் பிரியர். இதையெல்லாம் விரும்ப மாட்டார் !'' என்றாள்.

அணிபணி செய்துகொண்டு அவள் பெருத்த தன்னம்பிக்கையுடன் கிளார்க்ஸ் ஹோட்டலை நோக்கிப் புறப்பட்டாள். அவள் புறப்பட்ட தோரணையைப் பார்த்தால், நிஜ



தென்றல்

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

மாகவே அவள் காதலன் அங்கே அவளை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்றே தோன்றியது.

கொள்ளை அழகோடு அவள் கிளார்க்ஸ் ஹோட்டலின் பிரதான அறையை அடைந்த பொழுது, அங்கே கூடியிருந்த அத்தனை பேருடைய விழிகளும் அவர்களை அறியாமலே அவளை வரவேற்க நிமிர்ந்தன. பளபளவென்று ஒளிவிடும் வெள்ளை 'மாக்ஸி'யில் அவள் மெய்யாகவே சொர்க்கத்திலிருந்து இறங்கி வரும் அப்ஸர மாதெனத் தோன்றினாள். சேர்ந்தாற்போல் அத்தனை விழிகளுக்கும் விருந்தாக நிற்பதை உணர்ந்த பொழுது அவளுக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது. அந்த வெட்கத்தை மறைக்க, அவள் ஹாலைச் சுற்றி நாற்புறமும் தன் பார்வையை ஓடவிட்டாள், தான் எதிர்பார்ப்பவர்கள் வந்திருக்கிறார்களா என்பதை நோட்டமிடுபவள் போல!

அவள் குறிப்பிட்ட நேரத்துக்குச் சிறிது முன்பே வந்திருந்தாள். சக மாணவிகளைச் சந்திக்க நேர்ந்தால், அவர்களுக்குத் தன்

பிரின்ஸின் கடிதத்தைக் காட்டிச் சிக்கலிலிருந்து தப்பலாம் என்று எண்ணியே அவள் அப்படி வந்திருந்தாள். அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு பெண்கள் பலவாறாகப் பேசுவார்கள் என்பதும் அவளுக்குத் தெரியும். இருந்தாலும், தனக்குத் தானே போட்டுக் கொண்ட சக்கிர வியூகச் சுழலிலிருந்து தப்ப அவள் வேறு என்னதான் செய்ய முடியும்? மனத்துள் பலவாறாக முடி போட்டு முடி அவிழ்த்தவண்ணம் அவள் கூட்டத்திலிருந்து சற்று விலகித் தனியாகப் போய் நின்று கொண்டாள்.

எதேச்சையாக அவள் பார்வை ஒதுப்புறமாக இருந்த ஒரு மேஜையின் மீது விழுந்தது. அவள் தேன் கொட்டினாற்போலத் துடித்துப் போனாள். ஏனெனில், அவள் தோழிகள் அவளைக் காட்டிலும் கெட்டிக்காரிகள் என்பதைக் காட்டிக் கொண்டனர். ஆம், ரூபா வருவதற்கு வெகுநேரம் முன்பாகவே அவர்கள் அங்கு வந்திருந்தனர். அவர்களைக் கண்டதும் ரூபாவுக்குக் குலைநடுக்கம் எடுத்தது. அந்த முறுவலித்து அவளைப் பார்த்துக் கண் அடித்தாள். பதிலுக்கு ரூபாவும் பயந்து பயந்து இமை கொட்டினாள். அப்புறம் தன் பதற்றத்தை மறைக்க அங்கிருந்து திரும்பி ஹாலின் இன்னொரு மூலைக்குச் சென்றாள்.

நேரம் ஆக, நேரம் ஆக, ஹால் நிறைந்து வழியலாயிற்று. மேஜைகள்கூட அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் காலியாயிருந்தன. ரூபாவுக்கோ தன் தோழிகளின் பார்வையை எதிர்கொள்ளத், துணிவில்லை. இந்த நிலையில் அவள் இங்கும் அங்கும் மருள மருள விழிப்பதைத் தவிர வேறு என்ன செய்வாள்? பகட்டான உடையில் தளுக்கான ஜோடிகள், வெறியில் மிதந்த காதலர்கள், இளமைப் பூரிப்பை ஏந்தி நின்ற காதலிகள், கிறங்கும் விழிகள், கிறங்க வைக்கும் யௌவன மதர்ப்பு — இவற்றைப் பார்வையிட்டவண்ணம் அவள் அந்த அறையை வலைய வந்தாள். இனம் தெரியாததோர் அச்சம் அவள் இதயத்தை அழுத்தியது. இங்கேயே இப்படியே இறந்து இந்த அச்சத்துக்கு ஒரு முடிவு கட்ட மாட்டோமா என்றுகூடத் தோன்றியது.

திடீரென்று அவள் பார்வை ஓர் இடத்தில் நிலைத்தது. ஒரு பக்கமாக இருந்த மேஜையொன்றில் நீல நிற சூட் அணிந்த அழகிய வாலிபன் ஒருவன் தனியாக உட்கார்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ரூபாவும் காந்த சக்தியால் கவரப்பட்டவள் போல் அவனைப் பார்த்தாள். அவளுக்குத் தான் கண்ட கனவு நனவாகிவிட்டது போலவும், அவள் கற்பனையில் உதித்த பிரின்ஸ் கட்டுக் கதைகளில் வரும் அரசகுமாரனைப் போல் உருவம் மாறி அங்கு வந்து தனக்காகவே அமர்ந்திருப்பது போலவும் தோன்றியது. இப்படிக் கற்பனை செய்த மாத்திரத்தில் அவளுடைய உடல் மகிழ்ச்சியில் சிலிர்த்து விட்டது. அவள் கற்பனை உலகை விட்டு வெளியே வந்தாள்.

அந்த இளைஞன் இன்னமும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ரூபா திரும்பித் தன் தோழிகளைப் பார்த்தாள். அவர்களது விழிகள் அவளையே தொடர்ந்து கொண்டிருந்தன.

சட்டென்று ரூபா ஒரு முடிவு எடுத்தாள். அந்த இளைஞனின் மேஜையை நோக்கி நடந்தாள். அவனை அணுகி மெதுவான குரலில், "ஹலோ!" என்று அழைத்தாள்.

அந்த ஒரு சொல் இளைஞனது உடலில் மின்சாரமெனப் பாய்ந்து அவனை மெய் விதிர்க்க வைத்தது. துணுக்குற்றவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு உதடுகளில் முறுவலோட, "ஹலோ!" என்று பதிலுக்குக் கூறினான்.

"நீங்கள் யாரையோ எதிர்பார்க்கிறீர்கள் போலிருக்கிறது!" என்றவண்ணம் ரூபா அவன் அருகில் போய் நின்றாள்.

"இல்லை!" என்று சொன்னாலும் இளைஞன் அவள் கேள்வியில் சற்றுத் தடுமாறித்தான் போனான்.

"அப்படியானால் நீங்கள் தனியாகத்தான் இருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்!" ரூபா மேஜையின் மீது வைத்திருந்த பானத்தைப் பார்த்தவாறே கேட்டாள்.

"ஆ.... ஆமாம்!"

"எனக்கும் யாரும் துணையில்லை!"

"அதுதான் பார்க்கிறேனே!"

"நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளவில்லையென்றால்.... நான் இங்கே உட்காரட்டுமா?" ரூபா வெற்று நாற்காலியைக் காட்டிக் கேட்டாள்.

"ஓ, தாராளமாக! இட் வில் பி எ பிளஷர்!" அவன் சட்டென்று எழுந்து ரூபாவை உட்காருமாறு வேண்டினான்.

ரூபா திரும்பித் தன் தோழிகளைப் பார்த்தாள். புன்னகை புரிந்தவண்ணம் அவன் அருகில் அமர்ந்தாள். இளைஞன் மீண்டும் அவளை உன்னிப்பாக நோக்கவே, ரூபா வெட்கிப் போனாள்; அதே வெட்கப் பார்வையைத் தன் தோழிகள் மீது வீசினாள்.

"அவர்கள் எல்லோரும் உங்கள் தோழிகளா?"

"ஆமாம். என்னோடு கல்லூரியில் படிக்கிறார்கள். என்னுடைய 'பாய் ஃப்பிரண்டை'ப் பார்க்கும் துடிப்பில் வந்திருக்கிறார்கள்!"

"'ஓ, ஐ ஸீ!' — ஆமாம், அந்த அதிர்ஷ்டக்காரன் யாரோ?"

"நீங்கள்தான்......!"

இளைஞன் இந்தப் பதிலைக் கேட்டுத் துணுக்குற்றான். வியப்பால் விரிந்த விழிகளால் அவளைப் பார்த்து, "அது எப்படி முடியும்?" என்று கேட்டான்.

"ஏன், என் துணை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

ரேஸ் குதிரைகள் ஓட்டும் பெண்கள்!



பந்தயக் குதிரைகளை ஓட்டுவதில் ஆண்கள்தாம் வல்லவர்கள் என்று நினைக்க வேண்டாம். அதற்கும் பெண்களின் போட்டி முனைத்துள்ளது.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் ஐம்பதுக்கும் அதிகமான பெண்கள், சொந்தத்தில் ரேஸ் குதிரைகள் வைத்துப் பராமரித்து வருகிறார்கள். நூறுக்கும் அதிகமான பெண்கள், ரேஸ்களில் குதிரைகள் மீது லாகவமாகச் சவாரி செய்கிறார்கள். பலர், முதலிடத்தைப் பெற்றுப் பரிசுகளையும் தட்டிச் சென்று இருக்கிறார்கள். சூசன் என்ற 29 வயது அழகி, இந்த சீஸனில் மூன்று பெரிய குதிரைப் பந்தயங்களில் வெற்றிவாகை சூடியிருக்கிறார்.

—பிரஸ் இண்டியா



உனக்கு ட்ரு பிடிக்குமா?
யாருக்குதான் பிடிக்காது?
ட்ரு நீஸ். சிறந்த சிற்றுண்டி. தேங்காய், பால், சர்க்கரை கலந்த சுவைமிகுந்த பிஸ்கட்டுகள். விருந்தினர் விரும்புவர். விருந்தும் சிறக்கும். உறவினரும் நண்பர்களும் வரும்போது தயங்காமல் தரலாம்.
இந்தியாவில் நவீனமான தொழிலகத்தில் சுகாதார முறைபடி தரமாக தயாரிக்கப்படுபவை.
ட்ரு பிஸ்கட்டுகள் மொறுமொறுப்பானவை. புதுமணம் குன்றாமல் ருசி மிக்கவை.
TRUE NICE BISCUITS
TRUE
ட்ரு
TRUE
-பகிர்ந்திட விரும்பும் தரமிகுசுவை
ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில் — பாண்டிச்சேரி
HT-AFP-8030

மீண்டும்
உபயோகிக்கத்
தக்க பிளாஸ்டிக்
பேக்கில் வருவது
பிஜ் ஒன்றுதான்.

\+

மகத்தான
சேமிப்பு!



முதலில் மீண்டும்
உபயோகிக்கத்தக்க இந்த
அழகிய பேக்கை வாங்குங்கள் —
அதற்காகத் தனியாக
ஒன்றும் பணம் கொடுக்க வேண்டாம்!

5-தடவை நிரப்பிக் கொள்ளக் கூடிய பாலி-
பையிலிருந்து அவ்வப்போது அதில் மீண்டும்
நிரப்பிக்கொள்ளுங்கள்...ஒவ்வொரு முறையும்,
35%க்கும் அதிகமாக நீங்கள் சேமிக்கிறீர்கள்.

உயர்ந்த சேமிப்புக்கென
ஒரு ரீஃபில் மற்றும்
இரு ரீஃபில் பேக்குகளும்
கிடைக்கின்றன.

பிஜ்

கோத்ரெஜ் தயாரிப்பு

தன்னிகரற்ற க்ளீனிங் பவுடர் • உன்னதமான சேமிப்புத் திட்டம்

CMGS-68-172 Tam

"அதற்குச் சொல்லவில்லை. இருந்தாலும்....'' என்று அசடு வழிந்தான்.

''பயப்படாதீர்கள்! நான் 'ஃபோர்ட்வெண்டி' இல்லை; பேத்து — மாத்துக் காரியும் இல்லை. முதலில் கொஞ்சம் மூச்சுவிட இடம் கொடுங்கள். அப்புறம் எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லுகிறேன்!'' என்றாள் ரூபா.

அந்த நேரம் பார்த்துப் 'பணியாளன்' வந்து இருவருக்குமிடையே உருவாகிக் கொண்டிருந்த 'மூடை'க் கெடுத்துத் தொலைத்தான். அவனைப் பார்த்த இளைஞன், ''நீங்கள் என்ன அருந்துகிறீர்கள்? லைம்ஸ்டா, ஹார்டா?'' என்று கேட்டான்.

''பைன் ஆப்பிள் ஜூஸ்!''

''வேறு ஏதாவது?''

''எதுவும் வேண்டாம். தாங்க்ஸ்!''

'பணியாளன்' போன பிறகும் சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. ரூபா ஒரு சமயம் தோழிகளைப் பார்ப்பாள்; இன்னொரு சமயம் இளைஞனைப் பார்ப்பாள். இப்படியே மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் எந்தக் கல்லூரியில் படிக்கிறீர்கள்?'' இளைஞன்தான் அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தான்.

''ஜீஸஸ் அண்ட் மேரி கல்லூரியில்!''

''எந்த ஆண்டு?''

''இறுதியாண்டு!''

இளைஞன் மீண்டும் மௌனமாகிவிட்டான். அவனது பார்வை ரூபாவின் தோழிகள் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் போய்த் திரும்பி வந்தது. அவர்கள் அனைவரும் ஒரு முறை கூடக் கண் கொட்டாமல் அவ்விருவரையுமே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உங்கள் பெயர்?'' பானத்தை ஒரு கிளாஸில் சரித்துக் கொண்டே கேட்டான் இளைஞன்.

"ரூபா!''

"என்னை 'அநூப்' என்பார்கள்!''

''ஆனால் இன்றைக்கு இரவு மட்டும் நீங்கள் பிரின்ஸாக இருக்கணும். ஆமாம், பிரின்ஸாக!'' என்றாள் ரூபா.

"உங்கள் பிரின்ஸ் இதைத் தவறாக எடுத்துக் கொண்டு விட்டால்?''

''எடுத்துக் கொள்ள மாட்டார். எனக்குத் தெரியும். அவர் ரொம்பத் தங்கமானவர். அமைதியான சுபாவம். கோப தாபம் கிடையாது. பொறுமை என்றால் என்னவென்று கூடத் தெரியாது.''

''என்னை உங்களோடு பார்த்துவிட்டால் கூடவா?''

''பார்த்து விட்டால் கூடத்தான்!''

''அப்படியானால் அவர் மனிதர் இல்லை, தெய்வமாக இருக்கணும்!''

''தெய்வம் இல்லை, மனிதர்தான்! ஆனால் நான் தெய்வமாக்கி விட்டேன்!''

''அது எப்படி?''

"சொன்னேன் அல்லவா, கொஞ்சம் பொறுமையைக் கடைப் பிடியுங்கள், எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லிவிடுகிறேன் என்று! இப்படி அவசரப்பட்டால்....?''

ரூபா சிறிது நேரத்துக்கு அநூப்பின் வாயை அடைத்துவிட்டாள். ஆனால் நிமிஷத்துக்கு நிமிஷம் அவள் நிலை சிக்கலாகிக் கொண்டிருந்தது. அவளாகவே போய் மாட்டிக் கொண்ட சுழல்! அது அவளை ஆழத்துக்கு இழுத்து அமுக்கப் பார்த்தது! அதிலிருந்து விடுபட வழி தெரியாமல் திக்குமுக்காடித் திணறினாள்.

பணியாளன் ஜூஸ் கொண்டு வந்து வைத்தான். சிற்றுண்டிக்கு ஆர்டர் தரும் எண்ணத்துடன் அநூப் அவனை நிறுத்தி வைத்தான். ஆனால் ரூபா சட்டென்று ஜூஸ் கிளாஸை உதடுகளில் வைத்து உறிஞ்சத் தொடங்கினாள். தன் உள்ளத்து உணர்ச்சிகளை ஒளிக்கவும், வேறு எதுவும் பேசாமல் தவிர்க்கவும் அவள் மேற்கொண்ட முயற்சி. கிளாஸை வாய்க்கு அருகில் வைத்துக் கொண்டு, குனிந்தவாறே கீழ்க் கண்களால் அநூப்பின் முகத்தில் தோன்றி மறையும் உணர்ச்சியின் எழுச்சி — வீழ்ச்சிகளைப் படிக்கலானாள்.

''ஹலோ, ரூபா!''

அஞ்சுவின் குரல் அவளைத் தூக்கிவாரிப் போட வைத்தது. மற்றப் பெண்களை அங்கேயே விட்டு விட்டு அவள் மட்டும் ரூபாவிடம் வந்திருந்தாள். ரூபா சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, அஞ்சுவின் பார்வையோடு தன்பார்வையைப் பொருத்தி, ''ஹலோ!'' என்று மறுமொழி கூறினாள்.

"நீ வெளியே போவதாக எங்களிடம் சொல்லவே இல்லையே, ஏன்?''

"ஏதோ சொல்லவில்லை. இவரைத் தெரிந்து கொள்ள வேண்டாமா நீ? இவர்தான் பிரின்ஸ். என் 'ஃப்ரெண்ட்'!''

''ஹலோ! ஹௌ டூ யூ டூ?'' என்று கேட்டவாறே அநூப்பை நோக்கி அஞ்சு கைநீட்டினாள்.



ஏமாறாதே! ஏமாற்றாதே!

மதுரை பஸ் நிலையத்தில் எனது நண்பன் ஒருவன், தனது டெரிலின் சட்டைப் பையில் இருபது பத்து ரூபாய்களை மடித்து வைத்துக் கொண்டு வெளியூர் பஸ்ஸை எதிர்பார்த்து நின்று கொண்டிருக்கையில் அறிமுகமில்லாத நபர் ஒருவர் அவன் அருகே வந்து ''இப்படிப் பணத்தை வெளியில் தெரியும்படி வைத்துக் கொள்ள வேண்டாம். கொடுங்கள். இதோ என்னிடம் உள்ள தினசரிப் பத்திரிகையில் மடித்து வைத்துத் தருகிறேன்'' என்றார். நண்பனும் இந்த ஏற்பாடு நல்லதுதானே என நினைத்து, நன்றியும் தெரிவித்துப் பணத்தை எடுத்துக் கொடுத்திருக்கிறான். நண்பன் எதிரிலேயே அந்த நபர் பணத்தைப் பேப்பரின் மேல் வைத்து மடித்துப் பாக்கெட்டாகச் செய்து கொடுத்தார். ஊர் போய்ச் சேர்ந்த பின் பிரித்துப் பார்த்தால், வெள்ளைத் தாள்கள் மட்டுமே உள்ளே இருந்தன!

-ஆர்.வி. சுப்பிரமணியன்



பெண்கள் கல்லூரி ஒன்றில் பேராசிரியர் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருந்தார். ''தென் கிழக்கு ஆஸ்திரேலியாவில் பெண்கள் மிகவும் குறைவு. அதனால் திருமணமாகாமல் நிறைய ஆண்கள் தனித்துக் கொண்டிருக்கிறார்கள்!'' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சில் போரடித்துப் போன ஒரு மாணவி வெளியே செல்வதற்காக வாயிற்பக்கம் சென்றாள். பேராசிரியர் அவளை விளித்து, ''என்னம்மா அவ்வளவு அவசரம்? ஆஸ்திரேலியாவுக்கா போகிறாய்? அடுத்த கப்பல் போகப் பத்து நாட்கள் இருக்கிறதம்மா!'' என்றார். அந்தப் பெண் வெட்கத்துடன் திரும்பவும் வகுப்பில் வந்து அமர்ந்து கொண்டாள். வகுப்பில் ஒரே சிரிப்பு.

-கோ. செல்வராசன்

அநூப் தயக்கத்தோடு முதலில் ரூபாவைப் பார்த்தான். அப்புறமே அஞ்சுவின் பக்கம் கையை நீட்டினான்.

அஞ்சு மகிழ்ந்து போனாள். ''ரூபா! உன் 'ஃப்ரெண்ட்' பெயரால் மட்டும் இல்லை. உருவத்தால் கூடவே பிரின்ஸ்தான்!'' என்று ரூபாவைப் பார்த்துக் கூறினாள்.

''ஓ, தாங்க்யூ!'' ரூபா குரலில் சங்கோசம் குமிழியிடக் கூறினாள்.

பாண்டு வாத்தியத்தில் இசை — மெட்டு மாறியது. பல ஜோடிகள் நடனமாடத் தங்கள் தங்கள் இருக்கையைவிட்டு எழுந்தன. அஞ்சுவும் ரூபாவும்கூடத் திரும்பி அவர்களைப் பார்த்தார்கள். அஞ்சு எழுந்து நின்று அநூப்பைத் தன்னுடன் நடனமாடக் கை நீட்டி அழைத்தாள்.

''ஸாரி! ஐ ஹாவ் ஆல் ரெடி காட் எ பார்ட்னர்!'' என்று முறுவலித்தான்.

அநூப் அப்படி மறுக்கவே அஞ்சுவின் நெஞ்சம் அதிர்ந்து போயிற்று. அவனது செய்கை அவளுக்கு விஷமாகக் கசந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. ஆம், அவளால் வேறு என்ன செய்ய முடியும்?

அவளுக்கு எதிரிலேயே ரூபாவின் கைகளைப் பற்றி அநூப் நடனத்துக்கு அழைக்கவே, எரியும் தீயில் எண்ணெயிட்ட கதையாகிவிட்டது.

சூழ்நிலை தானாகவே ரூபாவுக்குச் சாதகமாகிக் கொண்டிருந்தது. அவள் உடலில் எங்கிருந்தோ ஒரு புத்துணர்வு பிறந்தது. அநூப்பின் கையைப் பற்றி எழுந்து நின்றாள்.

மேலைநாட்டு இசையும் மெட்டும் அந்தச் சூழலையே தாளமிட வைத்தன. ரூபா பிரின்ஸின் தோளைப் பற்றிக் காலோடு கால் இணைத்து ஆடலானாள். அநூப் அவளை இன்னும் நெருக்கி இழுத்துக் கொண்டான். ரூபாவின் உடல் புறுபுறுத்தது. உரோமம் சிலிர்க்க வைக்கும் அந்த அநுபவம் அவளுக்குப் புதுமையானது; விந்தையானது. அதில் அவள் தன்னை அறியாது ஒரு கிறக்கத்தில் ஆழ்ந்து போனாள் என்றாலும், வைத்த கண் வாங்காமல் தன் நடனத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் தோழிகளையும் பார்த்துக் கொண்டாள்.

''நீங்கள் நன்றாக ஆடுகிறீர்களே!'' நடனமாடியவாறே அநூப் அவளைப் பாராட்டினான்.

''உங்களை விடவா?'' ரூபா குழறினாள்.

''உண்மையைக் கேட்டால், எனக்கு இதெல்லாம் துளிக்கூடப் பிடிக்கவில்லை!''

''அப்படியானால் நடனமாட ஏன் வந்தீர்களாம்?''

''உங்களுடைய அந்தத் தோழியிடமிருந்து உயிர் தப்புவதற்காக!''

''எங்கள் கல்லூரியிலேயே அவள்தான் மிகத் துறுதுறுப்பான பெண். நன்றாக நடனமாடுவாள். அவளோடு ஆடினால் நீங்கள் அக மகிழ்ந்து போவீர்கள்!''

''அப்படியெல்லாம் நான் அசிங்கமாகப் போகமாட்டேன்.''

''அசிங்கமா? என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம். எனக்கென்று ஒரு பார்ட்னர் இருக்கும்பொழுது இன்னொருவரை ஏறெடுத்தும் பார்க்கலாமோ?'' அநூப் ரூபாவின் மோவாயைச் சற்றுத் தூக்கிப் பிடித்தான்.

அவனது விழிகளோடு விழிகள் கலக்கவே, ரூபாவின் உடலில் மின் அலை பாய்வதுபோல் இருந்தது. அவள் உள்ளத்தில் ஏக காலத்தில் அன்பென்னும் அகல் விளக்குகள் பல சுடர் விட்டன. அடுத்தகணம் அவ்வளவும் அணைந்தாற் போன்ற வேதனையில் துடிதுடித்துப் போனாள். அவள் இசைக்கேற்பப்பிரின்ஸுடன் அடி சேர்த்து ஆடிக் கொண்டிருந்தாள். என்றாலும் கற்பனை ஓட்டம் சட்டென்று நின்றுவிட்டது. அவள் செவிகளில் இசையின் இனிய ஒலி தேனொழுக விழுந்து கொண்டிருந்தது. என்றாலும் சிந்திக்கும் ஆற்றல் சிதறிவிட்டது. உள்ளத்து உளைச்சலிலிருந்து வெளிக் கிளம்பும் முயற்சியில், தான் சரியான சுழலில் சிக்கிக் கொண்டு விட்டோம் என்பதை அவள் உணர்ந்தாள். அட கடவுளே! கடைசியில் என்ன ஆயிற்று? அவள் எங்கிருந்து புறப்பட்டு, எங்கே வந்து சேர்ந்தாள்? இப்பொழுதுதான் சிறிது நேரத்துக்குமுன் அவன் எத்தனை தொலைவில் இருந்தான்! எல்லாமே வெறும் கற்பனையாயிருந்தது. ஆனால் இப்பொழுது எத்தனை நெருங்கி வந்துவிட்டான்? எல்லாமே உண்மையாக அல்லவா ஆகிவிட்டது!

இனி ஓர் அடிகூட மேலே போகக் கூடாது!

சட்டென்று அவள் ஒரு சொடுக்கில் தன்னை அநூப்பின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டாள். மெய்மறந்து நடனமாடும் மக்கள் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு, தொப்பென்று தன் நாற்காலியில் போய் விழுந்தாள்.

நடனம் நடந்து கொண்டிருந்தது. இசை ஒலித்துக் கொண்டிருந்தது. அத்தனை பெரிய கூட்டத்தில் யாருமே ஒன்றைக் கவனிக்கவில்லை. 'இரு உள்ளங்களில் ஏக காலத்தில் சேர்ந்தாற்போல் எத்தகைய விந்தைப் புயல் எழுந்தது? கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் அது எப்படி அடங்கிப் போயிற்று?' என்பதுதான் அது.

(தொடரும்)

கூந்தலுக்கு சாயம்  **இப்படிச் பூசாதீர்கள்!**



பாரதத்திலேயே
முதன்முதல்
தயாராகும் தானே-பரவும்
ஹேர் டை
உபயோகியுங்கள்.

புதியது!

கோத்ரெஜ்


பர்மனெண்ட் ஹேர் டை

சமமாகவும் இயற்கையாகவும் தானே பரவுகிறது

இப்போது, கூந்தலை இழை இழையாகப் பிரித்துச் சாயமேற்றும் தொல்லையில்லை. நிரூபணம் பெற்ற, தன்னிகரற்ற கோத்ரெஜ் பார்முலா (ஆக்க இலக்கணம்) கூந்தலுக்குச் சாயமேற்று வதை, கூந்தலை அலசுவதைப் போல் அத்தனை எளிதாக்கி விட்டது— காரணம், நீங்கள் பூசும்போதே, அதன் வண்ணம், சமமாகவும் எளிதாகவும் தானே பரவுகிறது.

கோத்ரெஜ் பர்மனெண்ட ஹேர் டை— இதில் தீங்கு விளைவிக்கும் ரசாயனப் பொருட்கள் எதுவுமில்லை. மென்மையான, மனதுக்கினிய நறுமணம் கொண்டது. உங்கள் கூந்தலைப் பல வாரங்கள் மென்மையாகவும் இளமை மெருகோடும் இயற்கையான கருமையோடும் விளங்கச் செய்கிறது.

**ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூட! 2 வண்ணங்கள் :
இயற்கையான கருமை,
கரும் பழுப்பு.**



கோத்ரெஜ் பர்மனெண்ட் ஹேர் டை, இதர ஹேர் டைகளை, பிந்தியவைகளாக்கிவிட்டது. ஷாம்பூ தேய்ப்பது போல் அத்தனை எளிது, இதனை உபயோகிப்பது.

CMGS-69-162 TAM

போட்டிக் கதை-8.



புதுமுகம்

-விஷ்ணுதானந்த்-



அழைப்பிதழில் கண்கள் மீண்டும் நிலைத்தன.

'போவதா ? வேண்டாமா ?'

அவளால் உடனே ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.

நந்தினி கடிகாரத்தைப் பார்த்தாள். மணி நான்கு. ஆறு மணிக்குத்தான் விழாவும் தொடங்கும்.

படப் பிடிப்பு பகல் இரண்டு மணிக்கெல்லாம் முடிந்து விட்டது. இன்னும் இரண்டு நாட்களுக்கு அவளுக்கு ஓய்வுதான் !

''பேபி!...'' என்று குரல் கொடுத்தாள் நந்தினி.

கூப்பிட்ட குரலில் ·பொருளே உணர்ந்து கொண்டாற்போல், ஒரு 'டிரே'யில் தேநீரைக் கொண்டு வந்து அங்கிருந்த மேஜையின் மீது வைத்தாள், பேபி.

நந்தினியின் காரியதரிசியாக மட்டுமல்லாமல், குடும்ப நிர்வாகத்தையும் அவள்தான் கவனித்து வந்தாள். வாங்கும் சம்பளம் ஏறத்தாழ இருந்தாலும், நந்தினி அவளிடம் வைத்திருந்த அன்பும், அவ்வப்போது அவள் மனமுவந்து செய்யும் உதவி அவளை அங்கேயே தொடர்ந்திருக்க வைத்துக் கொண்டிருந்தன.

தொலை பேசி மணி ஒலித்தது.

''ஹலோ! நந்தினி பேசுகிறேன்..''

'' நான்தான் பூர்ணசந்தர் பேசுகிறேன். நல்லவேளை, வீட்டில்தான் இருக்கிறாய். இன்றைக்கு விழாவுக்கு வருகிறாய், இல்லையா ?''

'' அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்......''

''இதில் யோசிக்க என்ன இருக்கிறது? நான் இன்னும் அரை மணியில் அங்கு வருகிறேன். என் காரிலேயே போய்விடலாம்.''

''சரி.....''

அவளால் தட்டிக் கழிக்க முடியாமல் போய்விட்டது.

துணை நடிகையாகப் பல இடங்களில் தலையைக் காட்டிக் கொண்டிருந்த நந்தினிக்குத் துணிந்து தன் படத்தில் கதாநாயகி வேடம் கொடுத்து, அவளிடம் புதைந்து கிடந்த நடிப்பாற்றலை வெளிக் கொண்டு வந்தவர் அவர்தான். அதற்குப் பிறகுதான் அவளுடைய திரைப்பட வாழ்க்கையிலேயே ஒரு திருப்பம் ஏற்பட்டது. இன்று நாடறிந்த ஒரு நட்சத்திர நடிகையாக அவள் விளங்கக் காரணமாயிருந்த

பூர்ணசந்தரின் விருப்பத்தை மீறி நடக்க அவளுக்குத் துணிவில்லை. அதனால்தான் 'வரு கிறேன்' என்று ஒப்புக் கொண்டாள்.

அவசரம் அவசரமாக மாற்றுடை தரித்துக் கொண்ட நந்தினி, கண்ணாடியில் ஒரு முறை தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள்.

'கதாநாயகியாகவே இன்னும் எத்தனை வருடங்களுக்கு நடித்துக் கொண்டிருக்க முடியும் ?'

சுகபோகமான வாழ்வு; நிறைவான வருமானம் இவற்றால் உடலும் சற்றுப் பருத்திருந்தது. வயது வேறு கூடிவிட்டது. இன்னும் இரண்டு மாதங்கள் சென்றால், வழக்கம் போல் தன் பிறந்தநாளை அவள் கொண்டாடுவாள். வயதை அவள் கூறவிட்டாலும், அவளுடைய வயது அவளுக்குத் தெரிந்து தானே இருந்தது !

திரையுலக வாழ்வில் தன் ஒளி மயமான திருப்பத்துக்குக் காரணமாக இருந்த பூர்ணசந்தரை நினைத்துக் கொண்டாள். புகழ் பெற்ற இயக்குநர் என்ற இறுமாப்பு துளியுமின்றி, அனைவருக்கும் சம அந்தஸ்து தந்து பழகும் அவரது பண்பை நினைத்துக் கொண்டாள்.

அவள் மட்டும் அன்று 'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், இன்று நடக்கும் பாராட்டு விழா அவளுக்காகத்தான் இருந்திருக்கும். குடத்திலிட்ட விளக்காக இருந்த தன்னைக் கைதூக்கிவிட்ட பூர்ண சந்தருடன் வாதிட்டு, அந்த வாய்ப்பை, 'வேண்டாம்' என்று ஒதுக்கித் தள்ளிய அந்த நிகழ்ச்சி, நினைவின் பின்னணியில் சோக கீதமாக இன்னும் இசைத்துக் கொண்டிருக்கிறது.

அவர் பெரிய மனிதர். மன வருத்தத்தோடு ஒதுங்கிக் கொண்டார் என்று சொல்வதைவிட, பெருந்தன்மையோடு விட்டுவிட்டார் என்று சொன்னால் பொருந்தும்.

ஆறு மாதங்களுக்கு முன்னால் தன் புதுப் படத்தில் நந்தினியை ஒப்பந்தம் செய்வதற்காக அவளை அணுகினார். வயதான பாத்திரத்தில் நடிக்க ஒப்புக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்ட போது, அவள் மறுத்தாள்.

''நந்தினி ! இந்த வேடத்தில் நடிப்பதற்கு உனக்கு ஏன் தயக்கம் ?.....''

''அம்மாவாக நடிக்க நான் விரும்பவில்லை......''

''என் படத்தின் கதையே ஒரு தாயைச் சுற்றித்தான் படைக்கப்பட்டிருக்கிறது. உன்னுடைய நடிப்பைக் காட்டப் பல உணர்ச்சிகரமான கட்டங்கள் இருக்கின்றன. நீயே பார்த்துக் கொள். என்னுடைய இந்தப் படம் கட்டாயம் பரிசு பெறத்தான் போகிறது. நீ ஒப்புக் கொண்டால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன்.''

எத்தனையோ நடிகைகள் இருக்க, இன்னும் எத்தனையோ நடிகைகள் வாய்ப்புக்காக ஏங்கிக் கொண்டிருக்க, அவர் நந்தினியை இவ்வளவு தூரம் வற்புறுத்த வேண்டியதில்லைதான்.... இருந்தாலும், அவருடைய மனத்தில் நந்தினியே பொருத்தமானவள் என்ற எண்ணம் ஆழமாகப் பதிந்து விட்டது. ஆனால் வழியை மாற்றிக் கொள்ள நந்தினி இப்போதைக்குத் தயாராக இல்லை.

''என்னைத் தயவுசெய்து வற்புறுத்தாதீர்கள். நீங்களே யோசித்துப் பாருங்கள். இன்றைக்கு நான் உங்கள் படத்தில் அம்மாவாக நடிக்க ஒப்புக் கொண்டால், நாளை எனக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் அனைத்தும் அதே தன்மையில்தான் இருக்கும். கதாநாயகி என்ற ஸ்தானத்திலிருந்து நான் வழுவிச் செல்லத்தான் அவை உதவியாக இருக்கும். இன்னும் சில வருடங்களுக்காவது நான் அந்த இடத்தைப் பறி கொடுக்காமல் இருக்க விரும்புகிறேன்......''

மனோதத்துவ ரீதியிலான அவளுடைய வாதம் பூர்ணசந்தரைத் திரும்பத் திரும்பத் தாக்கியது. தம் முயற்சியில் அவர் தோற்று விட்டார் என்பதை முகம் காட்டியது.

நந்தினி அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''இன்று இந்த நல்ல நிலைமைக்கு நான் வந்துள்ளதற்கு நீங்கள்தான் காரணம். இருந்தாலும், உங்கள் விருப்பத்துக்கு என்னால் இணங்க முடியவில்லை என்பதற்காகத் தயவு செய்து மன்னித்து விடுங்கள்.....''

''பரவாயில்லை, நந்தினி. இதற்காகவா இப்படிக் கலங்குகிறாய்? நீ அந்த வேடத்தில் நடித்தால் சிறப்பாக இருக்கும் என்பதற்காகத்தான் சொன்னேன். நடித்துத்தான் ஆக வேண்டும் என்று கட்டாயப் படுத்த வில்லையே!.......'' பூர்ண சந்தர் சிரித்தார். அந்தச் சிரிப்பில் இழையோடிய வெறுமையை அவளும் உணரத்தான் செய்தாள்.

அன்று சொன்னதை அவர் நிறைவேற்றிக் காண்பித்து விட்டார்.

ஒரு புது முகத்தை நடிக்க வைத்து, படத்தைச் சிறப்பாக எடுத்ததோடு அல்லாமல், இன்று சிறந்த இயக்குநருக்கான பரிசையும் பெறவிருக்கிறார். அவரால் அறிமுகப்படுத்தப் பட்டு, தாயாக நடித்த மோகனா சிறந்தநடிகைக்கான பரிசை இன்று பூரிப்போடு பெற்றுக் கொள்வாள்.



பங்களாவுக்குள் கார் நுழையும் சத்தம் நந்தினியைச் சிந்தனையினின்றும் விடுவித்தது.

பூர்ணசந்தர் வந்து விட்டார்.

'திரைப்படத் திறனாய்வோர் மன்ற'த்தின் சார்பில் நடைபெறும் பாராட்டு விழாவைக் காண வந்திருந்தவர்கள் அந்த மண்டபம் முழுதும் நிரம்பி வழிந்தார்கள்.

பரிசு பெறத் தகுதிபெற்றவர்கள், கலை உலகைச் சேர்ந்த பல பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள், விசேஷ அழைப்பைப் பெற்றிருந்தவர்கள்! அனைவரையும் புன்னகை தவழும் முகத்தோடு கரம் கூப்பி வணங்கியவாறே முன் வரிசையில் வந்து அமர்ந்து கொண்டார் பூர்ணசந்தர். நந்தினி அவரைத் தொடர்ந்தாள்.

விழா தொடங்கிச் சிறிது நேரத்துக்கெல்லாம், அமைச்சர் பரிசுகளை வழங்கத் தொடங்கினார். சிறந்த நடிகைக்கான பரிசைப் பெற்றுக் கொள்ள மேடை ஏறி வந்த மோகனாவை இமைக்காது பார்த்தாள் நந்தினி.

செக்கச் சிவந்த வட்ட முகம், இளமை கொலுவிருக்கும் வாளிப்பான உடல்; ஒரு குழந்தையைப் போன்ற அமைதியான தோற்றம். 'இவளா அம்மாவாக நடித்தாள்!'

பூர்ணசந்தரின் கைகட்டால் அனைத்துமே மின்னத்தான் செய்கின்றன. வியப்பை முகத்தில் தேக்கி, அவரைத் திரும்பிப் பார்த்தாள் நந்தினி. வழக்கம் போல் அதே புன்னகையைத் தவழ விட்டார் அவர்.


விழா முடிந்தது.

மோகனா பூர்ணசந்தரின் அருகில் வந்து நின்றாள்.

''இந்த அம்மாவைத்தெரியுமோல்லியா உனக்கு?....''

அம்மா என்ற சொல்லைச் சற்று அழுத்தமாக உச்சரித்தவர், மோகனாவுக்கு நந்தினியைச் சுட்டிக் காண்பித்தார்.

''உங்கள் கேலி எனக்குப் புரிகிறது.....'' என்று கூறிச் சிரித்த நந்தினி, மோகனாவை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''உனக்கு என் வாழ்த்துக்கள்....'' என்று



கூறி அவளை அணைத்துக் கொண்டாள்.

'' சரி, புறப்படலாமே! மோகனா, நீயும் வா. உன்னை உன் வீட்டில் விட்டு விடுகிறேன்....'' என்று கூறிய பூர்ணசந்தர் அங்கிருந்த அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

'' என்னை வீட்டில் கொண்டு விடுவது மட்டுமல்ல; இன்று என் வீட்டில் உங்களுக்கு விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் மறுக்கக் கூடாது......''

''மருந்துக்குத் தேவை ஏற்படுத்தாத விருந்தாக இருந்தால் சரி. கட்டாயம் வருகிறேன்......'' சிரித்தவாறேகூறினார் பூர்ணசந்தர்.

சிறிய வீடுதான்; என்றாலும் கலைச் சிறப்போடு மிளிர்ந்தது. மோகனாவின் கைவண்ணம் அங்கங்கே பளிச்சிட்டது.

நந்தினி கேட்டாள்: ''இந்த வீட்டில் உன்னுடன் யார் இருக்கிறார்கள் ?''

''என் தந்தையும், கூடப் பிறந்த தம்பி ஒருவனும் தான்.......''

'' தாயார்?.....''


''அவர் என்னுடைய குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டாராம். நான் இன்று பட உலகில் பிரவேசித்ததே விபத்தினால்தான் என்று சொல்ல வேண்டும்.''

'' புரியவில்லையே ....! என்ன ஆயிற்று ?''

கதை கேட்கும் குழந்தையின் ஆர்வத்தைப் போல் இருந்தது, நந்தினியின் கேள்வி.

''இரண்டு வருடங்களுக்கு முன் ரசாயனப் பரிசோதனைச்சாலை ஒன்றில் பணியாற்றி வந்த என் தந்தையின் கண்ணில், பரிசோதனைக் குழாய் வெடித்து அமிலம் சிதறி, அதன் விளைவாக அவர் பார்வையையே இழந்து விட்டார். அதற்குப் பிறகு எங்கள் குடும்பமே ஆடிப் போயிற்று. வேலைக்காக எவ்வளவோ முயன்றேன். படிப்பு இல்லை; ஆகவே பலன் கிட்டவில்லை. யாரோ ஒருவர், என் அப்பாவுக்கு வேண்டியவராம், அவருடைய சிபாரிசில் டைரக்டர் சாரைப் போய்ப் பார்த்தேன். என் நல்ல காலம், அவர் எனக்கு ஆதரவு அளித்தார்......''

நாங்கள் காட்டும் அத்தாட்சி இதோ:



இதோ நீங்கள் காட்டும் அத்தாட்சி:



ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றுதான் பற்சிதைவையும் வாய் நாற்றத்தையும் தடுத்துநிறுத்திக் காட்டுகிறது

ஒப்பற்ற பல்சுத்திகரிப்பு மூலப் பொருளின் அடிப்படையிலே.

பற்சிதைவை நிறுத்துகிறது ஸிக்னலில் உள்ள ஃப்ளூரைடு

ஜெர்மனியிலே பல்டாக்டர்கள் கிண்கல், ஸ்டோலடே...400 குழந்தைகளைக் கொண்டு பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தனர்: பற்சிதைவை 33 சத விகிதம் குறைத்தது ஸிக்னல் ஃப்ளூரைடு (ஆதாரம்: DAS DEUTSCHE ZAHNARZTEBLATT, 1968, 9, 445 460). எப்படி நிரூபித்தது ஸிக்னலின் ஃப்ளூரைடு? பல்லெனாமலோடு அது ஒருங்கிணைகிறது; பற்கள் அரித்துப் போகவும், முடிவில் சிதைவுபடவும் முக்கிய காரணமான அமிலத் தாக்குதலை வலுவாக எதிர்த்து நிற்கிறது. ஸிக்னல் தேய்க்கும் சிறுவர்கள் பல்வலி என்றால் இன்னதென்றே அறியார். உங்கள் குடும்பத்தின் நலமும் இருவண்ணே நற்காப்பு: ஸிக்னல் சிகிச்சையே முற்காப்பு.

வாய்நாற்றத்தை நிறுத்துகிறது ஸிக்னல் உள்ள எஸ்-14

அமெரிக்காவிலே டாக்டர் ஹாவார்டு E. விண்டு ... மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தார்: துலக்கிய 15 நிமிடங்களில் வாய்நாற்றக் கிருமிகளிலே 95 சத விகிதத்தை ஒழித்துக் கட்டியது ஸிக்னலின் எஸ்-14. 10 மணி நேரம் ஆன பின்னரும் வாய்நாற்றம் 75 சத விகிதம் குறைந்திருந்தது (ஆதாரம்: U.S.A., காந்த வெஸ்டர்ன் யூனிவர்ஸிட்டி அறிக்கை 23 அக் 1968)


ஸிக்னலுக்கே உரிய சுத்திகரிப்பு மூலப் பொருளால் பற்களுக்கு மருத்துவப் பரிசுத்தம்

ஸிக்னலின் ஒப்பிலா மூலப் பொருளான அலுமினியம் ட்ரைஹைட்ரேட், பல் டாக்டரே துலக்கித் தந்தது போல் தூய்மை அளிக்கிறது. பல் எனாமலைப் பாதிக்காமலே (ஆதாரம்: ரிஸர்ச் ரிவியூ 7 நவ 1969, வெளியிட்டோர் U.R. லெபாரட்டரீஸ், நல்வொர்த், U.K.) ஒப்பில்லாத சுத்திகரிப்பு மூலப் பொருளிலே ஃப்ளூரைடு, எஸ்-14 – இம் மூன்றுகளும் இணையிடம்: ஸிக்னல் ஒன்றுதான். இன்னொரு பற்பசை இவ்வளவு செய்யாது.

அத்தாட்சி காட்டுவது

ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றே– கேளுங்களேன் பல் டாக்டரை.

லின்டாஸ்-SGF 63-140 TM





CMGC.16-203 TM

என்று கூறி நிறுத்தியவள், நன்றிப்பெருக்கோடு பூர்ணசந்தரைப் பார்த்தாள்.

அப்போது தடியை ஊன்றியவாறே உள்ளிருந்து வந்தார், மோகனுவின் தந்தை.

பார்வையைப் பறி கொடுத்துவிட்டதன் காரணமாக, நடையில் தடுமாற்றம் தெரிந்தது.

"என்னைக் கூப்பிடக் கூடாதா? என்ன வேண்டும் உங்களுக்கு?.....?" என்று பரிவோடு கேட்ட மோகனு, நந்தினியின் பக்கம் திரும்பி, "இவர்தான் என் தந்தை..." என்று அறிமுகப்படுத்தினுள்.

நந்தினி அவரையே கூர்ந்து நோக்கினுள்.

நெற்றிப் பொட்டில் 'விண்'ணென்று தெறித்தது.

சிறிது நேரம் சென்றதும், "தலைவலி தாங்க முடியவில்லை. சற்று ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். நான் இன்னொரு நாள் வருகிறேன்......" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

திடுமென்று அவள் கிளம்பியது ஏன் என்று மோகனுவுக்குப் புரியவில்லை; பூர்ணசந்தருக்கும் தெரியவில்லை.

இருவரும் எவ்வளவோ வற்புறுத்தியும், தலைவலியைக் காரணம் காட்டி நந்தினி சென்று விட்டாள்.

தன் பங்களாவை அடைந்த நந்தினி, நேராகக் கட்டிலில் சென்று படுத்தவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

கட்டிய கணவனையும், இரண்டு குழந்தைகளையும் விட்டுவிட்டு, திரைப் படத்தில் நடிக்க வேண்டும் என்ற வெறியோடு வீட்டைவிட்டு ஓடி வந்ததையும், அந்தக் குழந்தைகளில் ஒன்று இன்று புது முகமாகத் தன் எதிரில் வந்து நிற்பதையும், 'அம்மா செத்துவிட்டாள்' என்று சொல்லி, மகளின் நினைவினின்றும் தன்னை அகற்றிப் பழி தீர்த்துக்கொண்ட கணவனையும் எண்ணிப் பார்க்கப் பார்க்க, அவளால் பொங்கி வரும் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவள் அழுது கொண்டே யிருந்தாள்.

'அம்மாவாக நடிக்கமாட்டேன்' என்று சொன்னது இருக்கட்டும். அப்படி நடிப்பதற்குத்தான் எனக்கு என்ன தகுதி இருக்கிறது?'

தாய் ஸ்தானத்திலிருந்து என்றோ நழுவி வந்துவிட்டவளின் மனச்சாட்சி இன்று அவளைத் தண்டித்துக் கொண்டிருந்தது.

மறு நாள்.

நந்தினி பட உலகை விட்டு விலகவும், புதிதாக ஒப்பந்தமான படங்களுக்காக வாங்கிய முன் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடவும் முடிவு செய்த செய்தி அனைவருக்கும் புரியாத புதிராகத்தான் இருந்தது.

தான் செய்த தவற்றுக்குப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ள வேண்டுமல்லவா? அதற்கு முன்னேடியாகத்தான் அவள் அந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.



சரியான துணிச்சல்காரி ஜூலி. தான் ஆங்கிலோ-இந்தியக்குடும்பத்தைச் சேர்ந்தவளா யிருந்தும் ஓர் இந்து இளைஞனைக் காதலித்துக் கல்யாணமாகாமலே ஒரு குழந்தைக்குத் தாயானலும், ஹிந்துக்களின் கற்பு முறைக்கு ஏற்றம் தந்து அவனையே கணவனுக அடைகிருள்.

ஜயா பாதுரி ஏற்க வேண்டிய பாத்திரம். அவர் ஒருகுழந்தைக்குத் தாயாராக இருந்ததால் லக்ஷ்மிக்குக் கிடைத்தது அந்த பாக்கியம். மலையாளச் சட்டைக்காரியில் இதே பாத்திரத்தை ஏற்று நடித்திருந்த அநுபவத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டு ஜூலி பாத்திரத்துக்கு மெருகேற்றிவிட்டார்!

ஜூலிக்கு அன்னை மார்க்ரெட்டாக வரும் நாதிராவின் நிர்மாணமான நடிப்பு ஏ. ஒன். அவர் கணவன் மாரிஸாக வரும் ஓம் பிரகாஷின் நடிப்பு ஏ. கே. கதாநாயகன் சசியாக வரும் விக்ரமின் நடிப்பில் உயிரில்லை. மற்றவர்கள் ஏற்ற பாத்திரத்துக்கு இயல்பு கூட்டுகின்றனர்.

சேது மாதவனின் டைரக்ஷன் கதையை இயல்பாக நடத்திச் சென்று, இடையிடையே சிறந்த உத்திகளைக் கோடி காட்டிக்கொண்டு சிறந்த கலைப்படமாக்குகிறது. எடுத்துக்காட்டுக்கு மாரிஸின் சாவைக் குறிக்க ரயில்வே லைனில் ஓடிக்கொண் டிருந்த தண்ணீரில் காக்கைகள் குளித்தது ஒன்று போதும்!

மலையாளப் படமாக வெளிவந்து சக்கைப் போடு போட்ட சட்டைக்காரிதான் ஜூலி என்றுலும் ஹிந்தித் திரையுலகம் கண்டு கண்டு அலுத்துப் போன ஃபார்முலாக்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு வசூலை மட்டும் நினைக்காமல் கலையம்சம் நிறைந்த பிரச்னைப் படத்தை ஸ்ரீ நாகி ரெட்டி இளைஞர்களைக் கொண்டே தயாரித்துச் சிந்தனைக்கு விருந்து வைத்திருப்பதிலிருந்து அவருமே ஒரு துணிச்சல்காரர் என்பது விளங்கவில்லையா? திரையுலகில் புரட்சிக்கு இப்படி இரண்டொரு துணிச்சல்காரர்கள் தேவைதான்!

—ரா.வி.



இந்து நாகரிகம்

விவேகானந்தரின் 'ஞான தீப'த்தைப் படித்துக் கொண்டிருந்தபோது, எனக்கொரு விஷயம் கிடைத்தது.

பகவான் ராமகிருஷ்ணரைக் காண வரும் இளைஞன் ஒருவன் எப்போதும் இந்து சாஸ்திரங்களையும், வேதங்களையும் கண்டித்துப் பேசிக் கொண்டிருப்பானாம். ஒருநாள் அவன் திடீரென்று 'பகவத்கீதை'யைப் புகழ்ந்து பேச ஆரம்பித்தானாம். அவன் போனபிறகு பகவான் சிரித்துக் கொண்டே சொன்னாராம்:

''ஏதோ ஓர் ஐரோப்பியப் பண்டிதர் கீதையைப் புகழ்ந்திருப்பார் போலிருக்கிறது; அதுதான் இவனும் புகழ்கிறான்'' என்று.

இது நடந்தது எண்பது ஆண்டுகளுக்கு முன்பு.

முஸ்லிம்களும், ஆங்கிலேயர்களும் அடுத்தடுத்து வந்து வேரூன்றிய காலம் அது.

அப்போதைய இந்து தன் உணர்வு குறைந்தவனானான்.

பிற மதத்தினரது பழக்க வழக்கங்களால் கவரப்பட்டான்.

முஸ்லிம்களிடமிருந்து குருமாவையும், பிரியாணியையும் பெற்றுக் கொண்டான். வெள்ளைக்காரர்களிடமிருந்து விவஸ்தையற்ற —கட்டுப்பாடற்ற சுக போகத்தைக் கற்றுக் கொண்டான்.

தனக்கென்று ஒரு தனி நாகரிகம் இருப்பதை அவன் மறந்து போனான்.

நாளடைவில் அந்த மறதி வளர்ந்திருக்கிறதே தவிர, குறையவில்லை.

வேறு எந்த மதமும் வாழ்க்கை நாகரிகத்தைப் போதித்ததில்லை; இந்து மதம் ஒன்றே போதிக்கிறது.

மேற்கத்திய நாகரிகம் மத நாகரிகமல்ல; அது மதம் பிடித்த நாகரிகம்.

ஆனால் ஓர் இந்துவின் நாகரிகம் தெய்விக அடிப்படையில் அமைந்தது.

அது நமது குடும்பத்தைக் கோவிலாக்கிற்று; கணவனைத் தேவனாக்கிற்று; மனைவியைத் தேவியாக்கிற்று.

சுவாமி விவேகானந்தர் சொல்வது போல், ''ஓர் இந்துவுக்குச் சொந்த வீடு இருக்கக் கூடாது. அப்படி ஒரு வீடு இருக்குமாயின், அது அதிதிகளை வரவேற்று உபசரிப்பதற்காகவே.''

பிறரை வரவேற்றுக் கருணை காட்டுவதே கோயில். ஆகவே, இந்துவின் குடும்பம் ஒரு கோயில்.

அவன் தினமும் பூஜை செய்கிறான். காரணம், அன்றன்றைக்குத் தன்னைப் புனிதப் படுத்திக் கொள்கிறான்.

அவன் விபூதியைத் 'திருநீறு' என்கிறான்; நாமத்தை 'திருமண்' என்கிறான்; அவற்றைத் தினமும் இட்டுக் கொள்கிறான்.

காரணம், இந்த உடல் தீயில் வெந்து, 'நீறாக'ப் போகிறது. அல்லது மண்ணில் புதைந்து 'மண்ணாக'ப் போகிறது என்பதைத் தினமும் நினைத்துக் கொள்வதற்காகவே.

அப்படி நினைத்துக் கொள்வதன் மூலம் ''சாகப் போகிற இந்த உடல் தவறு செய்யக் கூடாது'' என்று சத்தியம் பூணுவதற்காகவே.

அவன் நீராடி உடம்பைக் கழுவுகிறான்; பூஜை செய்து உள்ளத்தைக் கழுவுகிறான்.

நான் குறிப்பிடுவது சரியான — நல்ல இந்துவை.

இந்த நேரத்தில் இந்துப் பெண்கள் மறந்து போய்விட்ட ஒரு நாகரிகத்தை நான் நினைவு படுத்தியாக வேண்டும்.

திருமணம் ஆகாத இந்துப் பெண் சாந்துப் பொட்டு வைக்க வேண்டும்; கை விரலில் மோதிரம் அணியக் கூடாது.

திருமணம் ஆன பெண் குங்குமம் இட்டுக் கொள்ள வேண்டும்; மோதிரம் அணிய வேண்டும்.

காரணம் மங்கல விழாக்களில் ஒரு பெண்ணைக் காணுகிறவர்கள், அவள் திருமணம் ஆனவள், அல்லது ஆகாதவள் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

யாரையும் விசாரிக்காமலே, சாந்துப் பொட்டு வைத்த ஓர் அழகான பெண்ணைப் பார்த்து, அவளைத் தன் மகனுக்கு மணம் பேசலாமா என்று பிள்ளையைப் பெற்றவர்கள் நினைப்பதற்கு அது ஒரு வாய்ப்பு.

கோவிலில் ஒரு பெண் கையெடுத்துக் கும்பிடும்போது விரலைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம், அவள் திருமணம் ஆனவளா இல்லையா என்று.

இதை நமது சமூகம் இப்போதும் பின்பற்றினால் என்ன?

நமது நாகரிகத்துக்கு ஒவ்வோர் அணுவிலும் உயர்ந்த நோக்கம் உண்டு. அது தர்மத்தில் முளைத்தெழுந்த கர்மம்—காரியம்.

இந்து நாகரிகம் குழந்தை பிறந்ததிலிருந்து சாகும்வரை அதற்கு வழி காட்டுகிறது.

எந்தெந்த ராகங்களை எந்தெந்த நேரங்களில் பாடவேண்டும் என்பதிலிருந்து எந்தெந்த ஆடைகளை எவ்வெப்போது அணிய வேண்டும் என்பது வரையில் சொல்லிக் கொடுக்கிறது.

சாப்பிடக் கூடியது எது, சாப்பிடக் கூடாதது எது என்பதையும் மதம் போதிக்கிறது.

ஒரு குடும்ப ஸ்திரீ காலையில் எழுந்து தலைக்குத் தண்ணீர் ஊற்றிக் கொள்கிறாள் என்றால், அவள் கணவனோடு உறவு கொண்டிருக்கிறாள்; ஆனால் கர்ப்பமடையவில்லை என்று பொருள். தலை குளிக்காமல் உடம்புக்கு மட்டும் தண்ணீர் ஊற்றினால் அவள் கர்ப்பமுற்றிருக்கிறாள் என்று பொருள்.

அதைத்தான் 'முழுகாமல் இருக்கிறாள்' என்பார்கள்.

வெறும் வார்த்தைகளைக் கொண்டே ஓர் இந்து அர்த்தமுள்ள ஆழமான பொருளைக் கண்டு பிடித்துவிட முடியும்.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



கண்களை ஒருபோதும் கசக்க வேண்டாம்...
கரிக்கும் கண்களுக்குத் தேவை
வைஸின்
கரித்தாலும், களைப்படைந்தாலும், கூசினாலும்
கண்களைக் கசக்காதீர்கள். சிவந்த கண்களை
நிமிட நேரத்தில் இதமுடன் தெளிவாக்கு-
வதற்கு வைஸின் இருக்கிறது.
வைஸின் உபயோகியுங்கள்.
கண்கண்ட பலனை உலகெங்கும்
உணர்த்தியுள்ளது வைஸின்.
அது வன்மை வாய்ந்தது.
எனினும் மென்மை கனிந்தது.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.
சில்லறை விலை ரூ. 2.97
(தல வரிகள் தனி.)
வைஸின்
களைத்த கண்களிலே கதிரொளி பாய்ச்சுவது வைஸின்
Pfizer
பைஸர் தயாரிப்பு: ''உலக நலனை நாடும் விஞ்ஞானம்''
Visine
eye drops
60 வினாடிப் பரிட்சை
Pfizer
லின்டாஸ்-PZ.VI.2-140 TM (R)


இதம் கனிந்த கோடை வாசமாம்,
இந்தியப் பெருமை பேசுமாம்,
தங்கத்தில் தகதக ஒளிவீசுமாம்,
குங்குமம் பூசுமாம் சிவந்த ரோசா,
சிங்காரச் சேலையாடி டெரிகோஸா
கட்டாவ்
டெரிகோஸா சேலைகள்
'டெரீன்'